பரமகுருதுணை.

ஆசிரியர் அமுதசாகரர் இயற்றிய

# காரிகை மூலமும்,

சுப்பிரமணியசுவாமிதொண்டராகிய

யாழ்ப்பாணத்து, உடுப்பிட்டி

## அ. சிவசம்புப்புலவரியற்றிய

## உரையும்.

யாழ்ப்பாணம்

அச்சுவேலி இயந்திரசாலையில்

பிரசுரிக்கப்பட்டது.

*Copyright Reserved.*

1893.

# முகவுரை.

முதனூலை முட்டறவுணர்தற்குக் கருவிநூல், எண்ணெனப் படுந் தருக்கமும் எழுத்தெனப்படும் இலக்கணமுமாம். இக்கருத்தமையத் திருவள்ளுவ நாயனாரும் "எண்ணென்பவேனையெழுத்தென்பவிவ்விரண்டுங், கண்ணென்பவாழுமுயிர்க்கு" எனவுரைத்தருளினார். இவற்றில் இலக்கணம் எழுத்துச்சொற்பொருள் யாப்பு அணியென ஐந்துபாகுபாட்டது. இதில் தேவரையும் மாந்தரையும் உடனுடன் மகிழ்விப்பதும், ஏனைநான்கையுந்தன்னுட்பொதிந்ததும், அவற்றியல்பையுந்தன்னியல்பையுந்தானே விரிக்குந்தரத்ததும், இருமைக்கும் உயிர்க்குறுதி பயக்குந் தர்மார்த்த முதலியவற்றின் வகையையுரைப்பதுமாய பெருமையால் யாப்பேதலைமைத்து. இதற்கு ஆசிரியர்பலர் விதியமைத்த முன்னையிலக்கணங்களொழியப் பின்னையவற்றிற் சிறந்ததும், முன்னிகழ்ந்து பின்வீழ்ந்தவையொழிய அன்றும்இன்றும் எங்கும் வழங்குஞ்செய்யுள்களையெல்லாந்தெரித்ததும், யாப்பருங்கலத்துக்கு அங்கமானதும், முன்னூல்வழித்தாய்ப் பின்னூலெவற்றினுஞ்சிறந்து சுவாமிநாததேசிகர் சங்கரநமச்சிவாயப்புலவர் சிவஞானமுனிவர் முதலிய மகாபண்டிதரனைவராலுங் கொள்ளப் பட்டுவிளங்கும் நன்னூல்முதலிய சிற்றதிகார நான்கனோடு ஐந்தாயாண்டும்,நிலவுவதுங் குமரகுருபரசுவாமிமுதலிய அநுபூதிமான்கள் தமதுசெய்யுட்கோவை முதலியவற்றுக்கு நல்லிலக்கணமாய்க்கொண்டதும், ஆசிரியர் அமுதசாகரர் விளக்கமாயுரைத்ததுங் காரிகையே. இத்தகைத்தான நூலுக்குச் சிறுவர் முதலிய யாவரும் எளிதினுணரும்பொருட்டு ஒருரையியற்றி அச்சிடுவிக்கவென யாழ்ப்பாணத்துச் செந்தமிழபிமானச்செல்வர் பலருபகரித்த திரவிய சகாயத்தைக்கொண்டு ஆசிரியர்குணசாகரருரையைத் திருத்தியும் விளக்கியுஞ் சூத்திரத்திலே திருத்தியுஞ் சிறக்குமாறுகாட்டியுஞ், சேர்க்கற்பாலனவற்றைச் சேர்த்தும்,முன்னூல் உரைகளிற் சிலவற்றைமறுத்துஞ், சொற்பொருள்வளத்த உதாரணங்களைச்சேர்த்தும்,ஒழுங்குறுத்திய உரையோடுகவிபாடுங் காதலுடையார்க்கு இன்றியமையாததாய மோனையியலையியற்றித்தந்து பிரசுரிப்பித்தோம்.

இது மாணாக்கருக்கும் ஆசிரியருக்குங் கற்கவுங் கற்பிக்கவும் எளிதாதலையும் பேரதிகாரப்பொருள்களைச் செறித்திருத்தலையும் பன்னூல்களினுஞ்சென்ற நுண்ணறிவுடைய சுத்தசித்தச்சீரியர் தேற்றுவர்.

"எப்பொருள் யார்யார்வாய்க்கேட்பினு மப்பொருண் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்றார் மேலோர்.

இவ்வுரையைச் சிறிதுதிரித்துத் தன்னுரையெனப் பிரசுரிப்பிப்போனைச் சோர்வில்வந்த அலியெனச்சான்றோர் சாற்றுவர்.

யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்களும் இங்கு நின்று தற்காலம் மலாக்காவில் வசிக்கும் மூவர்களும் இவ்வுரையியற்றி அச்சிடுவிக்கப்பொருளுபகரித்தது "ஊருணிநீர்நிறைந் தற்றேயுலகவாம், பேரறிவாளன்றிரு" என்றற்றொடக்கத்த ஆன்றோர்வாக்குகளை ஸ்திரப்படுத்திப், புண்ணியத்தையும் புகழையும்நாட்டி இன்னுந் தமிழபிமானிகளாய்ப் பலவிடத்திலும் வசிக்குஞ் சீரியமற்றையோரும் இத்திறமான அத்தியாவசியகமான நூல்களை அச்சிடுவிக்கப்பொருளுபகரிக்கக் கிளரும்படி ஊக்கியதனால் அவர்களனைவரையும்மறவாது அனவரதமும் பாராட்டித் துதிக்கின்றோம்.

அ. சிவசம்புப்புலவர்.

## தெய்வவணக்கமுந் தேசிகவணக்கமும்.

கந்தனை யாறு முகப்பெரு மானைக் கழல்வணங்கிப்
புந்தி தெருண்ட சரவண முத்துப் புதரரசை
வந்தருள் செய்தசம் பந்தப் புலவனை வாழ்த்தியுரை
மைந்தர்க ளாய்ந்திடக் காரிகைக் கொன்று வழங்குவனே.

## அவையடக்கம்.

மீன்முற்று மார்கலி யைக்குடங் கைக்கொண்ட மெய்த்தவன்போ
னான்முற்று மாய்ந்தவர் பேருரை பார்த்துணர் நுண்மதியோர்
மான்முற்று மென்னுரை பாரார்க ளோதண்மை வாய்ந்தகலைப்
பான்முற்று மாமதி பார்ப்பார் பிறையையும் பார்ப்பர்களே.

## உரைப்பயன்.

தாரா யுரையொன்று காரிகைக் கிங்கெனத் தந்துபொருள்
பேரார்நல் லோர்பலர் கேட்டிட வேற்கைப் பிரான்பத்தி
சீரார் திடச்சிவ சம்புப் புலவன் றெரித்தவுரை (மைச்
யாராயு மைந்த ரகத்திரு ளோட்டிடு மாதித்தனே.

இது உரையாசிரியரது மாணாக்கருளொருவராகிய
புலோலி. வ. குமாரசாமிப்பிள்ளை சொல்லியது.

# இவ்வுரையியற்றி அச்சிடுவிக்கப் பொருளுபகரித்தவர்கள்.

| பெயர். | ரூபா, | சதம். |
|---|---|---|
| கு. கதிரைவேற்பிள்ளை நீதிபதி ஊர்காவற்றுறை | ௧0 | 00 |
| ஆ. இரகுநாதமுதலியார் மணியம் வட்டுக்கோட். | ௫ | 00 |
| சி. நாகலிங்கபிள்ளை அத்துவக்காத்து சீதாரி | ௧0 | 00 |
| அ. கனகசபைப்பிள்ளை ௸ ,, | ௩ | 00 |
| வி. காசிப்பிள்ளை பிறக்றர் ,, | ௧0 | 00 |
| தா. தம்பு ௸ ,, | ௫ | 00 |
| தா. செல்லப்பபிள்ளை பீ.ஏ.டீ.எல். வண்ணை. | ௧0 | 00 |
| தி. சங்கரப்பிள்ளை பிறக்றர் ,, | ௨ | 00 |
| அ. சிவரத்தினபிள்ளை நொத்தாரிசு ,, | ௨ | ௫0 |
| வை. சி. சிவகுருநாதபிள்ளை வியாபாரி ,, | ௩ | ௫0 |
| த. சிவப்பிரகாசபிள்ளை டக்றர் ,, | ௨ | 00 |
| சி. இராமப்பிள்ளை வைத்தியர் ,, | ௨ | 00 |
| க. அருணசலபிள்ளை சப்கலக்றர் ,, | ௫ | 00 |
| இ. அருளம்பலபிள்ளை உபாத்தியாயர் ,, | ௨ | 00 |
| அ. சின்னப்பாபிள்ளை ஸ்ரோர்கீப்பர் ,, | ௫ | 00 |
| சி. துரையப்பாபிள்ளை கிளார்க் ,, | ௨ | 00 |
| மா. சபாபதிப்பிள்ளை சக்கிடுத்தார் நல்லூர் | ௧ | 00 |
| மு. அ. சபாபதிப்பிள்ளை கொக்குவில் | ௫ | 00 |
| சி. சம்பந்தபிள்ளை பிறக்றர் ,, | ௫ | 00 |
| சு. கனகரத்நபிள்ளை கப்பல்ஏசன்று மானிப்பாய் | ௨ | ௫0 |
| கு. உவில்யம் சின்னத்தம்பி பாலியநேசபத்.) ,, | ௨ | ௫0 |
| ம. காப்பென்றர் பிறக்றர் உடுவில் | ௨ | 00 |
| ஜே. எச். அப்பச்சிப்பிள்ளை வர்த்தகசங்கஏசன்று. | ௨ | 00 |
| மு. கந்தையாபிள்ளை கந்தரோடை | ௭ | ௫0 |
| ஆ. தாமோதரம்பிள்ளை கிளார்க் சுன்னாகம் | ௫ | 00 |
| க. தில்லையம்பலபிள்ளை முதலியார் ,, | ௫ | 00 |
| மு. முத்துக்குமாரபிள்ளை டக்றர் மல்லாகம் | ௨ | ௫0 |
| தி. கதிரித்தம்பிமுதலியார் மணியம் ,, | ௫ | 00 |
| இ. மயில்வாகனப்பிள்ளை பிறக்றர் ,, | ௫ | 00 |
| சு. மண்டலநாயகபிள்ளை நொத்தாரிசு தெல்லி | ௨ | ௫0 |
| சு. செல்லப்பாபிள்ளை உபாத்தியாயர் ,, | ௨ | ௫0 |
| சி. சின்னத்தம்பி (ஏரேமியா),, ,, | ௩ | 00 |
| கு. சின்னத்தம்பி உடையார் வீமன்காமம் | ௨ | 00 |
| க. சுப்பையர் நொத்தாரிசு தையிட்டி | ௨ | ௫0 |
| க. ஆறுமுகப்பிள்ளை உடையார் ,, | ௨ | ௫0 |

| பெயர் | | ரூபா, | சதம். |
|---|---|---|---|
| சு. அப்பாக்குருக்கள் | பலாலி | ௪ | 00 |
| அ. மயில்வாகனப்பிள்ளை | கோப்பாய் | ௧0 | 00 |
| கு. முத்துக்குமாரசூரியபிள்ளை | ,, | ௧0 | 00 |
| நா. சிவசுப்பிரமணியக் குருக்கள் | புத்தூர் | ௧ | ௫0 |
| சி. முத்துச்சாமிப்பிள்ளை | ,, | ௫ | 00 |
| மா. அருணாசலபிள்ளை றிஸிற்ருர் | ,, | ௫ | 00 |
| க. கனகசபைப்பிள்ளை விதானை | ,, | ௨ | 00 |
| வ. பூதத்தம்பி | ,, | ௧ | ௫0 |
| சி. மயில்வாகனப்பிள்ளை நொத்தாரிசு | ,, | ௨ | 00 |
| ஆ. கந்தப்பிள்ளை உடையார் | ,, | ௨ | ௫0 |
| ஆ. பூதத்தம்பி | ,, | ௫ | 00 |
| அ. கனகசபைப்பிள்ளை | ,, | ௫ | 00 |
| சி. தாமோதரம்பிள்ளை வைத்தியர் | ஆவரங்கால் | ௫ | 00 |
| மு. உலககுருநாதக்குருக்கள் | கெருடாவில் | ௨ | ௫0 |
| சி. முத்தையக்குருக்கள் | ,, | ௨ | ௫0 |
| சு. சண்முகக்குருக்கள் | வல்வை | ௨ | 00 |
| ம. வேலுப்பிள்ளை | ,, | ௩ | 00 |
| திரு. வேங்கடாசலபிள்ளை (பெரியதம்பியார்) | ,, | ௧0 | 00 |
| தி. செல்லையக்குருக்கள் | ,, | ௨ | 00 |
| விசு. இராமசுவாமிப்பிள்ளை | ,, | ௨ | 00 |
| க. ஆறுமுகப்பிள்ளை சப்கலக்றர் | ,, | ௨ | ௫0 |
| கு. முனியையா டக்றர் | ,, | ௨ | ௫0 |
| வி. வீரகத்திப்பிள்ளை | ,, | ௧ | ௨௫ |
| த. கனகரத்தினம் | ,, | ௧ | 00 |
| சு. சீனிவாசகபிள்ளை | ,, | ௧ | 00 |
| சு. இராமசுவாமிப்பிள்ளை | ,, | ௧ | 00 |
| அ. வேலுப்பிள்ளை | ,, | ௧ | 00 |
| வா. தம்பையாபிள்ளை | ,, | ௧ | 00 |
| அ. சபாபதிப்பிள்ளை | ,, | ௨ | ௫0 |
| நா. வேலுப்பிள்ளை | ,, | ௪ | 00 |
| நா,வெ இராமசுவாமிப்பிள்ளை | ,, | ௨ | ௫0 |
| வ. கந்தசாமிப்பிள்ளை | ,, | ௨ | ௫0 |
| நா.வே. துரைசாமிப்பிள்ளை | ,, | ௨ | ௫0 |
| ஆ. நாகமுத்துப்பிள்ளை | ,, | ௧ | 00 |
| ம. கதிரிப்பிள்ளை | ,, | ௨ | ௫0 |
| வே. நல்லதம்பி | ,, | ௨ | ௫0 |
| ஞா. ஐயாத்துரை விதானை | ,, | ௧ | 00 |
| திரு குழந்தைவேற்பிள்ளை | ,, | ௫ | 00 |

| பெயர் | | ரூபா, | சதம். |
|---|---|---|---|
| சி. செல்லப்பபிள்ளை | வல்வை | உ | ரு0 |
| கு. முருகேசபிள்ளை | ,, | உ | ரு0 |
| ஆ. இராமலிங்கபிள்ளை | ,, | க | உரு |
| சி. கதிர்காமத்தம்பி நொத்தாரிசு | அல்வாய் | க0 | 00 |
| நா. தம்பையாஜயர் (முருகேசஜயர்) | " | ரு | 00 |
| செ. இராமலிங்கக்குருக்கள் | " | ச | 00 |
| குலத்துங்க அரசர்கோன் முதலியார் (ஸ்ரோங்) | பருத்தித்துறை | ரு | 00 |
| அ. செல்லப்பாபிள்ளை சிரூப்பு | " | உ | 00 |
| வ. குமாரசுவாமிப்பிள்ளை | புலோலி | ரு | 00 |
| க. நமசிவாயபிள்ளை | " | க | ரு0 |
| நா. மயில்வாகனப்பிள்ளை பிறக்றர் | " | க0 | 00 |
| கா. வேலுப்பிள்ளை விதானை | " | உ | ரு0 |
| செ. சுவாமிநாதக்குருக்கள் | வரணி | ரு | 00 |
| அ. விசுவநாதக்குருக்கள் | " | ரு | 00 |
| சு. கந்தப்பக்குருக்கள் | " | ௩ | 00 |
| தி. கதிர்காமக்குருக்கள் | " | ௩ | 00 |
| க. தியாகராசக்குருக்கள் | கரணவாய் | உ | ரு0 |
| வே. சட்டநாதக்குருக்கள் | " | உ | 00 |
| க. சுப்பிரமணியக்குருக்கள் | " | ரு | 00 |
| ம. சந்திரசேகரப்பிள்ளை | " | ௩ | 00 |
| க. மயில்வாகனப்பிள்ளை உபாத். | நவிண்டில் | உ | ரு0 |
| இ. சதாசிவக்குருக்கள் | ,, | ரு | 00 |
| இ. சுப்பிரமணியக்குருக்கள் | ,, | உ | 00 |
| க. வேலுப்பிள்ளை | ,, | ரு | 00 |
| க. இராமலிங்கபிள்ளை | உடுப்பிட்டி | ரு | 00 |
| வை. சிவசிதம்பரப்பிள்ளை மணியம் | ,, | ரு | 00 |
| மு. கதிரவேற்பிள்ளை நொத்தாரிசு | ,, | ரு | 00 |
| வ. சின்னத்தம்பி நொத்தாரிசு | " | உ | ரு0 |
| அ. கனகசபைப்பிள்ளை | " | ரு | 00 |
| சி. வைத்தியலிங்கக்குருக்கள் | " | க | ரு0 |
| சு. தம்பையாபிள்ளை சார்வேயர் | மலாக்கா | ௩௩ | 00 |
| பே. சந்திரசேகரப்பிள்ளை சார்வேயர் | " | ௩ச | 00 |
| சி. சரவணமுத்துப்பிள்ளை ஓவசியர் | " | ௩௩ | 00 |

# செய்யுட்டெரிவு.


பக்கம்

அடியறிமண்டிலவாசிரியம் ... ... ... ... ... ...௪௦
அம்போதரங்கவொத்தாழிசைக்கலி ... ... ... ... ... ௪௪
ஆசிரியத்தாழிசை ... ... ... ... ... ... ... ௪௨
ஆசிரியத்துறை ... ... ... ... ... ... ... ...௪௨
ஆசிரியவிருத்தம் ... ... ... ... ... ... ... ௪௨
இணைக்குறளாசிரியம் ... ... ... ... ... ... ...௪௦
இன்னிசைச்சிந்தியல் வெண்பா ... ... ... ... ... ௩௪
இன்னிசை வெண்பா ... ... ... ... ... ... ...௩௨
கலித்தாழிசை ... ... ... ... ... ... ... ௫௮
கலித்துறை ... ... ... ... ... ... ... ...௫௮
கலிவிருத்தம் ... ... ... ... ... ... ... ௫௮
கலிவெண்பா ... ... ... ... ... ... ... ...௪௭
குறட்டாழிசை ... ... ... ... ... ... ... ௩௬
குறளடிவஞ்சி ... ... ... ... ... ... ... ...௨௬
குறள்வெண்பா ... ... ... ... ... ... ... ... ௩௧
சிந்தடிவஞ்சி ... ... ... ... ... ... ... ... ...௨௬
சிஃறாழிசைக்கொச்சகம் ... ... ... ... ... ... ...௫௧
தரவிணைக்கொச்சகம் ... ... ... ... ... ... ... ௫௧
தரவுக்கொச்சகம் ... ... ... ... ... ... ... ...௫௧
நிலைமண்டிலவாசிரியம்... ... ... ... ... ... ... ௪௦
நேரிசைச்சிந்தியல்வெண்பா ... ... ... ... ... ...௩௪
நேரிசையாசிரியம் ... ... ... ... ... ... ... ௪௦
நேரிசையொத்தாழிசைக்கலி ... ... ... ... ... ...௪௪
நேரிசைவெண்பா ... ... ... ... ... ... ... ௩௧
பஃறாழிசைக்கொச்சகம் ... ... ... ... ... ...௫௧
பஃறொடைவெண்பா ... ... ... ... ... ... ௩௨
மயங்கிசைக்கொச்சகம் ... ... ... ... ... ...௫௧
மருட்பா ... ... ... ... ... ... ... ... ௬௧
வஞ்சித்தாழிசை ... ... ... ... ... ... ...௫௯
வஞ்சித்துறை ... ... ... ... ... ... ... ௫௯
வஞ்சிவிருத்தம் ... ... ... ... ... ... ... ...௫௯
வண்ணகவொத்தாழிசைக்கலி ... ... ... ... ... ௪௭
வெண்கலி ... ... ... ... ... ... ... ... ...௪௭
வெண்செந்துறை ... ... ... ... ... ... ... ௩௬
வெண்டாழிசை ... ... ... ... ... ... ... ...௩௮
வெண்டுறை ... ... ... ... ... ... ... ... ௩௮
வெளிவிருத்தம் ... ... ... ... ... ... ... ...௩௮

பரம குருதுணை.

# காரிகை.

## மூலமும் உரையும்.

### பாயிரம்.

கந்த மடிவில் கடிமலர்ப் பிண்டிக்கண் ணார்நிழற்கீ
ழெந்த மடிக ளிணையடி யேத்தி யெழுத்தசைசீர்
பந்த மடிதொடை பாவினங் கூறுவன் பல்லவத்தின்
சந்த மடிய வடியான் மருட்டிய தாழ்குழலே.

இது தெய்வ வணக்கமுஞ் செயப்படுபொருளு முணர்த்திற்று.

**இதன்பொருள்.** பல்லவத்தின் சந்தம் மடிய அடியால் மருட்டிய தாழ்குழலே—தளிரினது நிறங்கெடத் தாளால் மயக்கிய மாதே,—கந்தம் மடிவு இல் கடிமலர்ப் பிண்டிக்கண் ஆர்நிழற்கீழ் எம் அடிகள் இணை அடி ஏத்தி—வாசங்குறைதலில்லாத புதிய பூவைக்கொண்ட அசோகிடத்துப் பொருந்திய நிழற்கண் வீற்றிருக்கும் நம்முடைய கடவுளது உபய பாதங்களையுந் துதித்து,—எழுத்து அசை சீர் பந்தம் அடி தொடை பா இனங் கூறுவன்—எழுத்தையும் அசையையுஞ் சீரையுந் தளையையும் அடியையுந் தொடையையும் பாவையும் பாவினத்தையும் (யான்) சொல்லுவேன் என்றவாறு.

மலர் மங்கலமொழி. அது சிந்தாமணியில் "மூவாமுதலாவுலகம்" என்றதுபோல அடையடுத்துப் பின்னின்றது. கீழ்ஏழனுருபு. தாழ்குழலே என்றது திருக்கோவையாரில் "அம்மாமுலை சுமந்து தேயுமருங்குற் பெரும்பணைத் தோளிச்சிறுநுதலே" என்றதிற் சிறுநுதலேபோல நின்றது. எழுத்துமுதலிய எட்டும் "எழுதப்படுதலி னெழுத்தேயவ்வெழுத், தசைத்திசை கோடலினசையே யசையிசைந்து, சீர்கொளநிற்றலிற் சீரேசீரிரண்டு, தட்டுநிற்றலிற்றளையே யத்தளை, யடுத்துநடத்தலி னடியேயடி யிரண்டு,

தொடுத்தன்முதலாயின் தொடையெனத்தொடை, பாவிகடத்த லிற் பாவேபாவொத், தினமாய்கடத்தலி னினமெனப்படுமே" என்பதனாற் காரணக்குறியாயின. இவை ஒன்றன்பின்னொன்று யமரபை நூலிற்காண்க. இந்நூற்குரியார் இலக்கியமும் எழுத்துஞ் சொல்லும் பொருளுங் கற்றவராதலின், மேல்வெளிப்படையான வற்றுக்குப் பொருள் கூறிலம். (க)

தேனார் கமழ்தொங்கன் மீனவன் கேட்பத்தெண்ணீரருவிக்
கானார் மலையத் தருந்தவன் சொன்னகன் னித்தமிழ்நூல்
யானு நடாத்துகின் றேனென் றெனக்கே நகைதருமா
லானு வறிவி னவர்கட்கென் னுங்கொலென் னுந்தரவே.

இது நூலினதுபெருமையும் ஆசிரியரது பெருமையும் அவை யடக்கமுமுணர்த்திற்று. பொருள் வெளிப்படை. (உ)

சுருக்கமில் கேள்வித் துகடீர் புலவர்முன் யான்மொழிந்த
பருப்பொரு டானும் விழுப்பொரு ளாம்பனி மால்வரைப்(மா
பொருப்பகஞ்சேர்ந்தபொல்லாக்கருங்காக்கையும்பொன்னிற
மிருக்குமென் றிவ்வா றுரைக்குமன் றேயிவ் விருநிலமே.

இதுவும் புலவரது சிறப்புணர்த்திய முகத்தான் அவையடக்க முணர்த்திற்று. பொருள்வெளிப்படை. (ங)

பாயிரம் முற்றிற்று.

## முதலாவது

# உறுப்பியல்.

குறினெடி லாவி குறுகிய மூவுயி ராய்தமெய்யே
மறுவறு மூவின மைதீ ருயிர்மெய் மதிமருட்டுஞ்
சிறுநுதற் பேரமர்க் கட்செய்ய வாயைய நுண்ணிடையா
யறிஞ ருரைத்த வளபு மசைக்குறுப் பாவனவே.

இது நிறுத்தமுறையான் அசைக்குறுப்பாகிய எழுத்துகளது பெயர் வேறுபாடுணர்த்திற்று. பொருள் வெளிப்படை. இதன்வகையை எழுத்ததிகாரத்தில் விளங்குக.

இனிக் குறினெடிலென ஆவியும் ஆவியெனக் குறினெடிலும் மூவினமெனமெய்யும் மெய்யெனமூவினமுமமையவுங், குறினெடிலாவி மெய்யே மூவினமென்றதும் ஓரெழுத்தாந் தன்மையல்லாத குற்றுகரத்தையும் ஒருமொழிப்படாது யகரம்வரக்குறளுத் திரி யிகரத்தையும் அமைத்ததுபோல மொழிமுதலிற் பயில்வதாயொன்றரை மாத்திரைத்தாய ஒளகாரக் குறுக்கத்தையமையாததும், எல்லாநூலுள்ளும் உயிராய்நிற்குங் குற்றுகரத்தையும் உயிராயும்வழங்கும் ஆய்தத்தையும் மெய்யென்றதும், இறிஞி மிறிஞி போலும் பொருளற்றமொழிகளையும் நிரப்பிக் குற்றியலுகர விகரங்களை முப்பத்தாறு முப்பத்தேழெனத் தொகைகொண்டதும், அளபெடைப் பெயர்க்காரணத்தையும் நோக்காது ஒருமாத்திரையாய குறிலும் இருமாத்திரையாய நெடிலுங் கூடியளபெழின், மூன்றுமாத்திரையாதல் சாலாதென்பதையும் நுனியாது ஒன்றோடொன்று பகைத்த பலவுதாரணங்களைக்காட்டிக் குறிலும் நெடிலுங் கூடியவழியதுயிரளபெடையென்றதும் முன்னோர்மதம்.

அசைக்குறுப்பாமெழுத்து "குறிலே நெடிலே குறிலிணை குறினெடி, லொற்றொடு வருதலொடு மெய்ப்படநாடி, நேருநிரையு மென்றிசிற்பெயரே" எனவும் "நெடில்குறிறனியாய் நின்றுமொற் றடுத்து, நடைபெறுநேரசை நால்வகையானே" எனவும் "குறி

லிணை குறினெடி றனித்துமொற்றடுத்து, நெறிமையி னுன்காய் வருநிரையசையே" எனவுங் கூறினர்போல மேற் குறிலே நெடிலேயெனக்கூறுவார் "குறினெடிலளபெடையுயிருறுப்புயிர்மெய், வலியமெலிய விடைமையோடாய்தம், இ உ ஐ யென மூன்றன் குறுக்கமோ, டப்பதின்மூன்று மசைக்குறுப்பாகும்" என்பது கொண்டுசேர்க்குறுப்பாவனவற்றையும்ஒற்றுமைபற்றியுடன் கூறினர். (௬)

குறிலே நெடிலே குறிலிணை யேனைக் குறினெடிலே
நெறியே வரினு நிரைந்தொற் றடுப்பினு நேர்நிரையென்
றறிவேய் புரையுமென் றோளி யுதாரண மாழிவெள்வேல்
வெறியே சுருநிறம் விண்டோய் விளாமென்று வேண்டுவரே.

இதுநிறுத்தமுறையான் அசையும் உதாகரணமுமுணர்த்திற்று.

இ—ள். வேய்புரையுமென்றோளி—குறிலே நெடிலே நெறியேவரினும் நிரைந்துஒற்றுஅடுப்பினும் நேர்(என்றுஅறி)—குற்றெழுத்துத்தனித்துவரினும் நெட்டெழுத்துத் தனித்துவரினும்இவையொற்றடுத்துவரினும் நேரசையென்றுஅறி.—உதாரணம்ஆழிவெள்வேல்(என்று வேண்டுவர்)—உதாரணம் ஆழியென்றும் வெள் என்றும்வேல்என்றும்வேண்டுவர்.—குறிலிணைகுறினெடிலே நெறியேவரினும் நிரைந்துஒற்றுஅடுப்பினும் நிரையென்றுஅறி—குறிலிணைந்துங் குறினெடிலிணைந்தும் இவையொற்றடுத்தும்வரினும் நிரையசையென்றுஅறி.-(உதாரணம்)வெறிசுருநிறம்விண்டோய் விளாம்என்று வேண்டுவர்—உதாகரணம் வெறியென்றுஞ் சுருவென்றும் நிறம்என்றும் விளாம் என்றும்வேண்டுவராசிரியர். எ—று. எனவே, ஆ நெடில்தனித்தும், ழி குறில் தனித்தும்,வெள் குறிலொற்றடுத்தும், வேல் நெடிலொற்றடுத்தும் வந்தநேரசை. வெறிகுறிலிணைந்தும்,சுருகுறினெடிலிணைந்தும், நிறம் குறிலிணைந்தொற்றடுத்தும், விளாம் குறினெடிலிணைந்தொற்றடுத்தும் வந்த நிரையசை. இதனைஒருசாரார் இயலசையென்பர். உயிர்மெய்க்குறிலும்நெடிலு மமையப்பொதுமையிற் குறிலேநெடிலேயென்றார். இவையே அசையென்பதாருமறியக்கிடத்தலானும் மேலசையெனக் கூறலானும் நேர்நிரையெனவாளாகூறினர்.

இனிஒற்றிடையில்நின்றுவிலக்காதேற் குறில்குறிலோடும் நெடிலோடுங்கூடி நிரையாமென்றும் நெடிலும்விட்டிசைத்தகுறிலுமே நேரென்றும்பட்டு இலக்கியமெல்லாஞ்சிதைதலோடு அதனைமுதலெழுத்தாகவும் அசைக்குறுப்பாகவும் நேர்நான்கு நிரைநான்காகவும் ஆசிரியரெல்லாங்கொண்டது நின்றுபயனின்மையிற்றங்கும்.

“இருவகையுகரமோ டியைந்தவைவரினே, நேர்பு நிரைபுமாகுமென்ப” என ஆசிரியர்தொல்காப்பியனார் “நேருநிரையுமென்றிசிற்பெயரே” எனமுடித்ததன்பின் அவையெனச்சுட்டியோருசுரமாய் முடித்தலானும் தமதுமதமாய்க்கூறாமையானும் ஆண்டையுதாகரணங்க ளிடர்ப்படாச்சிருட்டங்கலானுந் தங்காவழியிலக்கணச்சிதைவு கிளர்தலானும் அவ்விதியைப்பின்னூலாராளாமையானும் அது இறந்ததுவிலக்கலாயமையும்.

குறில் முதலிடையில் தனித்தசையாகாமையை யொழிபியலிற்காண்க. மேற்கோள் மேற்காட்டப்பட்டது. (௬)

ஈரசை நாற்சீ ரகவற் குரியவெண் பாவினவா
நேரசை யாலிற்ற மூவசைச் சீர்நிரை யாலிறுப
வாரசை மென்முலை மாதே வகுத்தவஞ் சிக்குரிச்சீ
ரோரசை யேநின்றுஞ் சீராம் பொதுவொரு நாலசையே.

இது நிறுத்தமுறையா னசைகளாகிய சீர் வேறுபாடுணர்த்திற்று.

இ—ள். வாரசைமென்முலைமாதே—ஈரசை நாற்சீர் அகவற்கு உரிய(ஆம்)—இரண்டசையாகியநான்குசீர்ஆசிரியப்பாவுக்கு உரியவாகும். இது முதற்சீரெனவும்படும்.—நேரசையாலிற்றமூவசை (நாற்சீர்) வெண்பாவினவாம்—நேரசையால்முடிந்த மூவசையினவாகிய நான்குசீர் வெண்பாவுரிச்சீராம். இது இடைச்சீரெனவும் படும்.— நிரையாலிறுப (மூவசைநா)லுரிச்சீர்வஞ்சிக்கு வகுத்த (வாம்)—நிரையால்முடிந்த மூவசையின்வாகிய நாலுரிச்சீர்வஞ்சிப்பாவுக்கு வகுக்கப்பட்டவாம். இதுகடைச்சீரெனவும் படும்.—ஓரசையே நின்றுஞ்சீராம்—ஒரோவிடத்து நேரசையுஞ்சீராம் நிரையசையுஞ்சீராம். அவை அசைச்சீரெனப்படும்.—ஒருநால்

சைச்(சீர்) பொது(வாம்)—நாலசையினுணகியசீர் பொதுச்சீராம். எ—று.

பொதுச்சீரெல்லாவாசிரியர்க்கு முடன்பாடன்று. ஈரசைச் சீர்க்கும் ஓரசைச்சீர்க்கும் இடையிற்பெய்ததனுலும் இடைப்பட்ட வெண்பாவுரிச்சீரை நேரசையாலிற்றவெனக் கூறியதுபோல நிரையாலிறுபவென்றதனுலும் மேற்கடைகாயடையின் வெண்பாவிற் கென்றபடி அந்தங்கனியாய்வருப வஞ்சிக்குரிச்சீரென்றதனுலும் எல்லாச்சீர்க்கும் அசைகூறியதனுலும் முன்னின்ற மூவசைச்சீர் வஞ்சியோடும் புணரும். "ஈரசைகூடிய சீரியற்சீரவை, யீரிரண் டென்ப வியல்புணர்ந்தோரே, மூவசைச் சீருரிச் சீரிரு நான்கனு, ணேரிறு நான்கும் வெள்ளை யல்லன, பாவினுள்வஞ்சியின்பாற் பட்டனவே, நாலசையானு நடைபெறுமோரசைச், சீர்நிலை யெய்தலுஞ் சிலவிடத்துளவே" என்றூர்காக்கைபாடினியார். (௬)

தேமா புளிமா கருவிளங் கூவிளஞ் சீரகவற்
காமாங் கடைகா யடையின்வெண் பாவிற்கந் தங்கனியா
வாமாண் கலைபல்குன் மாதே வருபவஞ் சிக்குரிச்சீர்
நாமாண் புரைத்த வசைச்சீர்க் குதாரண நாண்மலரே.

இதுமுதல் நான்குசீர்க்கும் வாய்பாடுணர்த்திற்று.

இ—ள். வாமமாண்கலை அல்குல்மாதே—தேமா புளிமா கருவிளம் கூவிளம் அகவற்கு(உரிச்)சீ(ருதாரண)மாம்—நேர்நேர் தேமா. நிரைநேர் புளிமா. நிரைநிரை கருவிளம். நேர்நிரை கூவிளம் ஆகிய நான்கும் ஆசிரியப்பாவுக்கு உதாரணமாம்.—கடைகாய் அடையின் வெண்பாவிற்கு (உரிச்சீருதாரண)மாம்—அதிகரித்த தேமா முதலிய நான்கனது அந்தத்திற் காயென்பது சேர்ந்தால், தேமாங்காய் புளிமாங்காய் கருவிளங்காய் கூவிளங்காய் எனவெண்பாவுக்குஉரிச்சீருதாரணமாகும்.— அந்தங்கனியா வருபவஞ்சிக்கு உரிச்சீ(ருதாரணமாம்)—அத்தேமாமுதலிய நான்கனது ஈற்றிற் கனியாய்வருவனவாகிய தேமாங்கனி புளிமாங்கனி கருவிளங்கனி கூவிளங்கனியாகியநான்கும் வஞ்சியினது உரிச்சீர்க்குதாரணமாம்.—நாள் மலர் நாம் மாண்பு உரைத்த அசைச்சீர்க்கு உதா

ரண(மாம்)—நாள் என்பதும் மலர் என்பதும் அசைச்சீர்க்கு உதாரணமாகும். எ—று.

"கருவிளங்கூவிளந்தேமாபுளிமாவெனக்கலந்து, மருவியநான்கு முதற்சீர்களா மற்றவற்றினந்தத், துருவநற்காய் வரினுமிடைச் சீரொண் கனிவருமேற், செருவமர்வேற்கண்ணிணாய் கடைச்சீரெண்த்தேர்ந்தறியே" என்றார் வீரசோழியத்தார். தொல்காப்பியத்திற் கருவிளத்துக்குக் கணவிரியென்றுங் கூவிளத்துக்குப் பாதிரியென்றும் வழங்குப. (எ)

தண்ணிழ றண்பூ நறும்பூ நறுநிழ றந்துறழ்ந்தா
லெண்ணிரு நாலசைச் சீர்வந் தருகு மினியவற்றுட்
கண்ணிய பூவின காய்ச்சீ ரனைய கனியொடொக்கு
மொண்ணிழற் சீரசைச் சீரியற் சீரொக்கு மொண்டளைக்கே.

இதுமேலெஞ்சிநின்ற பொதுச்சீர்க்கு வாய்பாடும் அவற்றதெண்ணும் பொதுச்சீரும் அசைச்சீருஞ் செய்யுளிற் றளைவழங்கு முறையுமுணர்த்திற்று.

இ—ள் தண்ணிழல் தண்பூ நறும்பூ நறுநிழல் தந்துஉறழ்ந்தால் நாலசை எண்ணிருசீர்வந்துஅருகும்—தண்ணிழல் முதலிய் நான்கனையும் அதிகரித்த தேமா முதலிய நான்கனோடு தந்து உறழ்ந்தால் நாலசையாகிய பதினாறுசீர் அருகிவரும். அவை தேமாந்தண்ணிழல் புளிமாந்தண்ணிழல் கருவிளந்தண்ணிழல் கூவிளந்தண்ணிழல் எனவும், தேமாந்தண்பூ புளிமாந்தண்பூ கருவிளந்தண்பூ கூவிளந்தண்பூ எ-ம், தேமாநறும்பூ புளிமாநறும்பூ கருவிளநறும்பூ கூவிளநறும்பூ எ-ம், தேமாநறுநிழல் புளிமாநறுநிழல் கருவிளநறுநிழல் கூவிளநறுநிழல் எ-ம் வரும்—இனி அவற்றுள் க்ண்ணியபூவின ஒள்தளைக்குக்காய்ச்சீரனைய—அவற்றுட் பூவென்னுஞ் சொல்லைக் கொண்ட நேரீற்றுச்சீரெட்டுந் தளைவழங்குமிடத்துக்காயிறுதியாகிய வெண்பாவுரிச்சீர்போலவருஞ்சீர்முதலசையோடொன்றுவது வெண்சீர் வெண்டளையாகவும், ஒன்றாதது கலித்த

ளையாகவும் வழங்கப்படும்.—ஒள்நிழற்சீர்கனியொடொக்கும்—நிழலென்னுஞ்சொல்லைக்கொண்ட நிரையீற்றுப் பொதுச்சீரெட்டுங் கனியென்னுஞ் சொல்லிறுதியாகிய வஞ்சியுரிச்சீர்போல, வருஞ்சீர்முதலசையோடொன்றின் ஒன்றியவஞ்சித்தளையாகவும், ஒன்றாவிடி னொன்றாவஞ்சித்தளையாகவும்வழங்கப்படும்.—அசைச்சீர் இயற்சீர்ஒக்கும்—ஓரசைச்சீர் ஆசிரியவுரிச்சீர்போல, வருஞ் சீர்முதலசையோடொன்றுவது ஆசிரியத்தளையாகவும், ஒன்றாதது இயற்சீர் வெண்டளையாகவும் வழங்கப்படும். எ—று.

அருகுமென்றதனு லிவைசிறுவரவினவென்க. கண்ணியபூவென்றதனுலிவை வெண்பாவினுள்வாரா. ஆசிரியத்தினுங் குற்றுகரம்வந்துழியன்றிவாரா. கலியினும் பெரும்பான்மையுங் குற்றுகரம் வந்துழியன்றிவாரா. வஞ்சியுட்குற்றுகரம் வாராமலும்வரும். அதிலிரண்டுசீரோரடியுள் அருகிக்கண்ணுற்று நிற்கவும் பெறும். அல்லனவற்றுட் பெரும்பான்மையு மோரடியுளொன்றன்றிவாரா. இரண்டுவரினுங் கண்ணுற்றுநில்லா. பாவினத்தினும்பயிலா. ஒண்ணிழற்சீரென்றதனுல் நிழற்சீரெட்டும் வஞ்சியுளல்லது வாரா. "நாலசையானடைபெற்றனவஞ்சியு, ளீரொன்றணைதலுமேனுழியொன்றுசென், றாதலுமந்தநிரையசைவந்தன, கூறியவஞ்சிக்குரியவாதலு, மாகுமென்பவறிந்திசினேரே" என்றூர் காக்கைபாடினியார். (அ)

குன்றக் குறவ னகவல்பொன் னரம்வெண் பாட்டுவஞ்சிக்
கொன்று முதாரணம் பூந்தா மரையென்ப வோரசைச்சீர்
நன்றறி வாரிற் கயவரும் பாலொடு நாலசைச்சீர்க்
கன்றவென் னூரள்ளற் பள்ளத்தினேடுங்கண்வானத்துமே.

இது ஐந்துசீரானும்வந்த இலக்கியங்கட்கு முதனினைப்புணர்த்திற்று.

இ—ள். குன்றக்குறவன் அகவல் (உதாரணமென்ப)—குன்றக்குறவன் காதன்மடமகள், வரையரமகளிர்புரையுஞ்சாயல,ளையளரும்பியமுலையள், செய்யவாயினண்மார்பினள்சுணங்கே. என்பது ஆசிரியப்பாவுக்குதாரணமென்றூர். இதனுள் குன்றக் தேமா. குற

வன் புளிமா. மடமகள் கருவிளம். சாயலன் கூவிளம் என் நான்கு வாய்பாடும்வந்தன.

பொன்னாரம் வெண்பாட்டு (உதாரணமென்ப)—பொன்னார மார்பிற்புனைகழற்காற் கிள்ளிபெய, முன்னேனென் றூழுலக்கை பற்றினேற், கன்னோ—மனனோடு வாய்யெல்லா மல்குநீர்க் கோழிப் புனனாடன்பேரே புகும். என்பது வெண்பாவுக்கு உதாரணமென்றார். இதனுள், பொன்னார தேமாங்காய். புனைகழற்காற் கருவிளங் காய். கிள்ளிபெயர் கூவிளங்காய். மனனோடு புளிமாங்காய். என வெண்பாவுரிச்சீர் நான்கும்வந்தன.

பூந்தாமரை வஞ்சிக்கு ஒன்றுமுதாரண(மென்ப)—பூந்தாமரைப் போதலமரத், தேம்புனலிடைமீன்றிரிதரும், வளவயலிடைக் களவயின்மகிழ், வினைக்கம்பலை மனைச்சிலம்பவு, மனைச்சிலம்பியமண முரசொலி, வயற்கம்பலைக்கயலார்ப்பவு, நாளு, மகிழமகிழ்தூங் கூரன், புகழ்தலானுப்பெருவண்மையனே. என்பது வஞ்சிப்பாவு க்குதாரணமென்றார். இதனுள், பூந்தாமரை தேமாங்கனி. போத லமர கூவிளங்கனி. வளவயலிடை கருவிளங்கனி. வினைக்கம் பலை புளிமாங்கனி. எனவஞ்சிச்சீர்நான்கும்வந்தன.

நன்றறிவாரிற் கயவரும்பாலொடு ஓரசைச்சீ (ருதாரணமெ ன்ப)—நன்றறிவாரிற்கயவர்திருவுடையர், நெஞ்சத்தவலமிலர். பா லொடுநீர்கலந்தற்றேபணி மொழிவாலெயிறூறியநீர். இவை ஓர சைச்சீர்க்குதாரணமென்றார். இவற்றில்இலர் நிரையசையும் நீர்நேர சையுமாம்.

அள்ளற்பள்ளத்திஞேடு அங்கண்வானத்தும் நாலசைச்சீர்க் (குதாரணமென்ப) — அள் ளற் பள் ளத் தகன்சோனாட்டு; வேங் கை வா யின் வியன்குன்றூரன் என்பதும், அங் கண் வா னத் தமரரசரும்,வெங் களி யா னை வேல்வேந்தரும்,வடி வார் கூந் தன் மங்கையருங், கடி மல ரேந் திக் கலந்திறைஞ்சச், சிங் கஞ் சுமந் த மணியணைமிசைக், கொங் கவி ரசோ கின் குளிர்நிழற்கீழ்ச், செழு நீர்ப் பவ ளத் திரள்காம்பின், முழு மதி புரை யு முக்குடைநீழல், வெங் கண் வினைப் பகை விளிவெய்தப், பொன் புனை நெடு மதில் புடைவளைப்ப, வனந் தச துட் டைய மவையெய்த, நனந் தலை யுல குட னவைநீங்க, வந் தின் மா ருத மருங்கசைப்ப, வந் தர

துந் துபி நின்றியம்ப, விலங் குஞ் சா மரை யெழுந்தலமர, நலங் கொண் மலர் மழை நனிசொரிதர, வினிதிருந், தருணெறி நடாத் தியவாதிதன், றிருவடி பரவுதுஞ்சித்திபெறற்பொருட்டே என் பதும், நாலசைச்சீர்க்குதாரணமென்றார். இவற்றுள் முன்னையதி லோரடியிலிரண்டு நாலசைச்சீரும், பின்னையதிலடிமுதலாறும் பதி ஞறு நாலசைச்சீரும்வந்தன.—அன்றவென்றார்—அக்காலத்தவெ ன்றார். எ—று. எனவே ஆசிரியர்நூலியற்றியகாலத்தும் இச்சீர்க ளுக்குடன்படாருளரென்பதுபெறுதும். அதுபற்றியன்றே அரு குமென்றதும் இக்காலத்து அருகலுமியையாது. ஒன்றுமென்பதை ஏனையவற்மேடு மொட்டுக. (க)

தண்சீர் தனதொன்றிற் றன்றளை யாந்தண வாதவஞ்சி
வண்சீர் விகற்பமும் வஞ்சிக் குரித்துவல் லோர்வகுத்த
வெண்சீர் விகற்பங் கலித்தளை யாய்விடும் வெண்டளையா
மொண்சீ ரகவ லுரிச்சீர் விகற்பமு மொண்ணுதலே.

இது நிறுத்தமுறையானே தளையாமாறுணர்த்திற்று.

இ—ள் ஒண்ணுதலே—தனதுதண்சீர்ஒன்றில் தன்தளைஆம்— தனது சீரொன்றினல் தன்றளையாகும்.-எனவே ஆசிரியவுரிச்சீரில் நேரீறும் நேர்முதலுமொன்றுவது நேரொன்றாசிரியத்தளை. நிரை யீறும்நிரைமுதலுமொன்றுவதுநிரையொன்றாசிரியத்தளை. வெண் பாவுரிச்சீரீறுதன்வருஞ்சீர் முதலசையோடொன்றுவது, வெண்சீர் வெண்டளை. வஞ்சியுரிச்சீரீறு தன்வருஞ்சீர் முதலசையோடொ ன்றுவது, ஒன்றியவஞ்சித்தளையாகச்சிறப்புப்பெயர் பெறினும் பொதுமையில்தன்றளையாம். தண்சீர்செம்மைப்பொருட்டு ஆத லிவைசிறந்தன. இதனல் தன்சீரீறுபிறிதாகிவருஞ்சீர்முதலசை யோடொன்றுவதூஉஞ் சிறப்பின்றேனுந்தன்றளையே. ஒன்றிலெ னவே இரண்டென்பதமையும்.

தணவாதவஞ்சிவண்சீர்விகற்பமும்வஞ்சிக்கு உரித்து (ஆம்)— வஞ்சியுரிச்சீரீறு தன்வருஞ்சீர் முதலசையோ டொன்ருதலூஉம்

வஞ்சித்தளையேயாகும். அதுஒன்றாதவஞ்சித்தளையெனச்சிறப்புப் பெயர்பெறும். தணவாத பிரியாத. அதுவஞ்சிச்சீர்விகற்பம் வழு வன்றென்பதை வலியுறுத்தும். வண்சீரென்றதினால் வஞ்சியுரிச் சீர்றுபிறிதாகிவருஞ்சீர் முதலசையோடொன்றாததூஉஞ்சிறப்பின் றேனும் ஒன்றாதவஞ்சித்தளையாகும்.

வல்லோர்வகுத்தவெண்சீர்விகற்பங்கலித்தளையாய்விடும் —வெ ண்சீர்று தன்வருஞ்சீர் முதலசையோடொன்றாதது கலித்தளை யாகும். விடும்துணிவுப்பொருட்டு. வல்லோர்வகுத்தவென்றதனால் வெண்பாவுரிச்சீர்றுபிறிதாகிவருஞ்சீர் முதலசையோடொன்றாத தூஉஞ்சிறப்பின்றேனுங்கலித்தளையே.

ஒண்சீரகவல் உரிச்சீர்விகற்பமும்வெண்டளையாம்—ஆசிரியவுரிச் சீர்றுதன்வருஞ்சீர்முதலசையோடொன்றாதது இயற்சீர்வெண்ட ளையாகும். ஒண்சீரென்றதனாலாசிரியவுரிச்சீர்றுபிறிதாகிவருஞ்சீர் முதலசையோடொன்றாததூஉஞ் சிறப்பின்றேனும் இயற்சீர் வெண்டளையே. எ—று. "இயற்சீரிரண்டுதலைப்பெயறம்முள், விகற்பமிலவாய்விரவிநடப்பி,னதற்பெயராசிரியத்தளையாகும்,வெ ண்சீரொன்றனுமியற்சீர்விகற்பமு,மென்றிரண்டென்பவெண்டளை க்கியல்பே, இயற்சீரிரண்டுதலைப்பெயறம்முள், விகற்பவகையது வெண்டளையாகும், உரிச்சீரதனுளுரைத்ததையன்றிக், கலக்குந் தளையெனக்கண்டிசினோரே, வெண்சீரிறுதிக்கிணையசைபின்வரக், கண்டனவெல்லாங்கலித்தளையாகும், தன்சீரிரண்டுதலைப்பெயறம் முளொத், தொன்றினுமொன்றாதொழியினும் வஞ்சியின், பந்த மெனப்பெயர் பகரப்படுமே." என்றார் காக்கைபாடினியார்.(௧0)

திருமழை யுள்ளா ரகவல் சிலைவிலங் காகும்வெள்ளை
மருளறு வஞ்சிமங் தாகிலம் வந்துமை தீர்கலியின்
றெரிவுறு பந்தகல் லாய்செல்வப் போர்க்கதக் கண்ணனென்ப
துரியது பாலொ டகவல் விகற்ப வுதாரணமே.

இது தளைகளான்வந்தஇலக்கியங்கட்கு முதனினைப்புணர்த்திற்று.

இ—ள். கல்லாய்—உள்ளார் திருமழை அகவற் (பந்தஉதாரணமாகும்)—உள்ளார்கொல்லோதோழிமுள்ளுடை, யலங்குகுலையீந்தின்சிலம்பிபொதிசெங்காய், துகில்பொதிபவளமேய்க்கு, மகில்படுகள்ளியங்காடிறந்தோரே என்பதும், திருமழைதலைஇயவிருணிறவிசும்பின், விண்ணதிரிமிழிசைகடுப்ப, பண்ணமைந்தவர்தேர்சென்றவாறே என்பதும், ஆசிரியத்தளைக்கு உதாகரணமாகும். இவற்றுள் உள்ளார் கொல்லோ நேரீறும் நேர்முதலுமாயொன்றினமையினேரொன்றாசிரியத்தளை. திருமழை தலைஇய நிரையீறும் நிரைமுதலுமாயொன்றினமையினிரையொன்றாசிரியத்தளை.

சிலைவிலங்கு வெள்ளைப் (பந்தஉதாரணமாகும்)—சிலைவிலங்கு நீள்புருவஞ் சென்றொசியநோக்கி, முலைவிலங்கிற் றென்றுமுனிவாண், மலைவிலங்கு, தார்மாலை மார்ப தனிமை பொறுக்குமோ, கார்மாலை கண்கூடுங் கால் என்பது வெண்டளைக்கு உதாகரணமாகும். இதனுள் சிலைவிலங்கு நீள்புருவம் இருசீரும் வெண்சீராயீறும் முதலுமொன்றினமையின்வெண்டளை. இம்மூன்றும் பொதுமையிற்றன்றளை. சென்றொசிய என்னும் வெண்சீரீறு, நோக்கி என்னப்பிறிதாய்வந்த சீர்முதலோடொன்றினமையிற் சிறவாவெண்டளை.

மந்தாநிலம்வந்துமருளறுவஞ்சிப் (பந்தஉதாரணமாகும்)—மந்தாநிலம் வந்தசைப்ப, வெண்சாமரைபுடைபெயர்தரச், செந்தாமரைநாண்மலர்மிசை, யெனவாங், கினிதிறைதுங்கியவிறைவனை, மனமொழி மெய்களின்வணங்குதுமகிழ்ந்தே, என்பது வஞ்சித்தளைக்கு உதாகரணமாகும். இதனுள் வெண்சாமரை புடைபெயர்தர இரண்டுந்தன்சீரா யொன்றினமையிலொன்றியவஞ்சித்தளை. பொதுமையிற்றன்றளை. செந்தாமரை நாண்மலர்மிசை இரண்டுந் தன்சீராயொன்றாமையிலொன்றாவஞ்சித்தளை. மந்தாநிலம் வந்தசைப்ப, முன்னையதுதன்சீராய்ப்பின்னையதுபிறிதுசீராயொன்றாமையிற்சிறவாவஞ்சித்தளை.

செல்வப்போர்க்கதக் கண்ணனென்பதுமைதீர்கலியின்தெரிவுறுபந்த(உதாரணமாகும்)—செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்

தெறிந்த சினவாழி, முல்லைத்தார் மற மன்னர் முடித்தலையை முருக்கிப்போ, யெல்லைநீர் வியன்கொண்மூவிடைநுழையு மதிய ம்போன், மல்லலோங் கெழில்யானை மருமம்பாய்ந்தொளித்ததே. என்பது கலித்தளைக்கு உதாகரணமாகும். இதனுள் செல்வப்போர்க் கதக்கண்ணன் நின்றசீரும்வருஞ்சீரும் வெண்சீராயொன்றுமையிற் கலித்தளை. மருமம்பாய்ந் தொளித்ததே முன்னையதுவெண்சீராய்ப்பின்னையது பிறிதுசீராயொன்றாமையிற் சிறவாக்கலித்தளை.

உரியது பாலொடு அகவற்(பந்த)விகற்ப உதாரண(மாகும்)— பாலொடு நீர்கலந் தற்றே பணிமொழி வாலெயிறூறியநீர் என்பது ஆசிரியத்தளைவிகற்பத்துக்குஉதாகரணமாகும். இதனுட் பாலொடு நீர்கலந் இரண்டும் ஆசிரியச்சீராய் நிரையீறும் நேர்முதலுமாண்மையானும் தற்றே பணிமொழி இரண்டும் ஆசிரியச்சீராய் நேரீறும் நிரைமுதலுமானமையானும், இயற்சீவெண்டளையாகும். இவைசிறப்பின. முனிவாண் மலைவிலங்கு. முன்னையது இயற்சீராய்ப்பின்னையது வெண்சீராயொன்றுமையிற்சிறவாஇயற்சீர் வெண்டளை.

இனி "ஓரசையே நின்றுஞ்சீராம்" என்றும் "அசைச்சீர்க்குத்தரணநாண்மல" ரென்றும் பொதுச்சீர்க்குத்தளைகூறியமரபே "அசைச்சீரியற் சீரொக்குமொண்டளைக்கு" என்றுஞ் சீர்க்கிலக்கியமூந்தளையுமமைய "காலசைச்சீர்க்கன்றவென்றாரள்ளற்பள்ளத்திநேடங்கண் வானத்தும்" எனக்கூறினாற்போல "ஓரசைச்சீர் நன்றறிவாரிற்கயவரும்பாலொடு" என்றுமுரைத்தமையானும் அசைச்சீருமியற்சீருமொன்றன்மையானும், அசைச்சீர்செய்யுணடுவிலென்றும் வராமையானும், இயற்சீர்த்தெற்றலிரண்டும் வெண்பாக்கண்ணவாகலானும் "உரிமையின்கண்ணின்மையா" லென்பது வெண்பாவன்மையானும் அதிலுஞ் "சிலைவிலங்கு" என்பதிலுமிரண்டுமமையாமையானுந் "தளைச்சூத்திரத்திலெடுத்த எழுதளையிலாறுதளைக்கும் இலக்கியமுணர்த்தியாண்டும் என்றும்பயிலும் இயற்சீர் வெண்டளைக்கு இலக்கியங்கூறாமை பெரியதோர் வழுவு

டைமையானும் "உரிமையின்கண்ணின்மையோரசைச்சீருக்குநார ண" மென்னும்பாடம் வேண்டாதாயிற்றென்க. (௧௧)

குறளிரு சீரடி சிந்துமுச் சீரடி நாலொருசீ
ரறைதரு காலே யளவொடு நேரடி யையொருசீர்
நிறைதரு பாத நெடிலடி யாநெடு மென்பணைத்தோட்
கறைகெழு வேற்கணல் லாய்மிக்க பாதங் கழிநெடிலே.

இதுநிறுத்தமுறையான் அடிப்பகுப்புணர்த்திற்று.

இ—ள். நெடுமென்பணைத்தோட்கறைகெழுவேற்கண்நல்லாய். இருசீரடிப்(பாதங்)குற(ளடிஆம்)—இருசீரான்வந்த அடிகுறளடியாம்.—முச்சீர்ப்(பாதஞ்)சிந்து அடி(ஆம்)—முச்சீரான் வந்தவடி சிந்தடியாம்.—நாலொருசீர்ப் (பாதம்)அளவொடுநேரடி (யாம்)—நாற்சீரான்வருமடிஅளவடியென்றும்நேரடியென்றுமாம். ஐயொருசீர்நிறைதருபாதம்நெடிலடியாம்—ஐந்துசீரான்வருமடி நெடிலடியாகும்.— மிக்கபாதங்கழி நெடி(லடியாம்) — ஐந்துசீரின்மிக்க சீரான்வருமடி கழிநெடிலடியாகும். எ—று. "நாலெழுத்தாதியாகவாறெழுத், தேறியநிலத்தே குறளடியென்ப, வேழெழுத்தென்பசிந்தடிக்களவே, யீரெழுத்தேற்றமவ்வழியான, பத்தெழுத்தென்ப நேரடிக்களவே, யொத்தநாலெழுத்தொற்றலங்கடையே. மூவைந்தெழுத்தே நெடிலடிக்களவே, யீரெழுத்துமிகுதலுமியல் பெனமொழிப, மூவாறெழுத்தேகழிநெடிற்களவே, யீரெழுத்து மிகுதலுமிவட்பெறுமென்ப" என்றார் தொல்காப்பியனார். மக்களுட்டீரக்குறியானைக் குறளனென்றும், அவனினெடியானைச் சிந்தனென்றும், ஒப்பமைந்தானை அளவிற்பட்டானென்றும், அவனினெடியானை நெடியானென்றும், அவனினெடியானைக் கழிநெடியானென்றுஞ்சொல்வர். ஆகலிற் சுருங்கிய எழுத்தான்வருவது குறளடி. அதினேறிய எழுத்தான்வருவது சிந்தடி. இடைநின்றது அளவடி. அதினெடியது நெடிலடி. அதினும் நெடியது

கழிநெடிலடி. சுருங்காமலும் ஏறாமலும் அளவிற்பட்டமையானும் பயில்வுடைமையானும்நாற்சீரடியதாதலானுங்கற்பனைகடந்த கண்ணுதற்றற்பரனும் பொற்புறுமயிற்கரத்தற்புதமூர்த்தியுஞ்சங்கப்புலவருங்கொண்டமையானும் முதற்பாமூன்றுமங்கிலேக்கட்பட்டமையானும்அளவென்றமையாதுநேரடியென்றமையானும் எல்லாவடியினுஞ்சிறந்ததளவடியே. ௬ "குறளடிசிந்தடியிருசீர்முச்சீ, ரளவடிநெடிலடி நாற்சீரைஞ்சீர், நிரனிறைவகையானிறுத்தனர்கொளலே, கழிநெடிலடியே கசடறக்கிளப்பி, னறுசீர்முதலாவையிரண்டீறா, வருவனபிறவும்வகுத்தனர்கொளலே" என்ப யாப்பருங்கலத்தார். (௧௨)

திரைத்த விருது குறள்சிந் தளவடி தேம்பழுத்து
விரிக்கு நெடிலடி வேனெடுங் கண்ணிவென் றூன்வினையி
னிரைக்குங் கணிகொண்ட மூவடி வோடிடங் கொங்குமற்றுங்
கரிக்கைக் கவான்மருப் போர்முலை மாதர் கழிநெடிலே.

இது அவ்வடிகளான்வந்த இலக்கியங்கட்கு முதனினைப்புணர்த்திற்று.

இ—ள், வேனெடுங்கண்ணி. கரிக்கைக்கவான்மருப்போர்முலைமாதர்—திரைத்தகுறளடி—திரைத்தசாலிகை, நிரைத்தபோனிரைந், திரைப்பதேன்களே, விரைக்கொண்மாலையாய். இதுஇருசீரான் வந்தமையிற்குறளடியாம். இருதுசிந்து(அடி)—இருதுவேற்றுமையின்மையாற்,சுருதிமேற்றுறக்கத்தினோ,டரிதுவேற்றுமையாகவே, கருதுவேற்றடக்கையினாய் என்பது முச்சீரான்வந்தமையிற்சிந்தடியாகும். தேம்பழுத்துஅளவடி —தேம்பழுத்தினியநீர்மூன்றுந்தீம்பலா, மேம்பழுத்தழிந்தனசுளையும்வேரியு, மாம்பழக்கனிகளுமதுத்தண்டீட்டமுந்,தாம்பழுத்துளசிலதவளமாடமே என்பது நாற்சீரான்வந்தமையின் அளவடியாகும். வென்றூன்வினையின்நெடிலடி—வென்றூன்வினையின்றூகையாயவிரிந்துதன்க, ணென்றூய்ப்பசு

ந்தவுணர்வினொழியாதுமுற்றுஞ், சென்றான்றிகழுஞ்சுடர்சூழொ
ளிமூர்த்தியாகி, நின்றானடிக்கீழ்ப்பணிந்தார்வினைநீங்கிநின்றார்என்
பது ஐஞ்சீரான்வந்தமையின் நெடிலடியாகும்.

இரைக்குங்கணிகொண்ட மூவடிவோடு இடங்கொங்குகழிநெடி
(லடி)—இரைக்குமஞ்சிறைப் பறவைகளெனப் பெயரின வண்டு
புடைசூழ, நுரைக்களென்னுமக் குழம்புகடிகமழ்ந்தெழ நுடங்கிய
விலையத்தாற், றிரைக்கரங்களிற்செழுமலைச்சந்தனத் திரள்களைக்
கரைமேல்வைத், தரைக்குமற்றிது குணகடற்றிரையொடு பொரு
தலதவியாதே என்பது அறுசீர்க் கழிநெடிலடி. கணிகொண்டல
ர்ந்தநறவேங்கையோடு கமழ்கின்ற காந்தளிதழா, லணிகொண்ட
லர்ந்தவனமாலைசூடியகிலாவிகுஞ்சிகமழ, மணிகுண்டலங்களிருபா
லும் வந்துவரையாகமீதுதிவளத், துணிகொண்டிலங்குசுடர்வேலி
னோடு வருவானிதென்கொறுணிபே என்பது எழுசீர்க் கழிநெடி
லடி. மூவடிவினாலிரண்டு சூழ்சுடருநாண முழுதுலகமூடிமுனை
வயிரநாறித், தூவடிவினாலிலங்கு வெண்குடையினீழற் சுடரோ
யுன்னடி போற்றிச்சொல்லுவதொன்றுண்டாற், சேவடிகடாமரை
யின் சேயிதழ்கடீண்டச் சிவந்தனவோசேவடியின் செங்கதிர்கள்
பாயப், பூவடிவுகொண்டனவோ பொங்கொளிகள்சூழ்ந்து புலங்
கொளாவாலெமக்கெம்புண்ணியர்தங்கோவே.—என்பது எண்சீர்க்
கழிநெடிலடி. இடங்கைவெஞ்சிலைவலங்கைவாளியினெதிர்ந்ததா
ரையையிலங்குமாழியின்விலங்கியோண், முடங்குவாலுளைமடங்கல்
மீமிசை முனிந்துசென்றுடன்முரண்டராசனைமுருக்கியோள், வட
ங்கொண்மென்முலை நுடங்குநுண்ணிடை மடந்தைசுந்தரி வளங்
கொள்பூமழை மகிழ்ந்தகோன், றடங்கொடாமரை யிடங்கொள்
சேவடி தலைக்குவைப்பவர் தமக்குவெந்துயர்தவிர்க்குமே.—என்
பது ஒன்பதின்சீர்க் கழிநெடிலடி. கொங்குதங்கு கோதையோதி
மாதரோடுகூடிநீடுமோடைநெற்றி, வெங்கண்யானைவேந்தர்போ
ந்துவேதகீதநாதவென்றுநின்றுதாழ, வங்கபுவ்வமாதியாயவாதி
நூலினீதியோதுமாதியாய, செங்கண்மாலை மாலைகாலை சென்று

சேர்வர்சோதிசேர்ந்த சித்திதானே. என்பது பதின்சீர்க்கழிநெடிலடி.

மற்றுங் கழிநெடி(லடி)—இவையன்றி வேறுங்கழிநெடிலடியாகும். எ—று. இதற்கு இலக்கியம்.—ஆழாழி கரையின்றி நிற்கவிலையோகொடிய வாலமமு தாகவிலையோ, வக்கடலின் மீதுவட வனிற்க வில்லையோ வந்தரத் தகிலகோடி, தாழாம ணிலைநிற்க வில்லையோ மேருவுந் தனுவாக வளையவிலையோ, சப்தமே கங்களும் வச்ரதர னாணையிற் சஞ்சரித் திடவில்லையோ, வாழாது வாழவே ராமனடி யாற்சிலையு மடமங்கை யாகவிலையோ, மணிமந்த்ர மாதியால் வேண்டுசித் திகளுலக மார்க்கத்தில் வைக்கவிலையோ, பாழான வென்மனங் குழையவொரு தந்திரம் பண்ணுவ துனக்கருமையோ, பார்க்குமிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற பரிபூரணானந்தமே. எ. ம்.

அரும்புன்னைத் தடங்காவே யவாவென் னைத் தடங்காவே, யம்போ ருகக்கண் பொருந்தேனே யழுநீ ருகக்கண் பொருந்தேனே, பரம்புங் கடலூர் நாவாயே பாவிக் கடலூர் நாவாயே, பார்மீதுயர மறியலையே படுமென் றுயர மறியலையே, கருங்கட்கயலே மாசுறவே கரைவேற் கயலே மாசுறவே, கண்டற் போது குவாலுகமே கங்குற் போது குவாலுகமே, குரும்பை தழைக்குங் கரும்பனையே குயில்வந் தழைக்குங் கரும்பனையே, குருகீர் ஙந்த மரங்கரையே கொணரீர் நந்த மரங்கரையே. எ. ம். வருவன பன்னிருசீர்க்கழிநெடிலடி. இவற்றுள் முன்னையதுஅடிதோறும் ஆறுஞ்சீரும் பன்னிரண்டாஞ்சீரும் மூவசையாய்வரும் பயில்வுணராது பதினான்குசீராக்குவாரும் ஏழாஞ்சீர் நிரைவல்லொற்றுறப்பாடுவாருஞ் சந்தநயநுனித்துணரார். இதிலேறச்சீர்பெய்து பொருளமைதிக்கேற்பப்பாடுவதும் பதினொருசீர் முதலியவாய்வருவதுஞ் சிறப்புடையவன்று. "இரண்டுமுதலாவெட்டீறாகத், திரண்டசீரானடிமுடிவுடைய, விறந்துவரினுமடிமுடிவுடைய, சிறந்தவல்ல செய்யுளுள்ளே" எனக்காக்கைபாடினியாரும் "குறளொருபந்தமிருதளைசிந்தா, முத்தளையளவடி நாற்றளைநெடிலடி, யைந்தளைமுதலாவெழுதளைகாறும், வந்தவும்பிறவுங்கழிநெடிலெனப" எனவைத்தியநாததேசிகருங்கூறியபடி அகலக்கவிகளெண்சீர் வரையறையில் நிற்றலே சிறப்பும்பயில்வுமென்க. (௧௧)

வெள்ளைக் கிரண்டடி வஞ்சிக்கு மூன்றடி மூன்றகவற்
கெள்ளப் படாக்கலிக் கீரிரண் டாகு மிழிபுரைப்போ
ருள்ளக் கருத்தி னளவே பெருமையொண் போதலைத்த
கள்ளக் கருநெடுங் கட்சுரி மென்குழற் காரிகையே.

இது நான்குபாவுக்கும் அடிவரையறையுணர்த்திற்று.

இ—ள் ஒண்போதலைத்த கள்ளக்கருநெடுங்கட்சுரிமென்குழற்காரிகையே.—

வெள்ளைக்குஇரண்டுஅடி (இழிபுஆகும்)—வெண்பாவுக்குஇரண்டடி சிறுமையாகும்.— வஞ்சிக்குமூன்றுஅடி (இழிபுஆகும்)—வஞ்சிப்பாவுக்கு மூன்றடிசிறுமையாகும்.—அகவற்குமூன்று (அடிஇழிபுஆகும்)—ஆசிரியப்பாவுக்கு மூன்றடிசிறுமையாகும்.—எள்ளப்படாக்கலிக்கு ஈரிரண்டு (அடி) இழிபுஆகும்—கலிப்பாவுக்கு நான்கடி சிறுமையாகும்.—உரைப்போர் உள்ளக்கருத்தினளவே பெருமை (யாகும்)—இந்நான்கு பாவுக்கும் பாடுவோரதுபொருண்முடிபுக்குறிப்பே பெருமையாகும். எ. று.

வெள்ளைக்கிரண்டாமகவற்குமூன்றுகலிக்கடி நான், கொள்ளப்படாவஞ்சிப்பாவுக்கு மூன்றுமிழிபுஎனப்பாக்களை முறையிற்கூறுத்து தலைதடுமாற்றந் தந்துபுணர்ந்துரைத்தலென்னுந் தந்திரவுத்தி கொண்டு. அன்றியும்மகேச்சுரர் முதலொருசாராசிரியர் வஞ்சிப்பா இரண்டடியானும் வரப்பெறுமென்றுரென்பதூஉம், ஆசிரியப்பா இரண்டடிச்சுரிதகமாய் வரப்பெறுமென்றுரென்பதூஉம், அறிவித்தற்கெனினுமாம். என்னை. சூ. வெண்பாவாசிரியங் கலியேவஞ்சியென, நுண்பாவுணர்ந்தோர் நுவலுங்காலை, யிரண்டுமூன்றுநான் குமிரண்டுந், திரண்டவடியின்சிறுமைக்கெல்லை என்றுமகேச்சுரர் இலக்கியமாய்ப் பூந்தண்சினைமலர் மல்கியபொழிற்பிண்டி, வேந்தன்புகழ்பரவாதவர் வினைவெல்லா, ரதரூ, வற்றிவனடியினைபாவிப், பெறுகுவர்யாவரும் பிறவியினெறிய என்னுஞ்செய்யுளைக் காட்டினர்.' ஒருதொடையீரடி வெண்பாச்சிறுமை; யிருதொடை மூன்றுமடியினிழிந்து, வருவனவாசிரியமில்லெனமொழிப, வஞ்சியுமப்பாவழக்கினவாகும். நான்காமடியினு மூன்றுந்தொடையினுந் தாழ்ந்துகலிப்பாதசழுவுதலிலவே. உரைப்போர் குறிப்பினை

நீக்கிப் பெருமை, வரைத்தித் துணைபென வைத்துரையில்லென், றுரைத்தனர்மாதோவுணர்ந்திசினோரே என்றார் காக்கைபாடினியார். எள்ளப்படாக் கலியென்றதனாற் றுள்ளலோசையின்வழுவாது, பயின்றுவருஞ்சிறப்பிற்றாய தரவுக் கொச்சகக்கலியென்று கொள்க. மேற்குறையாக்கலியென்பதுமிது. (௧௪)

அறத்தா றிதுவென வெள்ளைக் கிழிபக வற்கிழிபு (யின்
குறித்தாங் குரைப்பின் முதுக்குறைந் தாங்குறை யாக்கலி
திறத்தா றிதுசெல்வப் போர்ச்செங்கண் மேதிவஞ் சிச்சிறுமை
புறத்தாழ் கருமென் குழற்றிரு வேயன்ன பூங்கொடியே.

இது அடிவரையறையான்வந்த இலக்கியங்கட்கு முதனிலைப் புணர்த்திற்று.

இ—ள் புறந்தாழ்கருமென்குழற்றிருவேயன்னபூங்கொடியே.

அறத்தாறிதுவெனவெள்ளைக்குஇழிபு(ஆம்)—அறத்தாறிதுவெனவேண்டாசிவிகை பொறுத்தானோடூர்ந்தானிடை என்பதுவெண்பாச்சிறுமைக்கு உதாரணமாகும்.—குறித்தாங்குரைப்பின்முதுக்குறைந்து அகவற்குஇழிபுஆம்—முதுக்குறைந்தனளே முதுக்குறைந்தனளே, மலையனொள்வேற்கண்ணி, முலையும்வாராமுதுக்குறைந்தனளே என்பது ஆசிரியச்சிறுமைக்கு உதாரணமாகும்.

குறையாக்கலியின் திறத்தாறிதுசெல்வப்போ(ராம்) செல்வப்போர்க்கதக்கண்ணன் என்பதுகலிப்பாச்சிறுமைக்கு உதாரணமாகும்.—செங்கண்மேதிவஞ்சிச்சிறுமை (யாம்)—செங்கண்மேதிகரும்புழக்கி, யங்கணீலத்தலரருந்திப், பொழிற்காஞ்சிநிழற்றுயிலுஞ், செழுநீர்நல்வயற்கழனியூரன், புகழ்தலானாப்பெருவண்மையனே என்பது வஞ்சிச்சிறுமைக்கு உதாரணமாகும். எ-று. (௧௫)

எழுவாயெழுத்தொன்றின் மோனை யிறுதி யியைபிரண்டாம்
வழுவா வெழுத்தொன்றின் மாதே யெதுகை மறுதலைத்த
மொழியான் வரினு முரணடி தோறு முதன்மொழிக்க
ணழியா தளபெடுத் தொன்றுவ தாகு மளபெடையே.

இது நிறுத்தமுறையானே தொடையாமாறுணர்த்திற்று.

இ—ள். மாதே—(அடிதோறும்) எழுவாயெழுத்தொன்றில் மோனை (ஆகும்) — அடிதோறும்முதலெழுத்தொன்றினலடிமோனைத்தொடையாகும். —(அடிதோறும்) இறுதி (ஒன்றில்) இயைபு (ஆகும்)—அடிதோறும் ஈற்றிலெழுத்தாவது சொல்லாவதுஒன்றினலடியியைபுத்தொடையாகும்.—(அடிதோறும்) வழுவா இரண்டாம்எழுத்துஒன்றில் எதுகை(யாகும்) —அடிதோறுமிரண்டாமெழுத்தொன்றிவந்தாலடியெதுகைத்தொடையாகும். வழுவாஎன்றதனல் முதலெழுத்துமாத்திரையொக்கும். அது வீடு.என்பதற்கு. நாடு. மண் என்பதற்கு விண்போல்வது.—(அடிதோறும்)மறுதலைத்தமொழியான்வரினும் முர(ணுகும்)—அடிதோறும் மறுதலைத்தசொல்லான்வரினும்அடிமுரண்டொடையாகும். உம்மையாற்பொருளுமமையும்.—அடிதோறும் முதல்மொழிக்கண்அழியாது அளபெடுத்துஒன்றுவது அளபெடையாகும்—அடிதோறும் முதற்சொல்லின் அளபெடுத்தொன்றுவது அளபெடைத்தொடையாகும். எ-று. அழியாதென்றதனல் நான்குயிரளபெடையும் இரண்டொற்றளபெடையுந் தம்முளொன்றுவதுசிறப்பு. தொடைவிகற்பத்துள் மறுதலைப்படினுமிழுக்காது. "முதலெழுத்தொன்றின்மோனையெதுகை, முதலெழுத்தளவோடொத்ததுமுதலா வஃதொழித்தொன்றினுகுமென்ப" என்றார் பல்காயனர். "இறுவாயொப்பின் ஃதியைபெனமொழிப" என்றார் கையனர். "மொழியினும்பொருளினுமுரணுதன்முரணே" என்றார் தொல்காப்பியனர். "அளபெடைத்தொடைக்கேயளபெடையொன்றும்" என்றார் நத்தத்தனர். சிறுமைபெருமைசொன்முரண். இரும்புபொன்பொருண்முரண்.()

அந்த முதலாத் தொடுப்பதந் தாதி யடிமுழுதும்
வந்த மொழியே வருவ திரட்டை வரன்முறையான்
முந்திய மோனை முதலா முழுதுமொவ் வாதுவிட்டாற்
செந்தொடை நாமம் பெறுநறு மென்குழற் றேமொழியே.

இதுவுமது.

இ—ள். நறுமென்குழற்றேமொழியே—அந்தம்முதலாத்தொடுப்பதுஅந்தாதி(நாமம்பெறும்)—அடிதோறும்இறுதிக்கண்ணின்றஎழுத்தையும்அசையையுஞ்சீரையும் அடியையும் மற்றையடிக்கு ஆதி

யாகத்தொடுப்பது அந்தாதித்தொடையெனப் பெயர்பெறும். தொடர்புபற்றி அடிதோறும் என்னும்முதற்சூத்திரச்சொற்கொள்ளப்பட்டது.—அடிமுழுதும்வந்தமொழியே வருவது இரட்டை (நாமம்பெறும்)—ஓரடிமுழுதும் வந்தசொல்லே மீட்டும்வருவது இரட்டைத்தொடைஎன்னும் பெயர்பெறும்.—வரன்முறையால் முந்தியமோனைமுதலாமுழுதும் ஒவ்வாதுவிட்டாற் செந்தொடை நாமம்பெறும்.—அடிமோனைமுதலியதொடையுந் தொடைவிகற்பமுற்றும்ஒவ்வாதுவிட்டாற்செந்தொடையென்னும்பெயர்பெறும். எ—று. "அடியுஞ்சீருமசையுமெழுத்து முடிவுமுதலாச்செய்யுண் மொழியினஃ, தந்தாதித்தொடையென்றறைதல்வேண்டும்" என்றார் நத்தத்தனார். "ஒருசொல்லடிமுழுதும் வருவதிரட்டை" என்றார் மகேச்சுரர். "அசையினுஞ்சீரினுமிசையினுமெல்லா, மிசையாதாவது செந்தொடைதானே" என்றார் காக்கைபாடினியார். மோனைமுதலிய வரன்முறையான்முந்திய வென்றதற்கு "அன்பினைந்திணைக்களவெனப்படுவ, தந்தணரருமறைமன்றலெட்டனுள்" எ—ம். "மதிமலிபுரிசைமாடக்கூடற், பதிமிசைநிலவும்பாணிறவரிச்சிற, கன்னம்பயில்பொழிலாலவாயின்,மன்னியசிவன்யான்மொழிதருமாற்றம்,பருவக்கொண்மூப்படியெனப்பாவலர்க், குரிமையினுரிமையினுதவியொளிதிகழ், குருமாமதிபுரைகுலவியகுடைக்கீழ்ச், செருமாவுகைக்குஞ்சேரலன்காண்க, பண்பால் யாழ்பயில்பாணபத்திரன், றன்போலென்பாலன்பன்றன்பாற், காண்பதுகருதிப்போந்தனன், மாண்பொருள்கொடுத்துவரவிடுப்பதுவே" எ—ம். விழுந்ததுளியந்தரத்தேவேமென்றும்வீழி, னெழுந்துசுடர்சுடுமென்றேங்கிச், செழுந்தடங்கார், பெய்யாதகானகத்திற்பெய்வளையுஞ்சென்றன்ளே, பொய்யாமொழிபகைஞர்போல்" எ—ம். வருந்திருவாக்குகளேசான்றாதலறிக. "நாற்சீர்கொண்டதடியெனப்படுமே" எ—ம். "அடியுள்ளனவேதளையொடுதொடையே" எ—ம். ஆசிரியர்கூறுதலானும் இறைவருஞ்சங்கப்புலவர் முதலியபலரும் இவ்வடிக்கண்ணேதொடைகாட்டியதனானும் இத்தொடையேழும்மேல் வருந்தொடைவிகற்பமுப்பத்தைந்தும் அளவடிக்கண்ணவென்க. "மோனையெதுகைமுரணியைபளபெடை, பாதமிணையேபொழிப்பொடொரூஉத்தொடை, கூழைகதுவாய்மேலதுஉங்கீழதுஉஞ்

சேரியமுற்றொடுசிவணுமாரவையே" என்னுஞ்சூத்திரப்படிமோனை முதலியவைந்தையும் பாதமுதலியவெட்டோடும் உறழநாற்பதாம். அந்தமுதலாவென்னுஞ்சூத்திரத்தில் மூன்றையும் அவற்றொடுபுணர்ப்பநாற்பத்துமூன்றாம். இம்மூன்றும் முன்னின்றவைந்துந்தொடையெனவும்ஏனைமுப்பத்தைந்துந்தொடை விகற்பமெனவும்படும். ஒற்றுமையின்முற்றையுந் தொடையென்றும்வழங்குப. (கஎ)

மாவும்புண் மோனை யிணையின் னகைவடி யேரெதுகைக்
கேவின் முரணு மிருள்பரந் தீண்டள பாவளிய
வோவிலந் தாதி யுலகுட னொக்கு மேயிரட்டை
பாவருஞ் செந்தொடை பூத்தவென் றாகும் பணிமொழியே.

இது தொடைகளான்வந்தஇலக்கியங்கட்கு முதனினைப்புணர்த்திற்று.

இ—ள். பணிமொழியே—

மாவும்புண்மோனை (ஆம்)—மாவும் புள்ளும் வதிவயிற்படர மாநீர்விரிந்தபூவுங்கூம்ப, மாலைதொடுத்தகோதையுங்கமழ, மாலைவந்தவாடை, மாயோளின்னுயிர்ப்புறத்திறுத்தன்றே. என்பது அடிமோனைத்தொடையாகும்.

இன்னகைஇணையபு(ஆம்)—இன்னகைத்துவர்வாய்க்கிளவியுமணங்கே, நன்மாமேனிச்சுணங்குமாரணங்கே, யாடமைத்தோளிகூடலுமணங்கே, யரிமதர்மழைக்கணுமணங்கே, திருநுதற்பொறித்ததிலதமுமணங்கே, என்பதுசொல்லடியிணைபுத்தொடை. அவரோவாரார்கார்வந்தன்றே, கொடிக்குமுல்லையுங் கடிக்கரும்பின்றே என்பதுஎழுத்தடியிணைபுத்தொடையாம். இதுபயில்வுடைமையிற் சிறப்பிற்று.

வடியேர்எதுகைக்கு(ஆம்)—வடியேர்கணீர்மல்கவான்பொருட்கட்சென்றார், கடியார்கனங்குழாய்காணார்கொல்காட்டி, ணிடியின் முழக்கஞ்சியீர்ங்கவுள்வேழம், பிடியின்புறத்தசைத்தகை. என்பது அடியெதுகைத்தொடையாகும்.

ஏவின் இருள்பரந்துமுரணும்(ஆம்)—இருள்பரந்தன்னமாநீர்மருங்கி, னிலவுகுவித்தன்னவெண்மணலொருசிறை, யிரும்பினன்ன

கருங்கோட்டுப்புன்னை, பொன்னினன்னநுண்டாதிறைக்குஞ்சிறு குடிப்பரதவர்மடமகள், பெருமதர்மழைக்கணுமுடையவாலண ங்கே. என்பது அடிமுரண்டொடையாம்.

ஈண்டுஆவளியஅளபு(ஆம்)—ஆஅவளியவலவன்றன்பார்ப்பினோ டூ இரிரையுங்கொண்டீரளைப்பள்ளியுட், டூஉந்திரையலைப்பத்துஞ் சாதிறைவன்றேண், மேஎவலைப்பட்டநம்போனறுநுதா, லோஓ வுழக்குந்துயர். என்பது அடியளபெடைத்தொடையாகும்.

உலகுடன்ஒவிலந்தாதிஆம்—உலகுடன்விளக்குமொளிகிளரவிர் மதி, மதிநலனழிக்கும் வளங்கெழுமுக்குடை, முக்குடைநீழற்பொ ற்புடையாசன, மாசனத்திருந்ததிருந்தொளியறிவ, ஞசனத்திருந்த திருந்தொளியறிவனை, யறிவுசேருள்ளமோடருந்தவம்புரிந்து, துன் னியமாந்தரசென்ப, பன்னருஞ்சிறப்பின்விண்மிசையுலகே. என் பது அந்தாதித்தொடையாம்.

ஒக்குமேஇரட்டை(ஆம்)—ஒக்குமேயொக்குமேயொக்குமேயொ க்கும், விளக்கினுட்சிறுநெரியொக்குமேயொக்கும், குளக்கொட்டிப் பூவினிறம். என்பது குறையிரட்டைத்தொடையாம். மேல் அடி முழுதும்வந்தமொழியே வருவதிரட்டைஎனவிசெத்தலாற் போற்று மின்போற்றுமின்போற்றுமின்போற்றுமின், கூற்றங்குமைக்கவ ருமூன்னமரங்கா, ளேற்றுவந்தான்பொற்றுளிணை. எனநிறையிர ட்டையாய்வருதலே சிறப்பிற்று.

பூத்தபாவருஞ்செந்தொடையென்றுஆகும்—பூத்தவேங்கைவிய ன்சினையேறி, மயிலினமகவுநாட, னன்னுதற்கொடிச்சிமனத்தகத் தோனே என்பது செந்தொடையாம். எ—று. தொடையின்மூதற் குத்திரத்தில்வைத்தமரபே பிறழாதுவைத்தலானும், அதின்முன் னையவற்றுக்கும் இயையவீற்றிலடிதோறும் எனவைத்தாற்போல இங்கும்எனையவற்றையுந்தழுவத் தொடரீற்றிற்குறிப்பாயீண்டென வைத்தலானும், இரண்டாஞ்சூத்திரத்தில்வைத்த மூன்றையும் அம் முறையேவைத்தலானும், அடியென்பது கூறுதேயமைந்தது.(கஅ)

இருசீர் மிசையிணை யாகும் பொழிப்பிடை யிட்டதொரூஉ
விருசீ ரிடைவிட்ட தீறிலி கூழை முதலிறுவாய்
வருசீ ரயலில மேல்கீழ் வகுத்தமை தீர்கதுவாய்
வருசீர் முழுவது மொன்றின்முற் றாமென்ப மற்றவையே.

இது நிறுத்தமுறைப்பட்ட தொடைவிகற்பமுணர்த்திற்று.

இ—ள். மற்றவை—இணைமோனைமுதலிய முப்பத்தைந்துதொடைவிகற்பமும், இருசீர்மிசைஇணை ஆகும்—முதலிருசீர்க்கண்ணும் மோனைமுதலியவருதல் இணையாகும்.—இடையிட்டதுபொழிப்பு (ஆகும்)—முதலாஞ்சீரிலும் மூன்றாஞ்சீரிலும்வருதல் பொழிப்பு ஆகும்.-இருசீரிடையிட்டதுஒரூஉ(வாகும்)-முதலாஞ்சீரிலும்நான்காஞ்சீரிலும்வருதல் ஒரூஉவாகும்.—ஈறிலிகூழை(ஆகும்)—முதன்மூன்றுசீரிலும்வருதல் கூழையாகும்.—முதல்(வருசீர் அயல்)இறுவாய்வருசீரயல் இல்வகுத்தமை தீர்மேற்கதுவாய் கீழ்க்கதுவாய் (ஆகும்)—முதலாம்மூன்றாம்நான்காஞ்சீரில்வருதல் மேற்கதுவாயாகும். முதலாம்இரண்டாம்நான்காஞ்சீரில்வருதல் கீழ்க்கதுவாயாகும்.—வருசீர்முழுவதும் ஒன்றில்முற்று ஆம்என்ப—நான்குசீரிலும் வருதல்முற்றுஆகும்என்று புலவர்சொன்னார். எ—று. என்பவென்பதனைஎங்குங்கூட்டுக. மேல்இறுதியியைபு எனவிதித்தமையினதன்விகற்பமாகிய இணையியைபுத்தொடைமுதலியவேழும் ஈற்றுச்சீரே முதற்சீராகவழங்கப்படும். கையனார்முதலாசிரியர்கொள்கைபிறிதென்பார்மைதீர்கதுவாயென்றார். இதுவும் வருஞ்சூத்திரமும் உலகமலையாமையுள்ளிட்டவனப்பு வகையோடெழுந்ததையுய்த்துணர்க. “இருசீர்மிசைவரத்தொடுப்பதிணையே, முதலொடுமூன்றாஞ்சீர்த்தொடைபொழிப்பே, சீரிரண்டிடைதபத்தொடுப்பதொரூஉத்தொடை, மூவொருசீருமுதல்வரத்தொடுப்பது, கூழையென்மனார் குறியுணர்ந்தோரே. முதலயற்சீரொழித்தல்லனமூன்றின், மிசைவரத்தொடுப்பது மேற்கதுவாயே. ஈற்றயற்சீரொழித்தெல்லாந்தொடுப்பது,கீழ்க்கதுவாயின்கிழமையதாகும். சீர்தொறுந்தொடுப்பது முற்றெனப்படுமே. என்றார். (௧௧)

மோனை விகற்ப மணிமலர் மொய்த்துடனிமையிற்
கேனை யெதுகைக் கினம்பொன் னின்ன வினிமூரனுக்
கான விகற்பமுஞ் சீறடிப் பேர தளபெடையின்
மூன விகற்பமுந் தாட்டா மரையென்ப தாழ்குழலே.

இது மேலனவற்றுக்கு இலக்கியமுணர்த்திற்று.

இ—ள் தாழ்குழலே—அணிமலர்மோனைவிகற்பம்(ஆம்)—அணிமலரசோகின்றளிர்நலங்கவற்றி, யரிக்குரற்கிண்கிணி யரற்றுஞ்சீறடி, யம்பொற்கொடிஞ்சிநெடுந்தேரகற்றி, யகன்றவல்குலந்நுண்மருங்கு, லரும்பியகொங்கையவ்வளையமைத்தோ, ளவிர்மதியனையதிருநுதலரிவை, யயில்வேலனுக்கியம்பலைத்தமர்ந்த, கருங்கயனெடுங்கணுக்கமென், றிருந்தியசிந்தையைத் திறைகொண்டதுவே. என்பது இணைமோனை முதலியவேழுக்குமுதாகரணமாம்.—

மொய்த்துடன் இயைபிற்குஆம்—மொய்த்துடன்றவழுமுகிலே பொழிலே, மற்றதனயலேமுத்துறழ்மணலே, நிழலேயினியதனயலதுகடலே. மாதர்நகிலேவல்லேயியலே, வில்லேநுதலேவேற்கண்கயலே, பல்லேதளவம்பாலேசொல்லே, புயலேகுழலேமயிலேயியலே, யதனு லிவ்வயினிவ்வுருவியங்கலி, னெவ்வயினோருமிழப்பர்தந்நிறையே என்பதுஇணையியைபுமுதலியவேழுக்குமுதாகரணமாம். இதனுட்பொழிலேமுதற்சீராகவும் முகிலேயிரண்டாஞ்சீராகவுங்கொள்க. ஒழிந்தவுமிங்ஙனம்.

பொன்னின்னஎதுகைக்குஇன(மாம்)—பொன்னினன்னபொறிசுணங்கேந்திப், பன்னருங்கோங்கினன்னலங்கவற்றி, மின்னிவரொளிவடந்தாங்கிமன்னிய, நன்னிறமென்முலைமின்னிடைவருத்தி, யென்னையுமிடுக்கண்டுன்னுவித்தின்னடை, யன்னமென்பெடைபோலப்பன்மலர்க், கன்னியம்புன்னையின்னிழற்றுன்னிய, மயிலேசாயல்வாணுதல், லயில்வேலுண்கணெம்மறிவுதொலைத்தனவே.என்பதுஇணையெதுகைமுதலியவேழுக்குமுதாகரணமாம்.—

சீறடிப்பேரது இனிமூரனுக்கு ஆனவிகற்பமும்(ஆம்)—சீறடிப்பேரகலல்குலொல்குபு, சுருங்கியநுசுப்பிற் பெருகுவடந்தாங்கிக், குவிந்துசுணங்கரும்பியகொங்கைவிரிந்து, சிறியபெரியநெடுமலர்க்

கோதைதன், வெள்வளைத்தோளுஞ்சேயரிக்கருங்கணு, மிருக்கை யுநிலையுமேர்தெழிலியக்கமுந், துவர்வாய்த்தீஞ்சொலுமுவந்தேனை முனியா, தென்றுமின்னணமாகுமதி, பொன்றிகழ்நெடுவேற்போ ர்வல்லோயே. என்பதுஇணைமுரண்முதலியவேழுக்கு முதாகரண மாம்.—

தாட்டாமரைஅளபெடையின்தானவிகற்பமும்(ஆம்)என்ப—தா அட்டாஅமரைமலருழக்கிப், பூஉக்குவளைப்போஒதருந்திக், காஅய் ச்செந்நெற்கறித்துப்போஒய், மாஅத்தாஅண்மோஒட்டெருமை, தேஎம்புனலிடைச்சோஒர்பாஅன், மீஇனுஅர்ந்துகளுஞ்சீஇ, ரேஎ ராஅர்நீஇணீஇ, ரூரன்செய்தகேண்மை, யாய்வளைத்தோளிக்கல ரானுவே. என்பது இணையளபெடைத்தொடைமுதலிய வேழுக் கும் உதாகரணமாகுமென்றுபுலவர்சொன்னர். எ—று. என்பஎன் பதைஎங்குங்கூட்டுக. அடிமோனைமுதலியவும் இலக்கியமுங்கூறித் தொடைவிகற்பங்கூறுவாராய், இருசீர்மிசையிணையாகுமெனக்கூ றியுடன்மோனைவிகற்பமென்றமையினிணைமோனை முதலியவென விளங்கக்கிடந்தது. தானவிகற்பமென்றமையினேற்றளபெடையுங் கொள்க. இலக்கியம்வந்துழிக்காண்க. (உ௰)

முதலாவது உறுப்பியல் முற்றிற்று.

கந்தமுந் தேனுர்சுருக்கமுங் காதற் றூறில்குறிலே
சந்தமுந் தீரசை தேமாந்தண் குன்றந்தண் சீர்திருவுங்
கொந்தவிழ் கோதாய் குறடிரை வெள்ளைக் கறத்தெழுவா
யந்தமு மாவு மிருசீரு மோனையு மாமுறுப்பே.

இது உறுப்பியற்குத்திரமுதனினைப்புக்காரிகை.

## இரண்டாவது.

# செய்யுளியல்.

வெண்பா வகவல் கலிப்பா வளவடி வஞ்சியென்னு
மொண்பா வடிகுறள் சிந்தென் றுரைப்ப வொலிமுறையே

திண்பா மலிசெப்பல் சீர்சா லகவல்சென் றோங்குதுள்ள
னண்பா வமைந்த நலமிகு தூங்க னறுநுதலே.

இது நிறுத்தமுறையானே பாவிலக்கணமுணர்த்தத்தொடங்கி முதலவற்றின்அடியும் ஓசையுமுணர்த்திற்று.

இ—ள். நறுநுதலே—வெண்பா அகவல் கலிப்பா அளவடி(என்றுஉரைப்ப)—வெண்பாவும் ஆசிரியப்பாவுங் கலிப்பாவும் நாற்சீரடியினவென்று ஆசிரியர்சொன்னார்.—வஞ்சிஎன்னும்ஒண்பாகுறளடிசிந்து(அடி)யென்றுரைப்ப—வஞ்சிப்பாஇருசீரடியும் முச்சீரடியுமென்றுசொன்னார்.—ஒலிமுறையேதிண்பாமலிசெப்பல் சீர்சால்அகவல்சென்றுஓங்குதுள்ளல் நண்பாஅமைந்தநலமிகுதூங்கல் (என்றுஉரைப்ப)—வெண்பாவோசை செப்பலென்றும் ஆசிரியப்பாஓசைஅகவலென்றும் கலியோசைதுள்ளலென்றும் வஞ்சியோசை தூங்கலென்றுஞ்சொன்னார். எ—று. ஏனையபோலவாளாகூறாது வஞ்சிக்கு அடைகொடுத்தமையினதுயாண்டும் இவ்வடியினதென்றுதெளிக. "கலியொடுவெண்பாவகவல்கூறி, னளவடிதன்னானடக்குமற்றவையே. சிந்தடிகுறளடியென்றிரண்டடியான், வஞ்சிநடக்கும்வழக்கினையுடைத்தே" என்றார். நான்கிற்குந்தனித்தனி அடைபுணர்த்தினமையினொலிவேறுபாடுதோன்றிற்று.

அவற்றுட் செப்பலோசை ஏந்திசைச்செப்பலும் தூங்கிசைச்செப்பலும் ஒழுகிசைச்செப்பலுமென மூன்றுவகைப்படும். சூ. "வெண்சீர்வெண்டளையான்வரும்யாப்பை, யேந்திசைச்செப்பலென்மனார்புலவர்" "இயற்சீர்வெண்டளையான்வரும்யாப்பைத், தூங்கிசைச்செப்பலென்மனார்புலவர்" "வெண்சீரொன்றலுமியற்சீர்விகற்பமு, மொன்றியபாட்டேயொழுகிசைச்செப்பல்" என்றார். வரலாறு. யாதானுநாடாமாலூராமாலென்னொருவன், சாந்துணையுங்கல்லாதவாறு. இதுஏந்திசைச்செப்பல். பாலொடுநீர்கலந்தற்றே பணிமொழி, வாலெயிறூறியநீர். இதுதூங்கிசைச்செப்பல். கொல்லான்புலாலைமறுத்தானைக்கைகூப்பி, யெல்லாவுயிருந்தொழும். இது ஒழுகிசைச்செப்பல்.

அகவலோசை ஏந்திசையகவல் தூங்கிசையகவல் ஒழுகிசையகவல் எனமூன்றுவகைப்படும். சூ. "நேர்நேரியற்றளையான்வருமக

வலு, நிரைநிரையியற்றளையான் வருமகவலு, மாயிருதளையு மோத்தாகியவகவலு, மேந்தறூங்கலொழுகலென்றிவை, யாய்ந்தநிரனிறையாகுமென்ப.'' என்றார். வ. று. போதுசாந்தம்பொற்பவேந்தி, யாதிநாதற்சேர்வோர், சோதிவானந்துன்னுவோரே. இது ஏந்திசையகவல், அணிநிழலசோகமர்ந்தருணெறிநடாத்திய, மணிதிகழவிரொளிவரதனைப், பணிபவர்பவநெறிபரிசறுப்பவரே இது தூங்கலகவல். குன்றக்குறவன் சுணங்கே. இதுஒழுகிசையகவல்.

துள்ளலோசை ஏந்திசைத்துள்ளல் அகவற்றுள்ளல் பிரிந்திசைத்துள்ளலென மூன்றுவகைப்படும். சூ. ஏந்திசைத்துள்ளல்கலித்தளையியையின், வெண்டளைதன்றளையென்றிரண்டியையி, னொன்றியவகவற்றுள்ளலென்றோதுப தன்றளைபிறதளையென்றிவையனைத்தும், பொருந்திவரினே பிரிந்திசைத்துள்ளல்'' என்றார். வ. று. அஞ்சம்போனடையுமையா ளகங்களிப்பச் சுரர்பரவ, நெஞ்சஞ்சேர் தருமன்பினெறிமுனிவர் கரங்குவிப்ப, விஞ்சுஞ்சீர்த்தனித்தில்லை வியன்பொதுவின்டமாடுங், கஞ்சர்தாழ் திருவடிகள் கருதிமடநெஞ்சே. இது ஏந்திசைத்துள்ளல். நெட்டரவக் கச்சுடையாய் நீலநிறத் திருமாதின், வட்டமுலைத் தழும்புபட வந்தணையுந் தடமார்பா, கட்டியசெஞ் சடையாயுன் கண்ணருள்கொண் டெப்பொழுதும், பிட்டினைவிற் றுண்பேற்கும் பேரிடும்பை யுளதாமோ. இதுஅகவற்றுள்ளல். மன்றாடு மணியேயிம் மாதவன்றான் பார்ப்பனியைக், கொன்றானோ பிறர்பிறிதாற் கொன்றதோவிதுவறநூ, லொன்றானு மளப்பரிதாக் கிடந்ததா லுன்னருளா,லென்றாழ்வு கெடத்தேற்றா யென்றிரந்தானவ்வேலை. இது பிரிந்திசைத்துள்ளல்.

தூங்கலோசை ஏந்திசைத்தூங்கல் அகவற்றூங்கல் பிரிந்திசைத்தூங்கலென மூன்றுவகைப்படும். சூ. ஒன்றியவஞ்சித்தளையேவரினு, மொன்றாவஞ்சித்தளையேவரினு, மென்றிவையிரண்டும்பிறவுமயங்கினு, மேந்தலகவல்பிரிந்திசை தூங்கலென், றாய்ந்தநிரனிறையாகுமென்ப,என்றார். வ. று. வினைத்திண்பகைவிழச்செற்றவன், வனப்பங்கயமலர்த்தாளிணை, நினைத்தன்பொடுதொழுதேத்தினர், நாளு,மயலார்நாற்கதிமருவார், பெயராமேற்கதிபெறுகுவர்விரைந்தே.இதுஏந்திசைத்தூங்கல். வானோர்தொழவண்டாமரைத்;தேனூர்

மலர்மேல்வந்தரு, ளானவருள்கூறறிவனைக்,கானூர்மலர்கொண்டேத்திவணங்குநர்,பலர்புகழ்முத்திபெறுகுவர்விரைந்தே. இதுஅகவற்றூங்கல். மந்தாநிலம்—மகிழ்ந்தே.இதுபிரிந்திசைத்தூங்கல்.அகவிக்கூறலான் அகவலோசை. அடியிற்றூங்காதுசீர்தோறுந்தூங்குமோசைதூங்கலோசை. மற்றவைவெளி. "ஆசிரியநடைத்தேவஞ்சியேனைவெண்பாநடைத்தேகலியெனமொழிப" என்றதுமமையவெண்பாவகவல் கலிப்பாவஞ்சிப்பாவெனவைத்ததையுமுணர்க. (க)

வளம்பட வென்பது வெள்ளைக் ககவற் குதாரணஞ்செங்
களம்படக் கொன்று கலிக்கரி தாயகண் ணார்கொடிபோற்
றுளங்கிடை மாதே சுரமறி தொன்னலத் தின்புலம்பென்
றுளங்கொடு நாவல ரோதினர் வஞ்சிக் குதாரணமே.

இது மேலெடுத்தபாக்களுக்கிலக்கியமுணர்த்திற்று.

இ—ள். கண்ணார்கொடிபோற்றுளங்கிடைமாதே—

வளம்படஎன்பதுவெள்ளைக்கு (உதாரணமென்று)—வளம்படவேண்டாதார்யார்யாருமில்லை, யளந்தனபோகமவரவராற்றான், விளங்காய்திரட்டினாரில்லைக்களங்கனியைக், காரெனச்செய்தாருமில். என்பது வெண்பாவுக்குஉதாரணமென்றும்.

செங்களம்படக்கொன்று (என்பது) அகவற்குஉதாரண(மென்று)—செங்களம்படக்கொன்றவுணர்த்தேய்த்த செங்கோலம்பின் செங்கோட்டியானை, கழற்சேஇசேஎய்க்குன்றங், குருதிப்பூவின்குலைக்காந்தட்டே என்பதுஆசிரியப்பாவுக்குஉதாரணமென்றும்.

அரிதாய(என்பது)கலிக்கு(உதாரணமென்று)—அரிதாயவறனெய்தியருளியோர்க்களித்தலும், பெரிதாயபகைவென்று பேணாரைத்தெறுதலும், புரிவமர்காதலிற்புணர்ச்சியுந்தருமெனப், பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநங்காதலர், வருவர்கொல்வயங்கிழாய் வலிப்பல்யான்கேளினி. இதுதரவு. அடிதாங்குமளவின்றியழலன்னவெம்மையாற், கடியதேகனங்குழாய் காடென்றாரக்காட்டெட், டொடியடிக்கயந்தலை சலக்கியசின்னீரைப், பிடியூட்டிப்பின்னுண்ணுங் களிறெனவுமுரைத்தனரே, யின்பத்தினிகந்தொரீஇயி

லைதீந்தவுலவையாற், றுன்புறாஉந்தகையதேகாடென்றூரக்காட்டு, வன்புகொண்மடப்பெடை யசைஇயவருத்தத்தை. மென்சிறகரா லாற்றும் புறவெனவுமுரைத்தனரே, கன்மிசைவேய்வாடக் கனை கதிர்தெறுதலாற், றுன்னரூஉந்தகையதே காடென்றூரக்காட்டு, வின்னிழலின்மையால் வருந்தியமடப்பிணைக்குத், தன்னிழலைக் கொடுத்தளிக்குங்கலையெனவுமுரைத்தனரே. இவைமூன்றுந்தாழி சை. எனவாங்கு, தனிச்சொல். இனைநலமுடைய கானஞ்சென் றோர். புனைநலம்வாட்டுநரல்லர், மனைவயிற்பல்லியும்பாங்கொத் திசைத்தது, நல்லெழிலுண்கணு மாடுமாலிடனே. இதுசுரிதகம். என்பது கலிப்பாவுக்கு உதாரணமென்றும்.

சுறமறி (என்பது) தொன்னலத்தின்புலம்பு (என்பது) வஞ்சிக் கு உதாரணமென்று உளங்கொடுநாவலர் ஓதினர் — சுறமறிவனது றையெல்லா, மிறவீன்பனைவில்லெல்லா, மீன்றிரிவனகிடங்கெல் லாந், தேன்றூழ்வனபொழிலெல்லா, மெனவாங்கு, தண்பணைதழீ இயவிருக்கை, மண்கெழுநெடுமதின்மன்னனூரே, என்பதும். தொ ன்னலத்தின் புலம்பலைப்பத்தொடித்தோண்மேற், பன்னலத்தகல க்தொலையப்பரிவெய்தி, யென்னலத்தகையிதுவென்னவெழில்கா ட்டிச், சொன்னலத்தகைப்பொருள்கருத்தினிற்சிறந்தாங், கென ப்பெரிதுங்,கலங்கஞரெய்திவிடுப்பவுஞ், சிலம்பிடைச்செலவுஞ்சே ணிவந்தற்றே. என்பதும் வஞ்சிப்பாவுக்கு உதாரணமென்றும் புல வர்கூறினர். எ—று. கலிப்பாவுக்கு ஆசிரியர்காட்டிய உதாகரண த்தில் மாணுக்கனிடருறும். செல்வப்போர்க்கதக்கண்ணனென்ப தைக் காட்டிற்றெற்றெனத்தேறும்.

ஈண்டுக்காட்டிய வளம்படவேண்டாதார் என்னுஞ்செய்யுள்வீர சோழியத்தில் "என்றுமளவடியீற்றடியல்லனவீற்றடியு, நன்றும லர்காசுநாள்பிறப்பென்றிற்றசிந்தடியே" என்பதையும் "நேரிசை பேதிக்கிலின்னிசையே" என்பதையும், தாங்காட்டிய "ஒன்றும் பலவும் விகற்பாகிநான்கடியாய், நின்றுதனிச்சொற்றும் பெற்றும் பெறுதொழிந்துந், தன்னிசையநேரிசையின்வேறாய்வருமாகி,லின் னிசைவெண்பாவாமென்றூர்" என்னுஞ்செய்யுளையுமொத்திருப்ப வும் உரையாளர் வெண்பாப்போலியென்றுமாறுபடுப. (உ)

ஈரடி வெண்பாக் குறள்குறட் பாவிரண் டாயிடைக்கட்
சீரிய வான்றனிச் சொல்லடி மூய்ச்செப்ப லோசைகுன்று
தோரிரண் டாயு மொருவிகற் பாயும் வருவதுண்டே
னேரிசை யாகு நெறிசுரி பூங்குழ னேரிழையே.

இது மேற்றொகுத்தவெண்பாவை வகுத்துணர்த்துகின்றது.

இ—ள். நெறிசுரிபூங்குழல்நேரிழையே—

ஈரடிவெண்பாக்குற(ளாகும்)—இரண்டடியான்வரும்வெண்பா குறளெனப்படும். விகற்பங்கூறாமையினிரண்டு முடம்பாடாதல் பெற்றாம். சூ. "தொடையொன் றடியிரண்டாகிவருமேற், குறளின் பெயர்க்கொடைகொள்ளப்படுமே" என்றார் காக்கைபாடினியார். வ. று. உடையார்முன்னில்லார்போலேக்கற்றுங்கற்றார், கடைய ரேகல்லாதவர். என்பது ஒருவிகற்பக்குறள்வெண்பா. உருவுகண் டெள்ளாமைவேண்டுமுருள்பெருந்தேர்க், கச்சாணியன்னாருடை த்து, என்பது இருவிகற்பக்குறள்வெண்பா.

குறட்பாஇரண்டாய்இடைக்கட்சீரியவான்தனிச்சொல் அடிமூ ய்ச்செப்பலோசைகுன்றாது ஓர்இரண்டாயும் ஒருவிகற்பாயும்வரு வதுஉண்டேல் நேரிசைஆகும்—குறட்பாஇரண்டாயிடையில்முத ற்றொடைக்கேற்றதனிச்சொல்லாலடிநிரம்பிச்செப்பலோசை குன் றாமலிருவிகற்பமாயும் ஒருவிகற்பமாயும் வருவதுண்டானால் அது நேரிசைவெண்பாவாகும். எ. று. சூ. குறட்பாவிரண்டடிநால்வ கைத்தொடையா, முதற்பாதனிச்சொலினடிமூயிரண்டு, விகற்பின டப்பனநேரிசைவெண்பா, என்றார் அவிநயனார். "இரண்டாமடி யினதீற்றொருஉவெய்தி, மூரண்டவெதுகையதாயினுமாகா, திரண் டுதுணியாயிடைநனிபோழ்ந்து, நிரந்தடிநான்கினநேரிசைவெண் பா" என்றார் காக்கைபாடினியார். இருவிகற்பம்பெரும்பாலதாத லின்முற்கூறினார்.நேரிசையெனவேபெயர்க்காரணமும்விளங்கும். வ.று. கறையரவுக்கஞ்சாதஞ்சுறாஉந்திங்க, ளிறைவிநறுநுதலைக் கண்டு-பிறைமுடியோன், கைம்மானடமுவந்தகாற்புலிக்கஞ்சாத ஞ்சு, மம்மான்விழிமானைக்கண்டு. இது இருவிகற்ப நேரிசைவெ ண்பா. திருமுடியிற்கண்ணியுமாலையும்பாம்பு, திருமார்பிலாரமும் பாம்பு, பெருமான், திருவரையிற்கட்டியகச்சையும்பாம்பு, பொ

ருபுயத்திற் கங்கணமும்பாம்பு. இது ஒருவிகற்ப நேரிசைவெண்பா .சீரியவான்தனிச்சொல்அடிமூவென்றதனுல்முதற்குறட்பாவினொடுதனிச்சொல்இடைவேறுபட்டுவிட்டிசைப்பின் ஒற்றுமைப்படாதலோகங்களை யொற்றுமைப்படப்பற்ருசிட்டு விளக்கினுற்போல முதற்குறட்பாவினிறுதிக்கண் ஒன்றும்இரண்டும் அசைகூட்டியுச்சரிக்கப்பட்டு இருவிகற்பத்தானும் ஒருவிகற்பத்தானும் வருவனஆசிடைநேரிசைவெண்பாவென்க. வ. று. கரவோடுநின்ருர்கடிமனையிற்கையேற், றிரவோடுநிற்பித்ததெம்மை. யரவோடு, மோட்டாமைபூண்டமுதலவனை முன்பணிய, மாட்டாமைபூண்டமனம். எ. ம். மண்ணுந்தழலாறவானும்புகையாற, வெண்ணரியதாயரினைப்பாறப், பண்ணுமயன், கையாறவுமடியேன் காலாறவுங்கண்பார, ரையாதிருவையாறு. எ.ம் வருவன ஓரசையும்ஈரசையுங்கூடியிருவிகற்பமாய்வந்த ஆசிடைநேரிசைவெண்பா. இருந்தென்னையாண்டானிணையடியேசிந்தித். திருந்திரந்துகொண்ணெஞ்சேயெல்லாந், தருங்காண், பெருந்துறையின்மேயபெருங்கருணையாளன், மருந்துருவாயென்மனத்தேவந்து. எ. ம். பண்டாயநான்மறையும் பாலணுகாமாலயனுங், கண்டாருமில்லைக்கடையேனைத், தொண்டாகக், கொண்டருளுங்கோகழியெங்கோமாற்குநெஞ்சமே, யுண்டாமோகைம்மாறுரை. எ. ம். வருவன ஓரசையும் ஈரசையுங்கூடியொருவிகற்பமாய்வந்த ஆசிடைநேரிசைவெண்பா. பாம்புஅசையாகாமையும் மெய்யாகாமையுங்காண்க. மேற்செப்பலோசையென்றுசெப்பிவைத்துமீண்டுங்கூறியது வலியுறுத்தற்காணமையின் வழுவன்றென்க. (௩)

ஒன்றும் பலவும் விகற்பொடு நான்கடி யாய்த்தனிச்சொல்
லின்றி நடப்பினஃ தின்னிசை துன்னு மடிபலவாய்ச்
சென்று நிகழ்வ பஃறொடை யாஞ்சிறை வண்டினங்க
டுன்றுங் கருமென் குழற்றுடி யேரிடைத் தூமொழியே.

இதுவுமது.

இ—ள். சிறைவண்டினங்கள் துன்றுங்கருமென்குழற்றுடியேரிடைத்தூமொழியே—

ஒன்றும்பலவும்விகற்பொடுநான்கு அடியாய்த்தனிச்சொல்இன்றி நடப்பின் அஃதுஇன்னிசை(யாம்)—ஒருவிகற்பத்தானும் பலவிகற்பத்தானும் நான்குஅடியாய்த்தனிச்சொல்இன்றிநடந்தாலது இன்னிசைவெண்பாவாம். ரு. தனிச்சொற்றழுவலவாகிவிகற்பம், பலபலதோன்றினுமொன்றேவரினு, மிதற்பெயரின்னிசையென்றிசினோரே. ஒருவிகற்பாகித்தனிச்சொலின்றியு, மிருவிகற்பாகித்தனிச்சொலின்றியுந், தனிச்சொற்பெற்றுப்பலவிகற்பாகியுந், தனிச்சொலின்றிப்பலவிகற்பாகியு, மடியடிதோறுமொரூஉத்தொடையடைநவு, மெனவைந்தாகுமின்னிசைதானே" என்றார் பிறரும். வ. று. வாழிதிருமன்றங்கண்டமலர்க்கண்கள், வாழிபெருமான்புகழ்கேட்டவார்செவிகள், வாழியவனை வணங்குமுடிச்சென்னி, வாழியவன்சீர் பாடும்வாய். இதுதனிச்சொலின்றியொருவிகற்பத்தான்வந்தஇன்னிசைவெண்பா. இன்றுகொலன்று கொலென்று கொலென்னாது, பின்றையேநின்றதுகூற்றமென்றெண்ணி, யொருவுமின்தீயவைவயொல்லும்வகையான், மருவுமின்மாண்டாரறம். இதுதனிச்சொல்லின்றி யிருவிகற்பத்தான்வந்த இன்னிசைவெண்பா. "ஒன்றல்லவைபலதமிழ்நடை" யென்றமையின்இரண்டும் பலவெனப்படும். பலவிகற்பொடுளென்றமையின்இரண்டாமடியினிறுதிதனிச்சொற்பெற்றுமூன்றுவிகற்பத்தான்வருவனவும் மூன்றுமடியினிறுதிதனிச்சொற்பெற்றுஇரண்டுவிகற்பத்தான்வருவனவுந் தனிச்சொல்லின்றிப்பலவிகற்பமாகி அடிதோறும்ஒரூஉத்தொடைபெற்றுவருவனவும் பிறவாற்றானும்நேரிசைவெண்பாவிற் சிறிதுவேறுபட்டுநான்கடியான்வருவனவும் இன்னிசைவெண்பாவாம். வ. று. ஆடகச்செம்பொனணிமன்றிடங்கொண்ட, பாடகச்சீறடியாள்பாகத்தான், சூடகைக்கைக், கங்கையாள்கேள்வன்கழறொழூஉக்கைகூப்பி, நின்றிறைஞ்சச்சென்றிறைஞ்சுங்கூற்று. வளம்பட—செய்தாருமில். இன்னுமைவேண்டினிரவொழிகவிந்நிலத்து, மன்னுதல்வேண்டினிசைநடுக, தன்னொடு, செல்வதுவேண்டினறஞ்செய்கவெல்வது, வேண்டின்வெகுளிவிடல். மழையின்றிமாநிலத்தார்க்கில்லைமழையுந், தவமிலாரில்வழியில்லைத்தவமு, மரசிலாரில்வழியில்லையரசனு, மில்வாழ்வாரில்வழியில். இவையெல்லாமின்னிசைவெண்பா.

துன்னுமடிபல்வாய்ச் சென்றுநிகழ்வபஃறொடையாம்—நான்கடியின்மிக்கபலஅடிகளான்நடப்பனபஃறொடைவெண்பாக்களாம். நேரிசைஇன்னிசைகளுக்கு அடிநான்கென்றமையின் இது ஐந்தடிமுதலாநடக்குமென்பதுஆற்றலாற்கொள்க. வ.று. செக்கர்ச்சடையிற்பசுங்குழவிவெண்டிங்காண், முக்கணொருவற்குநும்மோடிருசுட்ரு, மொக்கவிழித்தலானுய்ந்தோமொருநீயே, யக்கணொருமூன்றுமாயின்மற்றுய்வுண்டே, மைக்கண்மடவாருயிர்க்கு. இதுஐந்தடியாயொருவிகற்பமாய்வந்தது. கருந்தாதுகொல்லுங்கருங்கைத்திண்கொல்லர், வருந்தாதியன்றதொருவல்விலங்குபூண்டு, திருந்தாதார்மூன்றிறொறுஞ்சென்றுசிலர்தூங்க, விருந்தேங்களிதூங்கியாமேமற்றம்ம, வருந்தாதலர்தில்லையம்பலத்திற்றூங்கும், பெருந்தேன்முகந்துண்ணப்பெற்று. இது ஆறடியாயொருவிகற்பமாய்வந்தது. வின்மதனைவென்றதலர்விழியேயொன்னார்தம், பொன்னெயிறீமடுத்ததின்னகையேபூமிசையோன், றூர்முடிகொய்ததுகூருகிரேயாருயிருண், கூற்றுயிருண்டதடித்தலமேயேற்றான், பரசும்பிணகமுஞ்சூலமுமென்னே, கரமலர்சேப்பக்கொளல். இது ஆறடியாய்ப் பலவிகற்பமாய்வந்தது. இன்னுங்காண்க. “நெடுவெண்பாட்டுமுந்நாலடித்தே” என்றார்தொல்காப்பியனார். “தொடையடியித்துணையென்னும்வழக்க, முடையதையின்றியுறுப்பழிவில்லா, நடையது பஃறொடைநாமங்கொளலே” என்றகாக்கைபாடினியார் சூத்திரமறுப்புமேல்வரும். (௪)

நேரிசை யின்னிசை போல நடந்தடி மூன்றின்வந்தா
னேரிசை யின்னிசைச் சிந்திய லாகு நிகரில்வெள்ளைக்
கோரசைச் சீரு மொளிசேர் பிறப்புமொண் காசுமிற்ற
சீருடைச் சிந்தடி யேமுடி வாமென்று தேறுகவே.

இது எஞ்சியவெண்பாவையும் வெண்பாவீற்றுமுடிபையுமுணர்த்திற்று.

இ—ள். நேரிசைபோலநடந்து அடிமூன்றின்வந்தால்நேரிசைச்சிந்தியலாகும்—நேரிசைவெண்பாப்போல் இரண்டாமடியிற்றனிச்சொற்பெற்று இருவிகற்பத்தானும் ஒருவிகற்பத்தானும் மூன்றடியான்வருவது நேரிசைச்சிந்தியல்வெண்பாவாகும்.—இன்னிசை

போலநடந்து அடிமூன்றின்வந்தாலின்னிசைச்சிந்தியலாகும்—இன்னிசைவெண்பாவேபோலத்தனிச்சொலின்றி ஒருவிகற்பத்தானும் பலவிகற்பத்தானும் மூன்றடியான்வருவது இன்னிசைச்சிந்தியல்வெண்பாவாகும். கு.நேரிசைச்சிந்து மின்னிசைச்சிந்துமென், றீரடிமுக்காலிருவகைப்படுமே" என்றூர். வ. று. கங்கைக்குக்கண்மலர்சாத்தக்கருங்குவளை,செங்குவளைபூத்தாள்செயலென்னை,யெங்கோமான், பங்குற்றுந்தீராப்பசப்பு. எ. ம். கம்பக்கரடக்களிற்றின்கபாயணிந்த, வம்பொற்புயத்தாற்கமைந்ததாலம்பை, முலையானைக்கோடணிந்தமார்பு. எ. ம். வருமிவைஒருவிகற்பமும்பலவிகற்பமுமாயநேரிசைச்சிந்தியல்வெண்பா. போற்றுமின்—பொற்றூளிணை எ. ம். உம்பர்பெருமாற்கொளிர்சடிலம்பொன்பூத்த, வம்பொற்புயம்வேட்டேந்தார்முலையும்பொன்பூத்த, பொன்பூத்தபூங்கொன்றைசூழ்ந்து. எ. ம். கருமிடற்றன்செஞ்சடையன் வெண்ணீற்றனென்னு, மழுவலத்தன்மானிடத்தனென்னு, மழுவலத்த, மன்றுடையான்றூர்வேட்டமான். எ. ம். வருமிவைஒருவிகற்பமாயும்பலவிகற்பமாயுந்தனிச்சொற்பெற்றுப் பலவிகற்பமுமாயஇன்னிசைச்சிந்தியல்வெண்பா.

நிகரில்வெள்ளைக்கு ஓரசைச்சீரும் ஒளிசேர்பிறப்பும் ஒண்காசும் இற்றசீருடைச்சிந்து அடியேமுடிவுஆம் என்றுதேறுக—எல்லாவெண்பாவுக்கும் ஓரசைச்சீரிரண்டானுங்காசுபிறப்புஎன்னும்வாய்பாட்டுக்குற்றியலுகரமீறுகியநேரீற்றியற்சீரானும் நிரையீற்றியற்சீரானும் இற்றமுச்சீரடியேயீற்றடியாவதென்றுதெளிக. எ. று. "செப்பலிசையனவெண்பாமற்றவை, யந்தடிசிந்தடியாகலுமவ்வடியந்தமசைச்சீராகவும்பெறுமே" என்பதுயாப்பருங்கலம். "குற்றியலுகரமுமுற்றியலுகரமும, பெற்றவாய்பாட்டானின்றிறுமென்ப"என்றூர்பிறரும். வ. று. தாடலைபோர்கூடியவைதாநிகழாவேற்றின்பக், கூடலைநீயேகமெனக்கொள். எ. ம். மண்ணுந்தழலாற—ஐயாதிருவையாறு. எ. ம். கற்றதனாலாயபயனென் கொல்வாலறிவ, னற்றூடொழாஅரெனின், எ. ம். அகரவுயிர்போலறிவாகியெங்குநிகரிலிறைநிற்குநிறைந்து. எ. ம். இருள்சேரிருவினையுஞ்சேராவிறைவன், பொருள்சேர்புகழ்புரிந்தார்மாட்டு. எ. ம். எப்பொருள்யார்யார்வாய்க்கேட்பினு மப்பொருண் மெய்ப்பொருள்காண்பத

றிவு. எ. ம். ஆனுலுமென்போன்மற்றூர்பெற்றூரம்பலத்துண், மாநாடகங்காணும்வாழ்வு. எ, ம் வரும்.

நிகரில்வெள்ளைக்குஎன்றதனுற் குறள்வெண்பாவினைஓரடிமுக்காலென்றுஞ்சிந்தியல்வெண்பாவினை ஈரடிமுக்காலென்றும் நேரிசைவெண்பாவினைமூவடிமுக்காலென்றும் இன்னிசைவெண்பாவினை இன்னிசைமூவடிமுக்காலென்றும் பஃறொடைவெண்பாவினைப் பலவடிமுக்காலென்றும் பெயரிட்டு ஒருசாரார் வழங்குவரெனக் கொள்க.

இனி "அட்டாலும்பால்சுவையிற்குன்றூதளவளாய், நட்டாலுநண்பல்லர்நண்பல்லர், கெட்டாலுமேன்மக்கண்மேன்மக்களேசங்கு, சுட்டாலும்வெண்மைதரும்" எனத்தொன்றுதொட்டுவழங்குஞ்செய்யுளை "நனியிருகுறளாய்நான்கடியுடைத்தாய்த், தனிநிலையில்லது சவலைவெண்பாட்டே" என்பதுகொண்டுசவலைவெண்பாவென்பர். "வெண்பாட்டீற்றடிமுச்சீர்த்தாகும்" என்றதொல்காப்பியச்சூத்திரத்தில் ஆகும்என்பதுகொண்டு இடையிலும் முச்சீர்வருமென்றூர் உரையாசிரியர். வீரசோழியஉரையிற் "கறைப்பற்பெருமோட்டுக்காடுகிழவோட்கொத்தரைத்திருந்தசாந்துகொண்டப்பேய், மறைக்குமாங்காணுதுவன்பேய் தன்கையைக், குறைக்குமாங்கூன்கத்திகொண்டு" என்னுஞ்செய்யுளைவெண்பாப்போலியென்றூரிதனையும்அவ்வாறுகொள்வர். கெட்டாலும்என்பதைத்தனிச்சொல்லாக்கிநான்காமடிமுதலிலேதான்மிக்கஎன்னுஞ்சீரைப்பெய்து இக்காலத்தார் நேரிசைவெண்பாவாக்கினர். இவ்வாறுவருமதங்களைவிரிப்பிற்பலகும். (௩)

அந்தமில் பாத மளவிரண் டொத்து முடியின்வெள்ளைச்
செந்துறை யாகுந் திருவே யதன்பெயர் சீர்பலவா
வந்தங் குறைநவுஞ் செந்துறைப் பாட்டி னிழிபுமங்கேழ்ச்
சந்தஞ் சிதைந்த குறளுங் குறளினத் தாழிசையே.

இது நிறுத்தமுறையானேபாவினமுணர்த்தத்தொடங்கிமுன்னின்றகுறள்வெண்பாவுக்கு இனமுணர்த்திற்று.

இ—ள். திருவே—அந்தம் இல் இரண்டு பாதம் அளவொத்துமுடியின் அதன்பெயர் வெள்ளைச்செந்துறை ஆகும்—இரண்டடிநாற்சீரொத்துமுடியின் அதன்பெயர்வெண்செந்துறையாகும். செந்துறைவெள்ளையென்பதுமிது. சூ. "ஒழுகியவோசையினொத்தடியிரண்டாய், விழுமியபொருளதுவெண்செந்துறையே" என்பதுயாப்பருங்கலம். வ. று. எண்ணாதவெண்ணமெல்லாமெண்ணியெண்ணியேழைநெஞ்சம், புண்ணாகநொந்ததினிப்போதும்பராபரமே. எ.ம். நீர்பூத்தவேணிநிலவெறிப்பமன்றாடுங், கார்பூத்தகண்டனையான்காணுநாளெந்நாளோ. எ. ம். வரும். தென்னனுடல்வெப்பைத்திருநீற்றாற்றீர்த்ததுபோ, லென்னுடல்வெப்புந்தவிர்த்தாலென்னோசிவசருவே. என்றதுமிது. இதுவெண்டளையுமாசிரியத்தளையும்விரவி ஏகாரஓகாரத்தாலிறுவதுசிறப்புடைத்து. அந்தமில். என்பதுமுடிவில்லை. பலதிறமாய் வருமென்றபடி எனவேகொன்றைவேந்தன் செல்வனடியிணை, யென்றுமேத்தித்தொழுவோம்யாமே. எ. ம். ஆர்கலியுலகத்து மக்கட்கெல்லா, மோதலிற்சிறந்தன்றொழுக்கமுடைமை. எ. ம். வருவனவும் வெண்செந்துறையாம்.—

சீர்பலவாய் அந்தங்குறைநவும்(குறளினத்தாழிசையாகும்)நாற்சீரின்மிக்கசீராயடியிரண்டிலீற்றடி குறைந்துவருவனவுங் குறட்டாழிசையாகும். அடியிரண்டென்பதுஅதிகாரம். மேலளவென்றமையினஞ்சீர்முதலியவாற்றலால்வந்தன. வ.று. கம்பைமாநதியின் கரைச்சிறுகன்னிபாரமூலத்தழும்பணி, யும்பர்கோன்விடையொன்றுலகேழுமுண்டதுவே. எனவரும்.—

செந்துறைப்பாட்டினிழிபுங்(குறளினத் தாழிசையாகும்)—அடியிரண்டாய் அளவொத்து ஒழுகியவோசையும் விழுமியபொருளுமின்றிச்செந்துறைவெள்ளையிற்சிதைந்துவருவனவுங் குறட்டாழிசையாம். வ.று. முன்புலகீன்றமுகிழ்முலைக்கன்னியோடின்புறும் யோகியெழுபுவிக்கரசே எனவரும்.—

அங்கேழ்ச்சந்தஞ்சிதைந்தகுறளுங்குறளினத்தாழிசை(யாகும்)—செப்பலோசையிற்சிதைந்து வேற்றுத்தளைதட்டுக்குறள் வெண்பாவிற் சிதைந்துவருவனவுங் குறட்டாழிசையாகும். வ.று. பின்றாழ்நறுங்கூந்தற் பிடிதழீஇமால்யானைக், கன்றீனுமுக்கட்களிறு. எனவரும். சூ. அந்தடிகுறைநவுஞ் செந்துறைச்சிதைவுஞ், சந்தழி

குறளுந்தாழிசைக்குறளே, என்பதுயாப்பருங்கலம். எனவே குறள்வெண்பாவுக்கினம், வெண்செந்துறை வெண்டாழிசை என இருதிறமென்றும் அவற்றுள் தாழிசைமுத்திறமென்றுங்கூறியவாறாயிற்று. இது குறள்வெண்பாவுக்கினமாதலின் ஈரடிவெண்பாக் குறளென்றவதிகாரம்பற்றி வருஞ்சூத்திரத்தின் முன்வைக்கப்பட்டது. (௬)

மூன்றடி யானு முடிந்தடி தோறு முடிவிடத்திற்
றூன்றனிச்சொற் பெறுந் தண்டாவிருத்தம்வெண்டாழிசை
மூன்றடியாய்வெள்ளைபோன்றிறுமூன்றிழிபேழுயர்பா
வான்றடி தாஞ்சில வந்தங் குறைந்திறும் வெண்டுறையே.

இது பாவினத்துள் வெண்பாஇனமுணர்த்திற்று.

இ—ள். தண்டாவெள்விருத்தம்மூன்று அடியானும்முடிந்து அடிதோறும்முடிவுஇடத்துத்தான் தனிச்சொற்பெறும்—வெளிவிருத்தம் மூன்றுஅடியானும் முற்றுப்பெற்றுஅடிதோறும் முடிவுஇடத்துஒருசொல்லாயதனிச்சொற்பெறும். மூன்றடியானுமென்றவும்மையால்நான்கடியானும்வரும். தண்டாவிருத்தமென்றதனுல் நாற்சீரடியுட்பட்டடங்காதுவேறாய்வருவது தனிச்சொல்லென்க. "ஒருமூன்றொருநான்கடியாயடிதொறுந், தனிச்சொற்றழுவிநடப்பதுவெள்ளை, விருத்தமெனப்பெயர் வேண்டப்படுமே" என்றார் காக்கைபாடினியார். வ. று. அங்கட்கமலத்தலர்க்கமலமேயீருநீரே போலும், வெங்கட்சுடிகைவிடவரவின் மேயீருநீரேபோலுந், திங்கட்சடையீருந் தில்லைவனத்துள்ளீரு நீரேபோலும், இதுமூன்றடியாயடிதோறுந் தனிச்சொற்பெற்றவெளிவிருத்தம். வெஞ்சமன் வஞ்சவேலொடெதிர்ந்தானமரங்கா, ளஞ்சலெனுஞ்சொல்லார்சொலவல்லார்நமரங்காண், மஞ்சிவரிஞ்சிமன்றமிறைஞ்சேர்நமரங்கா,ணஞ்சமயின்றூர்நல்குவர்மாதோநமரங்காள். இதுநான்கடியாயடிதோறுந் தனிச்சொற்பெற்ற வெளிவிருத்தம்.—

வெண்டாழிசை மூன்றுஅடியாய்வெள்ளைபோன்று இறும்—வெண்டாழிசைமூன்றடியாயீற்றடிவெண்பாவேபோல மூச்சீரடியாயிறும். இதுவெள்ளொத்தாழிசையென்வும் பெயர்பெறும்.

"அடியொருமூன்றுவந்தந்தடிசிந்தாய், விடினதுவெள்ளொத்தாழிசையாகும்" என்பதுயாப்பருங்கலம். வ-று. கனகமார்கவின்செய்மன்றி, லனகநாடகற்கெம்மன்னே, மனைவிதாய்தந்தைமகள், இதுமூன்றடியாய்வெள்ளைபோன்றிற்ற வெண்டாழிசை.—

வெண்டுறைமூன்றுஇழிபுஏழ் உயர்வாய்ஆன்றசிலஅடி அந்தங்குறைந்துஇறும்—வெண்டுறைமூன்றடிச்சிறுமையா யேழடிப்பெருமையாயிடைநான்குஐந்துஆறு அடியானும்வந்துபின்பிற்சிலஅடிசிலசீர்குறைந்துமுடியும். எ-று. ஆன்றஅடியென்றதனால்முன்பிற்சிலஅடியோரோசையாயும் பின்பிற்சிலஅடிமற்றோரோசையாயும்வருவனவேற்றொலி வெண்டுறையென்க. சூ. "மூன்றடிமுதலாவேழடிகாறும்வந், தீற்றடிசிலசிலசீர்தபநிற்பினும், வேற்றொலிவிரவினும் வெண்டுறையாகும்" என்பதுயாப்பருங்கலம். வ-று. பரசிருக்குந்தமிழ்மூவர்பாட்டிருக்குந்திருமன்றிற்பரசொன்றேந்தி, யரசிருக்கும்பெருமானுர்க்காட்செய்யாரென்செய்வார், முரசிருக்கும்படைநமனுர்முன்னுகுமந்நாளே. இதுமுதலடியறுசீராயேனையிரண்டடியும்நாற்சீராய்வந்தவெண்டுறை. படர்தரும்வெவ்வினைத்தொடர்பாற் பவத்தொடரப்பவத்தொடர்பாற்படராநிற்கும், விடலரும்வெவ்வினைத்தொடரவ் வினைத்தொடர்புக்கொழிபுண்டோவினையேற்கம்மா, விடர்பெரிதுமுடையேன்மற் றென்செய்கேனென்செய்கே, னடலரவமரைக்கசைத்தவடிகளோவடிகளோ: இதுமுதலடியிரண்டும்அறுசீரா யேனையடிநாற்சீராய்வந்தவெண்டுறை. கூற்றிருக்குமடலாழிக்குருசின்முதலோரிறைஞ்சக் கொழுந்தேன்பில்கி, யூற்றிருக்குந் தில்லைவனத்தசும்பிருக்கும் பசும்பொன்மன்றத் தொருதாளுன்றி, வண்டுபாடச்சுடர்மகுடமாடப்பிறைத், துண்டமாடப்புலித்தோலுமாடப்பகி, ரண்டமாடக்குலேந்தகிலமாடக்கருங், கொண்டலோடுங்குழற்கோதையோடுங்கறைக், கண்டனுடுந்திறங்காண்மினேகாண்மினே. இதுமுதலடியிரண்டும் அறுசீராயோரோசைத்தாய் ஏனையடிநாற்சீராய் வேறோரோசையாய் வந்தவேற்றொலிவெண்டுறை. உருவலனருவலனொருவன் மற்றிருவருக்கரியவனெனவுணர்ந்தறைகுநரறைக மற், பரவைதன் மனைவயிற் பாவலனேவலி, னிருமுறைதிரிதலி னெளியனென் றெளியனும், பரவுவன்மன்றம்பணிந்து. இதுஈற்றடிசிறிதுகுறைந்துவந்தஒரொலிவெண்டுறை.

மூன்றடி யாய்வெள்ளை போன்றிறுந் தாழிசை மூன்றிழிபே
ழான்றடி தாஞ்சில வந்தத் தடிக ளவைகுறைந்து (வந்து
தோன்றுந் துறைவெள்ளை தண்டா விருத்தந் தனிச்சொல்
மூன்றடியானு முடியு முடியுமோர் நான்கினுமே.

என வெண்பாவினமாகியதாழிசை, துறை, விருத்தங்களைக்கூறாது தலைதடுமாற்றமாகச்சொல்லியது ஒருசார்வெண்டுறையினீற்றடியொன்றொருசீர் குறைந்துவருமென்பதூஉம் வெள்ளொத்தாழிசைமுதலிரண்டடியுநான்குசீரான்வருமென்பதூஉஞ் சிந்தியல்வெண்பாஒருபொருண்மேன்மூன்றடுக்கிவருவனவெல்லாம் வெள்ளொத்தாழிசையென்று வழங்கப்படுமென்பதூஉ மறிவித்தற்கென்க. வ. று. உருவலன். இதுஈற்றடிகுறைந்தவோரொலிவெண்டுறை. கனகமார். இதுமுதலிரண்டடியு நாற்சீராயீற்றடிமுச்சீராயவெள்ளொத்தாழிசை. அம்பேருண்கண்ணார்க்கழிந்தமடநெஞ்சே, கொம்பேறுடையான்கழலிறைஞ்சாதென்கொலியாம். வம்பேயிறந்துவிடல், வாணேருண்கண்ணார்க்கழிந்தமடநெஞ்சே, நீணாகம்பூண்டான்கழலிறைஞ்சாதென்கொலியாம். வீணேயிறந்துவிடல், கோளாருண்கண்ணார்க்கழிந்தமடநெஞ்சே, யாளாகியாண்டான்கழலிறைஞ்சாதென்கொலியாம், வாளாவிறந்துவிடல். சிந்தியல்வெண்பா ஒருபொருண்மேன்மூன்றடுக்கியவெள்ளொத்தாழிசை. "ஈரடிமுக்காலிசைகொளநடந்து மூன்றுடனடுக்கித்தோன்றினொத்தாழிசை" என்றார் மகேச்சுரர். (எ)

கடையயற் பாதமுச் சீர்வரி னேரிசை காமருசீ
ரிடைபல குன்றி னிணைக்குற ளெல்லா வடியுமொத்து
நடைபெறு மாயி னிலைமண் டிலநடு வாதியந்தத்
தடைதரு பாதத் தகவ லடிமறி மண்டிலமே.

இது மேற்றொகுத்த ஆசிரியப்பாவைவகுக்கின்றது.

இ—ள். கடைஅயற்பாதம்முச்சீர்வரின் நேரிசை(அகவல்)—ஈற்றயலடிமுச்சீரான்வருவது நேரிசையாசிரியப்பாவாகும். சூ "அந்தவடியினயலடிசிந்தடி, வந்தனநேரிசையாசிரியம்மே, என்பதுயாப்

பருங்கலம். வ. று. பெருந்துறைபுகுந்துபேரின்பவெள்ள, மூழ்கி யபுனிதன்மொழிந்தவாசகமே, வாசகமதற்குவாச்சியந், தூசகலல் குல்வேயத்தோளிடத்தவனே எனவரும்.

காமருபலசீர் இடைகுன்றின் இணைக்குற (ளகவல்)—பலசீர்க ளிடையில் இருசீரும் முச்சீருமாய்வரின் இணைக்குறளாசிரியப்பா வாம். சீரிடைபலகுன்றினெனவேயிடையிலும் நாற்சீர்வருதல்விலக் கன்றென்க. "இணைக்குறட்பாவேற்றகுறள் சிந்திடையேவரும்" என்பது வீரசோழியம். வ. று. நீரின்றண்மையுந்தீயின்வெம்மை யுஞ், சாரச்சார்ந்து, தீரத்தீருஞ், சாரனுடன்கேண்மை, சாரச்சார ச்சார்ந்து, தீரத்தீரத்தீரும்பொல்லாதே. எனவரும்.—

எல்லாஅடியும்ஒத்துநடைபெறும்ஆயின் நிலைமண்டிலம்—எல்லா அடியும் நாற்சீரான்நடக்குமாயின் நிலைமண்டிலஆசிரியப்பாவாம். "ஒத்தவடித்தாயுலைபாமரபொடு, நிற்பதுதானேநிலைமண்டிலமே" என்றார். வ. று. வேரல்வேலி வேர்க்கோட்பலவின், சாரனுட் செவ்வியையாகுமதி, யாரஃதறிந்திசினோரேசாரற், சிறுகோட்டுப் பெரும்பழந்தூங்கியாங்கிவ,ளுயிர்தவச்சிறிதுகாமமோபெரிதே. என வரும்.

நடுஆதிஅந்தத்துப்பாதத்துஅடைதருஅகவல்அடிமறிமண்டிலம்— நடுவும்முதலும்ஈற்றடியிற்செல்லும்அகவலடிமறிமண்டிலமாம்.எ.று. எனவேஎல்லாஅடியும் முதல்நடுஇறுதியாகவாசிப்பினும் ஓசையும் பொருளும்பிழையாதென்க. "உரைப்போர்குறிப்பினுணர்வகை யன்றி, யிடைப்பான்முதலீறென்றிவைதம்முண், மதிக்கப்படா தன்மண்டலயாப்பே" எனக்காக்கைபாடினியாரும் "தலைநடுவீறு ற்றிய பாதத்தகவலடிமறிமண்டிலம்" எனப் புத்தமித்திரனுருங் கூறுதலானிதுமூன்றடியாய்வருதல்மரபு. நாலடியான்வரின்இடை யனஇரண்டடி. வ.று. தீர்த்தமென்பதுசிவகங்கையே,யேத் தருந்தலமெழிற்புலியூரே, மூர்த்தியம்பலக்கூத்தனதுருவே. என வரும். அகவலிசையனவகவன்மற்றவை, ஏ ஓ ஈ ஆய்எனஐயெ ன்றிறுமே. என்பதனலகவலீறுஆறெனக்காண்க:

இனி;சீரிடைபலகுன்றின்பது நடுவிலும்அளவடி வருதலைப் பொள்ளெனப் புலப்படுத்தலானும் ஏற்றகுறள்சிந்திடையேவரும்

ளன்பதுகுறளுஞ்சிந்தும்முதலில்வராமையை விதித்ததன்றிநாற்சீரி டையில்வரலைவிலக்காமையானுந் திருவாசகத்துத்திருவண்டப்ப குதி திருமுருகாற்றுப்படைமுதலிய அருட்டிருவாக்குகளிலிடை யிலளவடிசெறிதலானும் "அளவடியந்தமுமாதியுமாகிக், குறளடி சிந்தடியென்றுவிரண்டு, மிடைவரநிற்பதிணைக்குறளாகும்" என்ற காக்கைபாடினியார்கொள்கைசாலாது. அற்றேல்நீரின்றண்மை யும் என்னுமகவலுஞ்சாலாதென்னும்மாவெனினென்னும். என்னை இடையிலளவடி வருதலொருதலையென்னுமையின். (அ)

தருக்கிய முழிசை மூன்றடி யொப்பன நான்கடியா
யெருத்தடி நைந்து மிடைமடக் காயு மிடையிடையே
சுருக்கடி யாயுந் துறையாங் குறைவிற்றல் சீரகவல்
விருத்தங் கழிநெடி னொன்கொத் திறுவது மெல்லியலே.

இதுநிறுத்தபாவினத்துள் அகவலினமுணர்த்திற்று.

இ—ள் மெல்லியலே—தருக்குஇயல்(அகவற்)றுழிசைமூன்று அடிஒப்பன(வாம்)—ஆசிரியத்தாழிசைமூன்றடியாய்த்தம்முள்அள வொத்துவருவனவாம். தருக்கியலென்றதனுலவையொருபொரு ண்மேன்மூன்றடுக்கிவருவன சிறப்புடையன. தனியேவருதல்சிற வாதன. தருக்குகளிப்பு. சூ. "மூன்றடியொத்தமுடிவினவாய்வரி, னன்றவகவற்றுழிசையாகும்" என்பதுயாப்பருங்கலம். வ-று. சிற்றம்பலத்துநடிக்குஞ்சிவபெருமான், கற்றைச்சடைக்குமுடிக்கு ங்கதிர்த்திங்கண், மற்றப்புனன்மங்கை வாணுதலையொக்குமால். பேரம்பலத்துநடிக்குஞ்சிவபெருமான், வார்செஞ்சடைக்குமுடிக் குஞ்சுடர்த்திங்க,ணீர்மங்கைகொங்கைக்குநித்திலக்கச்சொக்குமால். பொன்னம்பலத்துநடிக்குஞ்சிவபெருமான், மின்னுஞ்சடைக்குமு டிக்குஞ்சுடர்த்திங்க, ளங்நங்கைசெங்கைக்கணிவளையுமொக்குமால். இவையொருபொருண்மேன்மூன்றடுக்கிய சத்தமுமாகியச்சத்தத் தாற்பெறு, மத்தமுமாகலினனந்தன்கண்களே, யுத்தமனைந்தெழுத் துருவங்காண்பன. இதுதனித்துவந்தது.

அகவற்றுறைநான்குஅடியாய்எருத்தடிநைந்தும்(நான்குஅடியா யெருத்தடிநைந்து)இடைமடக்காயும்(நான்கு அடியா) யிடையிடை

ச்சுருக்கடியாயும் (நான்குஅடியாயிடையிடைச்சுருக்கடியிர்யிடைமடக்காயும்) ஆம்— ஆசிரியத்துறைநான்கடியாயீற்றயலடிகுறைந்தும் நான்குஅடியாயீற்றயலடிகுறைந்து இடைமடக்காயும் நான்குஅடியாயிடையிடைகுறைந்தும்நான்குஅடியாயிடையிடைகுறைந்து இடைமடக்காயும்வரும். எருத்தடிஎன்பதற்குஇதுவேபொருளாதலைத்தொல்காப்பியத்திற்"குட்டமெருத்தடியுடைத்துமாகும்" என்னுஞ்சூத்திரவுரையாலுந்தெளிக: நான்கடியாயென்பதனையெல்லாவற்றோடுங் கூட்டியிடைமடக்காயென்பதனையொருகாலிருதலையுங்கூட்டிப்பொருள்கொள்ளாக்காற்பயின்றுவரும் இலக்கியங்கட்கு இலக்கணமின்றாய்முடியும். சூ. "கடையதனயலடிகடைதபுநடையவு, நடுவடிமடக்காய்நான்கடியாகி, யிடையிடைகுறைநவும கவற்றுறையே" என்பதுயாப்பருங்கலம். வ.று. நாகம்பொதிசடைமேனுண்மதியும்வாண்மதிபோனங்கைகங்குன், மேகஞ்செய்கூந்தன்மிலைச்சுந்தலைக்கலனும் விளங்குந்தோற்ற, மாகம்பகுந்தளித்தவந்நாளிலம்பலத்தான், மாகம்பதியுமதியும்பகுந்தளித்தவண்ணம்போலும். இது ஈற்றயலடிகுறைந்தது. மாயிருஞாலத்துமன்னுயிர்கள்கண்களிப்பமன்றுளாடு, நாயகன்கண்டங்கறுத்தன்றேபொன்னுலகைநல்கிற்றம்மா, நாயகன்கண்டங்கறுதேலந்நாட்டமரர், சேயிழைமாதருக்குச் செங்கைகளுங்கொங்கைகளுஞ்சிவக்கும்போலும். இதுஈற்றயலடிகுறைந்துஇடைமடக்கியது. உண்டாங்கொனினுமிலவதன்றறிஞ்ஞர்கள்பொய்யெனப்புகலவுமெய்யெனப்பெயர்பெற்றுன்னுமுனமின்னுமெனவுளதாய் மாய்வதுநிலையில்யாக்கை, கண்டாங்கிகழுங்கிழமுதிரமையத்தை வளிபித்தெனமெய்தரும்வித்திற்கட்லிற்றிரையெனவுடலிற்றிரையொடு கலியாநின்றனநலியுநோய்கள், புண்டாங்கயின்முக்குடுமிப்படையொடுமெயிறலைத்தழல்விழித்துயிருண்ணக்கனல் சேர்புகையாமென நிழலாமெனத்திரியாநின்றதுகொலைசெய்கூற்றம், விண்டாங்ககனு புமெய்ப்பொருடுணிவோர் மின்பொலிபொன்புனைமன்றிலெம்முயிராம்விமலன்குஞ்சிதகமலங்கும்பிடவேண்டுவர் வேண்டார்விண்மிசையுலகே. இதுமுதலடியுமூன்றாமடியும் பதினலுசீராயேனையிரண்டடியும்பதினறுசீராயிடையிடைகுறைந்தது. திங்கட்சடைக்கற்றைப்புத்தேடிருமார்பிற், பைங்கட்டலைகள்பலவுருகுவபோலுமாற், பைங்கட்டலைகள்

பலவுநகுவகண்,டங்கட்கமலத்தய்னுமாலுமழுவரால். இதுமுதலடியும்மூன்ருமடியும் நாற்சீராயேனையிரண்டடியுமைஞ்சீராயிடைமடக்கியது.—

குறைவுஇல்தொல்சீரகவல் விருத்தம்நான்குகழிநெடில் ஒத்துஇறுவது(ஆம்)—ஆசிரியவிருத்தம் நான்குகழிநெடிலொத்துமுடிவது ஆகும். எ.று. சூ. "கழிநெடிலடிநான்கொத்திறின்விருத்தமஃ, தழியாமரபினதகவலாகும்" என்பதுயாப்பருங்கலம். குறைவிறுல்சீரகவல்விருத்தமென்றதனுல் நான்கடியுமொத்தனவென்றும் என்றும்வழங்குமியல்பினவென்றுஞ் சிறப்பினவென்றும்விளங்கிற்று. உதாகரணம் உறுப்பியலிற்காண்க. அதுபலசந்தமாய்வருதலையிலக்கியங்களுட்டேறுக. விரிப்பிற்பல்கும். (கூ)

தரவொன்று தாழிசை மூன்று தனிச்சொற் சுரிதகமாய்
நிரலொன் றினேரிசையொத்தாழிசைக்கலி நீர்த்திரைபோன்
மரபொன்று நேரடி முச்சீர் குறணடு வேமடுப்ப
தரவொன்று மல்குல தம்போ தரங்கவொத் தாழிசையே.

இதுநிறுத்தகலிப்பாவை வகுத்துணர்த்திற்று.

இ—ள். அரவொன்றும்அல்குல்—தரவுஒன்று தாழிசைமூன்று தனிச்சொல் சுரிதகமாய் நிரல்ஒன்றின் நேரிசையொத்தாழிசைக்கலி—தரவுஒன்றுந்தாழிசைமூன்றும் ஒருதனிச்சொல்லும் ஒருசுரிதகமுமாய் முறையானேவந்தால் நேரிசையொத்தாழிசைக்கலிப்பாவாம். தரவுஎனினும் எருத்தமெனினுமொக்கும். தாழிசையெனினும்இடைநிலைப்பாட்டெனினுமொக்கும். தனிச்சொல்லெனினும்விட்டிசையெனினுங்கூனெனினுந் தனிநிலையெனினுமொக்கும். சுரிதகமெனினும் அடக்கியலெனினும் வாரமெனினும் வைப்பெனினும்போக்கியலெனினுமொக்கும். தரவு,முகத்துத்தரப்படுவது. அடக்கியல், உள்ளுறுப்பின்பொருளெல்லாம் ஒருவகையான் அடக்குமியல்பிற்று. போக்கு, குறித்தபொருளைமுடித்துப்போக்குதல். வைப்பு, அவையெல்லாம்போதந்துவைத்தல். வாரம், கூறியபகுதியைப்பின்னும்பற்றிக்கூறுதல். அடக்கியல்வாரத்தை அடக்குமியல்பிற்ருக்கியவாரம் என்பதுஎனஒன்ருக்குதலுந்துணிவு. சூ. "... வேதானுநாலடியிழிபா, யாறிரண்டுயர்பேறவும்பெறுமே" இடைநிலைப்பாட்டே, தரவகப்பட்டமரபினவென்ப அடைநிலைக்கிளவி

தாழிசைப்பின்னர்,நடைபயின்றெழுகுமாங்கென்கிளவிதந்துமுன்னிற்றலிற்றரவேதாழிசை, பொத்தாழ்ந்திறினஃதொத்தாழிசையே. தனிதரநிற்றலிற்றனிச்சொற்குனிதிரை,நீர்த்திரைபோலநின்றுசுரிந்திறுதலிற், சோர்ச்சியில்புலவர்சுரிதகமென்ப எனக்காரணக்குறிசொன்னாருமுளர். வ.று. கொன்செய்தகலையல்குற்கொலைசெய்தமதர்வேற்கண்,மின்செய்தசிறுமருங்குற்பெருந்தேவிவிழிகுளிர்ப்பப்,பொன்செய்தமணிமன்றினடஞ்செய்தபுகழோய்கேள். தரவு. முருகுயிர்க்குநறுந்தெரியன்மொய்குழலின்மையுண்கட், பொருக்யற்குன்றிருமேனிபுதுவெள்ளப்புணரியே. தேன்மறிக்கும்வெறித்தொங்கலறற்கூந்தற்றிருந்திழைகண், மான்மறிக்குன்றிருமேனிமலர்முல்லைப்புறவமே, பிறையளிக்குஞ்சிறுநுதலப்பெண்ணமுதின்பேரமர்க்கட், சிறையளிக்குன்றிருமேனி தேனளிக்கும்பொதும்பரே. இவைதாழிசை. அசனல்.தனிச்சொல். மதுவிரிகோதை மட்வாட்கம்ம, புதுவிருந்துண்ணவுண்ண, வதிசயம்விளைக்குநின்ற்புதக்கூத்தே. ஆசிரியச்சுரிதகம். இதுநேரிசையொத்தாழிசைக்கலிப்பா. கார்முற்றியிணரூழ்த்தகமழ்தோட்டமலர்வேய்ந்துஎன்னும் ஒத்தாழிசைக்கலி.) பிறைபுரையேர்நுதாரூமெண்ணியவையெல்லாந், து றபோதலொல்லுமோதூவாசாதாங்கே, யறைபோகுநெஞ்சுடை க்கு. எனவெள்ளைச்சுரிதகத்தாலிற்றது.—

நீர்த்திரைபோல்மரபுஒன்று நேரடிமுச்சீர்குறள்நடுவேமடுப்பது அதுஅம்போதரங்கஒத்தாழிசைக்கலி—கரைசாரக்கரைசாரஒருகாலைக்கொருகாற்சுருங்கிவருகின்ற நீர்த்திரைபோல் ஒன்றன்பின்ஒன்றாய்வருகின்றநாற்சீர டியும்முச்சீரடியும் இருசீரடியுமாயஅசையடிகளைந்தரவுதாழிசைக் ந் தனிச்சொல்,சுரிதகத்துக்குநடுவேதொடுப்பது அம்போதரங்கவொத்தாழிசைக்கலிப்பாவாம். எ. று. சூ. "ஈரடியிரண்டுமோரடிநான்கு, முச்சீரெட்டுமிருசீரிரட்டியு, மச்சீர்குறையினுமம்போதரங்கம்" என்றார். "அனையவாகியவசையடி நான்குந், தனியொடுதாழிசையிடைவருமென்ப. அவற்றைப்பேரெண்அளவெண் இடையெண்சிற்றெண் எனப்பெயரிட்டுவழங்குவர். எட்டுநான்கும் பதினாறுஎட்டுமாகச்சுருங்கிவரினுமிழுக்காது. அம்போதரங்கமெனினும்அசையடியெனினும்பிரிந்திசைக்குற்ளெ

ணினுஞ்சொற்சீரடியெனினும்எண்ணெனினுமொக்கும்.வ.று.உலகெலாம்படைத்துக்காத்தொழித்துமறைத்தருள்செய்யா, வலகிலாத்திருவிளையாட்டாடுவான்குறிகுணமற், றிலகுநிலையதுநிற்பவீறிலருளுருவெடுத்துக், கொலைகெழுவேலரிநெடுங்கட்குமுதவாய்க்குவிமுலையம், புலியனையமுகஞானப்பூங்கோதையொடுகயிலை, மலையில்வீற்றிருந்தருளுமதிமுகிழீர்ப்பெருஞ்சடையோய், தரவு. அலங்குளையபரிமானேவமுதனையதிருமொழியோ, விலங்குபுகழ்பலவுமெடுத்தேத்துமிகல்வந்திகரோ, நலங்கொளருமறைநான்குநாடரியநிலையாய்க்கே, தரியலராருயிருண்ணுந்தனிக்கணையோகூர்ங்கோட்டு, வரையனையமழவிடையோமலர்சாத்துமடியானே, விரிகதிர்மாமணிவண்ணன்வியனுலகமுடையாய்க்கே, சுடர்விழியோ வெழினுடம்போதூச்சிறையோதிமமுயர்த்த, கடிமலரோன்செலுத்துநிலக்கண்ணகன்றேருருளேயோ, படரொளியாயிரங்கதிரோன்பல்லுயிரும்படைத்தாய்க்கே. இவைமூன்றுந்தாழிசை. வெருவருங்கூற்றம்வீழ்தரச்சிறிது, விரணிமிர்ந்தன்றுநின்மென்மலர்த்திருவடி, மூரணினரரணமூன்றும்வெந்தவிய, வெரிதழலுமிழ்ந்தன்றிறைவநின்னிளநகை. ஈரடியிரண்டம்போதரங்கம். இவைபேரெண். கனல்படவிழித்துக்காமற்காய்ந்தனை, மனைவிவேண்டலின்மறித்தவற்றந்தனை, யருவரைபெயர்த்தவரக்கனைநெரித்தனை, புரிநரம்பின்னிசைபுகன்றவற்கருளினை. ஓரடிநான்கம்போதரங்கம். இவைஅளவெண். அழித்தனைசிறுவிதியாக, மசைத்தனையுடையெனமாக, முரித்தனைபுகர்முகநாக, முயர்த்தனைமழவிடைமேகம். முச்சீரோரடிநான்கம்போதரங்கம். இவையிடையெண். புண்ணியமூர்த்தியை, புகலருஞ்சீர்த்தியை,யெண்ணருஞ்சிறப்பினை, யில்லாப்பிறப்பினை, அவாவிலாமனத்தினை, யடற்கரிவனத்தினை, தவாத்திருவருளினை தலைமறைப்பொருளினை, இருசீரோரடியெட்டம்போதரங்கம். இவைசிற்றெண். எனவாங்குதனிச்சொல். அரும்பெறலொருவநின்றிருந்தடிவணங்குதும். மைம்புலவிலங்குவெம்படருறுத்து, மானுப்பிறவிக்கானங்கடந்து. கருதருமின்பமுத்திப், பொருவின்மாநகரம்புகுதரற்பொருட்டே சுரிதகம். இதுஎட்டுநான்கும்பதினாறுஎட்டுமாய்ச்சுருங்கியது. சுருங்காததுமேல்வரும். ௯. "நீர்த்திரைபோலநிர

லேமுறைமுறை, யாக்கஞ்சுருங்கியசையடிதாழிசை, விட்டிசைவிரியத்தொடுத்துச் சுரிதகந், தாக்கித்தொடுத்ததரவினேடேனவும், யாப்புற்றமைந்ததம்போதரங்கம்" என்றார் காக்கைபாடினியார்.

அசையடி முன்ன ரராகம்வந் தெல்லா வுறுப்புமுண்டேல்
வசையறு வண்ணக வொத்தா ழிசைக்கலி வான்றளேதட்
டிசைதன தாகியும்வெண்பா வியைந்துமின்பான்மொழியாய்
விசையறு சிந்தடியாலிறு மாய்விடின் வெண்கலியே.

இதுவுமது.

இ—ள். இன்பால்மொழியாய்—அசையடிமுன்னர்அராகம்வந்து எல்லா உறுப்பும் உண்டேல்வசை அறு வண்ணக ஒத்தாழிசைக் கலி—அம்போதரங்கத்துக்குமுன் அராகம்வரஒழிந்தஎல்லாவுறுப்பும்வரின் அதுவண்ணகவொத்தாழிசைக்கலிப்பாவாகும். எனவே தரவு தாழிசை அராகம் அம்போதரங்கந்தனிச்சொல்சுரிதகம்ஆகிய ஆறும்முறையானேவருமென்க. அராகமெனினும்வண்ணகமெனினும் முடுகியலெனினும் அடுக்கியலெனினுமொக்கும். வர்ணித்துப்புகழ்தலின் வண்ணகமெனப்படும். ஆறுறுப்புங்குறையாமையின் வசையறுஎன்றார் "அச்சொலப்பட்டவுறுப்பொட்ராகவடி, வைத்தநடையதுவண்ணகமாகும்" என்றார்காக்கைபாடினியார். அராகம்அளவடிமுதலிய எவ்வடியானும்வரும். அடிவரைசிறுமைநான்குபெருமைஎட்டு. இடைஐந்துஆறுஏழடியானும்வரும். அளவடிமுதலாவனைத்தினுநான்கடி, மூதலாவிரட்டியுமுடுகியனடக்கும்என்றார். வ. று. தொல்லுலகம்படுசெடிகைச்சுடர்மணிவிளக்கேந்தும், பல்பொறியபடவரவுமடுபுலியும்பணிசெய்ய, வந்தரதுந்துபிமுழங்கவமரர்மலர்மழைசிந்த, விந்திரனுமலரவனுங்கரியவனுமேத்தெடுப்பச், சூடகத்தளிர்ச்செங்கைத்துணைவிதுணைக்கண்களிப்ப, வாடகத்திருமன்றத்தனவரதநட்டஞ்செய்வோய். தரவு. முன்மலையுங்கொலைமடங்கலீருரியுமும்மதத்த, வன்மலையுங்கடமலையின் முடையுட்லின்வன்றோலும், பொன்மலையின்வெண்முகிலுங்கருமுகிலும்போர்த்தென்ன, வின்மலையும்புயமலையின்புறமலையவிசித்தனையே. கட

நாகமெட்டும்விடங்காணுகமோரெட்டுந், தடநாகமவையெட்டுந்தரி
த்துளபூந்துகிலொன்று, முடனாகவடல்புரியுங் கொடுவரியினுடுப்
பொன்று, மடனாகவரவல்குற்கணிகலையாயசைத்தனையே. வருநீ
லப்புயன்மலரமலரிதழிக்கண்ணியையு, மருநீலமுயற்களங்கமகன்ற
மதிக்கண்ணியையுங், கருநீலக்கண்ணியுமைசெங்கைவருகங்கையெ
னுந், திருநீலக்கண்ணியையுஞ்செஞ்சடைமேற்செறித்தனையே.மூ
ன்றுந்தாழிசை. கறைவிடமுகவெரிகனல்விழியொடுமிளிர், பிறை
யெயிறொடுமிடல்பெறுபகடொடுமட, லெறுள்வலியொடுமுருமிடி
யெனவருமொரு, மறலியதுயிர்கொளமலர்தருகழலினை; உலகமொ
டுயிர்களுமுலைதரவலம்வரு, மலர்மகள்கொழுநனுமகபதிமுதலிய,
புலவருமடிகளொர்புகலெனமுறையிட, வலைகடல்விடமுனமமுது
செய்தருளினை; விசையிலெம்மிறைவியும்வெருவரவிரசத, வசலம
தசைதரவடல்புரிதசமுக, நிசிசரன்மணிமுடி நெறுநெறுநெறுவெ
ன, வசையில்பொன்மலரடிமணிவிரனிறுவினை; இலவிதழ்மதிநுத
லிரதியொடிரதம, துலைவறநடவிடுமொருவனும்வெருவர, வலை
கடனெடுமுர சதிர்தரவெதிர்தரு, சிலைமதனனையடல் செயுநுதல்
விழியினை. இவைநான்கும்அராகம். அருவமுமுருவமுமாகிநின்
றுமவ், வருவமுமுருவமுமகன்றுநின்றனை; சொல்லொடுபொருளு
மாய்த்தோன்றிநின்றுமச், சொல்லையும்பொருளையுந்துறந்துநின்றனை.
இவைஈரடியிரண்டம்போதரங்கம். அந்நலம்விழைந்தவர்க்கறமுமா
யினை, பொன்னலம்விழைந்தவர்பொருளுமாயினை, யின்னலம்வி
ழைந்தவர்க்கின்பமாயினை, மெய்ந்நலம்விழைந்தவர் வீடுமாயினை.
இவைஓரடிநான்கம்போதரங்கம். முத்தொழிலின்வினைமுதனீமூ
வர்க்குமுழுமுதனீ, யெத்தொழிலுமிறந்தோய்நீ யிறவாததொழிலி
னைநீ, யிருவிசும்பின்மேயோய்நீ யெழின்மலரின்மிசையோய்நீ, யர
வணையிற்றுயின்றோய்நீ யாலின்கீழமர்ந்தோய்நீ. இவைமுச்சீரோர
டியெட்டம்போதரங்கம். பெரியைநீசிறியைநீ பெண்ணுநீயாணுநீ,
யரியைநீயெளியைநீ யறமுநீமறமுநீ, விண்ணுநீமண்ணுநீ வித்துநீ
விளைவுநீ, பண்ணுநீபயனுநீ பகையுநீயுறவுநீ. இவைஇருசீரோரடிப்
பதினறம்போதரங்கம். கற்பனைகழன்றநின்பொற் கழலிறைஞ்சுது
ம், வெண்மதிக்கடவுண் மீமிசைத்தவழ்தரத், தண்முகிற்குலங்க

டாழ்வுறப்படிதலிற், செங்காலன்னமும்வெண்மருப்பேனமுங், கீழ்மேறுருவவாரழற்பிழம்பாய், நின்றநின்றன்மையையுணர்த்தும், பொன்றிகழ்புலியூர்மன்றுகிழவோனே. சுரிதகம். இதனுள்அம்போதரங்கஞ்சுருங்காமல்வந்தது. அம்போதரங்கத்துள்முச்சீரெட்டை இருசீரெட்டெனவும் இருசீர்ப்பதினாறை ஒருசீர்பதினாறெனவுங் கொண்டுமுறையேமுத்தொழிலின் வினைமுதனீமுதலியவற்றையும் பெரியைநீமுதலியவற்றையுமுதாகரணமாக்குவாருமுளர். பெரும்பாலார் அசையைச்சீராக்குவர். அசைக்களபெடைவேண்டாமையைப்பெயர்க்காரணம்விளக்கும்.—

வான்தளைதட்டுத்தனதுஇசையாகிவிசைஅறுசிந்துஅடியால்இறும்ஆய்விடின்வெண்கலி—கலித்தளைகலந்துதுள்ளலோசையாய்முச்சீரடியால் முடியுமானால்வெண்கலி. விசையறுசிந்தடியென்றதனாலருகிவேற்றுத்தளைதட்டும்வரும். வ. று. சேல்செய்தமதர்வேற்கட்சிலைசெய்தசுடிகைநுதன், மால்செய்தகுழற்கோதை மகிழ்செய்யநடஞ்செய்யுந், தருணவிளம்பிறைக்கண்ணித்தாழ்சடையெம்பெருமானின், கருணைபொழிதிருநோக்கிற்கனியாதகன்னெஞ்சம், வாமஞ்சான்மணிக்கொங்கைக்கொசிந்தொல்குமருங்குலவர், காமஞ்சால்கடைநோக்கிற்கரைந்துருகாநிற்குமா, லவ்வண்ணமாறிநிற்பதகமென்றுலகமகம்விட், டெவ்வண்ணமாறிநிற்பதின்று. இதுகலித்தளைவெண்கலிப்பா. அற்புதமணிமன்றிலடிகணின்னடியுன்னார், மைக்கடல்விடமென்னும்வடவைத்தீயெழவஞ்சி, நோஎனவடிவீழ்ந்தார்க்குதவிலர்நாணார்கொல், கைத்தலவபயத்தர்வாதத்தர்கைசெய்யாச், சித்திரமன்னசிலர். பிறதளைவிரவியவெண்கலிப்பா.—

வெண்பாஇயைந்துவிசைஅறுசிந்துஅடியால்இறுமாய்விடிற்கலிவெண்பா—நேரிசைவெண்பாப்போலத் தனிச்சொற்பெற்றும் இன்னிசைவெண்பாபோலத்தனிச்சொற்பெறாதுஞ் சிந்தடியால்முடியுமாயிற்கலிவெண்பாவாம். தளையும்வெண்சீர்வெண்டளையும் இயற்சீர்வெண்டளையுமெனப்புலப்பட்டது. வ. று. பூமேவுசெங்கமலப்புத்தேளுந்தேறரிய, பாமேவுதெய்வப்பழமறையுந், தேமேவு, என அடிநிமிர்ந்திரண்டாமடிதோறுந் தனிச்சொற்பெற்றுக்—கடியேற்கும்பூங்கமலக்கால்காட்டியாட்கொண், டடியேற்குமுன்னின்றருள். எனநேரிசையாய்வந்த திருச்செந்தூர்க்கந்தர்கலிவெண்பாவைக்காண்க.

சுடர்த்தொடீஇகேளாய்தெருவில்யாமாடு, மணற்சிற்றில்காலிற் சிதையாவடர்ச்சியபொற், கோதைபரிந்துவரிப்பந்து கொண்டோடி, நோதக்கசெய்யுஞ்சிறுபட்டிமேலோர்நா, ளன்னையும்யானுமிருந்தேமாவில்லுளே, யுண்ணுநீர்வேட்டேனெனவந்தாற்கன்னை, யடர்பொற்சிரகத்தால் வாக்கிச்சுடரிழா, யுண்ணுநீரூட்டிவாவென்றாளெனயானும், தன்னையறியாதுசென்றேன்மற்றென்னை, வளைமுன்கைபற்றிநலியத்தெருமந்திட்,டன்னாயிவனொருவன்செய்ததுகாணென்றேனோ, வன்னையலறிப்படர்தரத்தன்னையா, னுண்ணுநீர்விக்கினானென்றேனோவன்னையுந், தன்னைப்புறம்பழித்து நீவமற்றென்னைக், கடைக்கணாற்கொல்வான்போனோக்கிநகைக்கூட்டஞ், செய்தானக்கள்வன்மகன். இதுஇன்னிசையாய்வந்தகலிவெண்பா.

இனி, இச்சூத்திரத்தில்வெண்பாஇயைந்தும்என்பதுபொதுமையினிற்பவும் முன்னுரையாசிரியர்பிறநூலுரையாளர்போற்சுடர்த்தொடீஇஎன்னுஞ்செய்யுளொன்றையே யுதாகரணமாகக்காட்டினமையின் அவருக்குநேரிசைக்கலிவெண்பாவுடன்பாடன்றுபோலும். அற்றேன்மேற்காட்டியதிருச்செந்தூர்க்கந்தர்கலிவெண்பா, திருக்கைலாயஞானவுலா, போற்றித்திருக்கலிவெண்பா, திருவுலாமாலை, நெஞ்சுவிடுதூது, திருவிளையாடற்போற்றிக்கலிவெண்பா முதலியவாய்ப் பயில்வினவாய்ச்சிறப்பினவாய்த்தொன்றுதொட்டவாய் வருவனவற்றுக்குஇலக்கணம்யாண்டையதென்றுயாப்பைநுனித்துணரும் மாணாக்கனிடருறும்.

இன்னிசைக் கலிவெண்பாவையொழித்து இந்நேரிசைக் கலிவெண்பாவையே "வேண்டியவீரடியாற்குறளாம்" என்னுஞ் சூத்திரத்தில் வெண்பாவகுப்பில்வைத்து "நேரிசையேநீண்டிசையாங்கலி" எனச்சந்தநயநுனித்துணர்ந்த புத்தமித்திரனார் கொண்டனர். இதற்குஉரையாளர்காட்டிய சுடர்த்தொடீஇ என்னுஞ்செய்யுள் இலக்கியமன்மைக்குஅவர்காட்டிய "ஒன்றைந்தெட்டாக்கியசீரொத்தவெதுகையாய். நின்றபதின்மூன்றொன்பானேரொத்து, நன்றியலு, நீடுசீர்மூவைந்தாநேரிசைவெண்பாவென்பர், நாடுசீர்நாப்புலவர்நன்கு" என்னுஞ்செய்யுள் சான்றாதல்காண்க. "வேற்றுத்தளைதட்டும்வெண்பாவியைந்து, மீற்றடிமுச்சீராயிறின் முறையே, வெண்கலிப்பாவுங்கலிவெண்பாவும்" என்றார்வைத்தியநாததேசிகர்.

"நெடுவெண்பாட்டுமுந்நாலடித்தே" எனப்பஃறொடைவெண் பாவுக்கு அடிவரையறையும். "கலிவெண்பாட்டேகைக்கிளை ச்செய்யுள், செவியறிவாயுறைபுறநிலையென்றிவை, தொகுநிலை யளவினடியிலவென்ப" எனக்கலிவெண்பாவுக்குஅடிவரையறை யின்மையும் ஆசிரியர் தொல்காப்பியனார்கூறலானும் அங்ஙனங்கூ றுக்காற்பஃறொடைவெண்பாவைக்கலிவெண்பாவெனவுங்கலிவெ ண்பாவினைப் பஃறொடைவெண்பாவெனவு மயங்குபவாகலானும் மேற்காட்டிய "தொடையடியித்துணை" என்னுங்காக்கைபாடினி யார்சூத்திரம்வேண்டாதாயிற்று. இஃதறியாதார்திருவாசகத்துநம ச்சிவாயவாஅழ்கநாதன்றாள்வாழ்க" எனஅடிநிமிர்ந்துவந்த கலி வெண்பாவைப்பஃறொடைவெண்பாவென்றுமயங்குப. (கக)

தரவே தரவிணை தாழிசை தாமுஞ் சிலபலவாய்
மரபே யியன்று மயங்கியும் வந்தன வாங்கமைத்தோ
ளரவே ரகலல்கு லம்பேர் நெடுங்கண் வம் பேறுகொங்கைக்
குரவே கமழ்குழ லாய்கொண்ட வான்பெயர் கொச்சகமே.

இது கலியின்பகுப்புக்கொச்சகம் உணர்த்திற்று.

இதனது பொழிப்பு.—ஒருதரவும் இரண்டுதரவும் சிலதாழி சையும் பலதாழிசையும் முறையான்வருவதுகொச்சகமாம். இ வைமயங்கிவருதல் மயங்கிசைக்கொச்சகமாம். அவைதரவுக் கொச்சகம், தரவிணைக்கொச்சகம், சிஃறாழிசைக்கொச்சகம், பஃறாழிசைக்கொச்சகம், மயங்கிசைக்கொச்சகம் எனவழங்கும். வ. று. அஞ்சம்—நெஞ்சே. இதுதரவுக்கொச்சகம். ஆதியுமந்தமு மில்லாவரும்பெருஞ், சோதியையாம்பாடக்கேட்டேயும்வாட்ட ங்கண், மாதேவளருதியோவன்செவியோநின்செவிதான், மாதேவ ன்வார்கழல்கள்வாழ்த்தியவாழ்த்தொலிபோய், வீதிவாய்க்கேட்ட லுமேவிம்மிவிம்மிமெய்ம்றந்து, போதாரமளியின்மேனின்றும்புர ண்டிங்ங, னேதேனுமாகாள்கிடந்தாளென்னேயென்னே,யீதேயெ ந்தோழி பரிசேலோரெம்பாவாய். இதுதரவிணைக்கொச்சகம். இஃ தறியார் இதனைஏலோரெம்பாவாய்எனஇறுதியிற்கூன்பெற்றுவந்த பஃறொடைவெண்பாவென இலக்கணத்துக்கெல்லாமாறுகொளக் கூறுப.

மரபேயியன்றுமென்றதனால்மரபேயியலாததனிச்சொல்லுஞ்சுரிதகமும்இடையில்வருமெனவுங்கொள்க. வ. று. நல்லாண்டதிரடிண்டோணடுமுதலுமணிநாவிற், சொல்லாண்டமறைமுதலும்பலராங்குத்தொலைவெய்தப், பல்லாண்டுசெலச்செல்லா விளையோரும்பணிப்பெய்த, வல்லாண்டநல்லிருளிலழலாடுந்தொழிலினையே. அதனாற், பல்பேரூழிசெல்லினுமடிகட், கொல்லையுஞ்செல்லாதாகுமாகலி, னளவில்காலமலக்கணுற்றுழலுமென், றளர்வுநோக்காய்போலுநோக்கிற், கருணைசெய்தருளாயல்லை, யருணலம்பழுத்தவாடல்வல்லோயே. இதுதனிச்சொல்லுஞ்சுரிதகமும்பெற்ற தரவுக்கொச்சகம்.

குழைதூங்குகழைமென்றோட்கோமாரிகொலைக்கண்க, ளிழைதூங்குமுலைக்கண்வைத்தேயெய்தாநாணெய்த. வுழைதூங்குகுயிலேங்கவுருமுத்தீயுகநக்கு, மழைதூங்குபொழிற்றில்லைமணிமன்றுணடஞ்செய்வோய். மீனேற்றின்றுவசத்தான்றனித்தஞ்சவிழித்தோய்நின், னானேற்றின்றுவசமோவடலேற்றினூர்தியோ, கானேற்றபைங்கூழின்கவளமாக்கணத்தின்கண், வானேற்றபகிரண்டம்வாய்மடுக்கவல்லதே, யெனவாங்குப்,பைந்துழாய்மவுலிப்பண்ணவனுவப்ப, வந்தணர்பழிச்சவுமறத்தின்புங்கவன், முனியான்முனிவன்போலு, மனையதன்றேயான்றோர்கடனே. இது தனிச்சொல்லுஞ்சுரிதகமும்பெற்றதரவிணைக்கொச்சகம். சுரிதகமில்லாததுவந்தவழிக்காண்க.

மறைதங்குதிருமன்றினடங்கண்டுமகிழ்பூத்துக், கறைதங்குவிடவரவமிமையாதுகண்விழிப்பக், குறைதங்குகலைநிறையிற் கோளிழைக்குங்கொல்லென்று, நிறைதங்குதலையுவவுநிரம்பாதுநிரப்பெய்தும், பிறைதங்குசடைக்கற்றைப்பெரும்பற்றப்புலியூரோய்,தரவு. எனவாங்கு, தனிச்சொல். வெள்ளெருக்குங்கரும்பாம்பும் பொன்மத்துமிலைச்சியெம, துள்ளிருக்கும்பெருமானின்றிருமார்பினுறவழுத்துங், கள்ளிருக்குங்குழலுமையாண்முலைச்சுவட்டைக்கடுவொடுங்கு,முள்ளெயிற்றகறையரவமுழையென்றுநுழையுமா,லதான்று,

சிலைக்கோடுபொருமருப்பிற் புகர்முகனின்றிருமார்பின், முலைக்கோடுபொருசுவட்டைக்கண்டுநின்முழவுத்தோண், மலைக்கோடிவிளையாடும்பருவத்துமற்றுந்தன், கொலைக்கோடுபட்டவெனக்குலைந்துமனங்கலங்குமா, லதாஅன்று, விடமார்ந்தசுடரிலைவேல்விடலைநின்மணிமார்பில், வடமார்ந்தமுலைச்சுவட்டைக்கண்டுதன்மருப்பெந்தை, தடமார்பம்விடர்செய்யச்சமர்செய்தான்கொல்லென்று, கடமாவெங்கவுட்சிறுகட்கயாசுரனைவியக்குமால். இவைமூன்றுந் தாழிசை. அதனால், தனிச்சொல். சிலைமுகங்கோட்டுமெச்சில்லரித்தடங்கண், முலைமுகங்கோட்டினணகுமான், மலைமுகங்கோட்டுநின்மற்புயமறைந்தே. இதுதரவுஒன்றுந்தாழிசைமூன்றுந் தனிச்சொற்களுஞ்சுரிதகமும்பெற்றநிஃறாழிசைக்கொச்சகம். ஒருநோக்கம்பகல்செய்யவொருநோக்கமிருள்செய்ய, விருநோக்கிற்றொழில்செய்துந்துயில்செய்துமிளைத்துயிர்கள், கருநோக்காவகைகருணைக் கண்ணோக்கஞ்செய்ஞானத், திருநோக்கவருநோக்க மிருநோக்குஞ்செயச்செய்து, மருநோக்கும்பொழிற்றில்லைமணிமன்றுணட்ஞ்செய்வோய், தரவு. கடிக்கமலப்பார்வைவைத்துங்கண்ணனார்காணுநின், னடிக்கமலமுடிக்கமலமறியாதேமறிதுமே, முத்தொழிலின்முதற்றொழிலோன்முடியிழந்தான்றலையிழந்த, வத்தொழிலிற்கெனிற்றமியேமறிதொழிற்கும்வல்லமே, இருக்கோலமிட்டுமினுமுணராதாலெந்தைநின், றிருக்கோலம்யாமுணர்ந்துசிந்திக்கக்கடவமே, நான்மறைக்குந்துறைகண்டார்தோளிழந்தார்நாவிழந்திங், கூன்மறைக்கமறைப்புண்டேமுய்த்துணர்வுபெரியமே, தாமடிகண்மறந்துமறித்தலைகொண்டார்கலைவல்ல, மாமடிகள்யாம்டிகண்மறவாமையுடையமே, பலகலையுங்குலமறையும்பயின்றுணர்ந்தும்பயன்கொள்ளா, துலகலையுஞ்சிலகலையுமுணராதேமுணர்துமே. இவைஆறுந்தாழிசை. அதனால், தனிச்சொல். அம்மநின்றன்மையெம்மனோருணர்தற், கரிதேயெளிதேயாதல், பெரிதேகருணைசிறியேமாட்டே, சுரிதகம். இதுபஃறாழிசைக்கொச்சகம்.

நீர்கொண்டகடலாடை நிலமகளுக்கணியான, கார்கொண்டபொழிற்காசிக்கடிநகரங்குளிர்தூங்க, விடமருங்கிற் சிறுமருங்குற்

பெருந்தடங்கணின்னமிர்தஞ், சடைமருங்கி னெடுந்திரைக்கைப் பெண்ணமிர்தந்தலைசிறப்பக், கண்கதுவுகடவுண்மணிதெரிந்தம ரர்கம்மியன்செய், விண்கதுவுபொலங்குடுமிவிமானத்தின் மிசை ப்பொலிந்தோய். நிற்பனவுந் தவழ்வனவு நடப்பனவுமாய்நிலத் துக், கற்பமளவிலகண்டு முறுகளைகண்காணுமே, பழங்கணுறு முயிர்கடுயர்க்கடனீத்துப்பரங்கருணை, வழங்குபரமானந்தமாக்கட லிற்றிளைத்தாட, வுரையாதபழமறையின் முதலெழுத்தினெண்பொ ருளை, வரையாதுகொடுத்திடுநின்வள்ளன்மைவாழ்த்துதுமே. இவையிரண்டும்ஆறடித்தரவு. நீரெழுத்துக்கொத்தவுடனீத்தார்க்கு நீஙவில்வ, தோரெழுத்தேமுழுது மவரெவ்வண்ணமுணாவதுவே, யென்பணிவதுடுப்பதுதோலெம்பிரான்றமர்களவர், முன்பணியும் பேறுடையார்திசைமுகனுமுகுந்தனுமே, செடிகொண்முடைப்பு ழுக்கூடேசிற்றடியேமிடுதிறைமற், றடிகளடியார்க்களிப்பதானந் தப்பெருவாழ்வே, பற்பகனேற்றருந்தவரும்பெறற்கரியபரந்தாம, மெற்புடல்விற்றளியேமுங்கொளப்பெறுவதிறும்பூதே, நிணம்புனை ர்வெண்டலைக்கலன்கொணேரிழைமுத்தித்திருவை, மணம்புணர் வார்க்கையனருண்மணவாளக்கோலமே, முடைத்தலையிற்பலிகொ ள்வான்மூவுலகுமவரவர்தங்,கடைத்தலையிற்றிரிவதுகொல்யாம்பெ றுநின்காணியே. இவையாறும்ஈரடித்தாழிசைகள். உளதெனவி லதெனவொருவரொரளவையி, னளவினிலளவிடவரியதொருரு வினை, யிதுவெனலருமையினெழுதருமொழிகளு, மதுவலவெனு மெனிலெவருனையறிபவ, ரவனவளதுவெனுமவைகளினுளனல, னெவனவனிவனெனவெதிர்தருதகைமையை, யறிபவரறிவினு ளறிவுகொடறிவுறு, நெறியலதொருவருமறிவருநிலைமையை. இ வைநான்கும்ஈரடிஅராகம். ஆறுடுபெண்ணுருவமைந்துநின்றனை, பூண்முலைகலந்துமைம்புலனும்வென்றனை,யெண்வகையுறுப்பினே ருருவெடுத்தனை, தொன்மறைப்பனுவலின்றொடைதொடுத்தனை. இவைநான்கும்நாற்சீரோரடியம்போதரங்கம். வடவரைகுழைய வளைத்தனை, மலைமகண்முலைகடிளைத்தனை, விடமமிர்தமரவிளைத்த

னை, விசயனொடமர்செய்திளைத்தனை, வரிசிலைமதனையெரித்தனை,
மதகரியுரிவைதரித்தனை, யருமறைதெரியவிரித்தனை, யலகில்பல்க
லைகடெரித்தனை. இவைஎட்டும்முச்சீரோரடியம்போதரங்கம். அ
ழல்விழித்தனை, பவமொழித்தனை, யாறணிந்தனை, மாறணிந்தனை,
மழுவலத்தினை, முழுநலத்தினை, மானடத்தினை, மாணிடத்தினை,
யலகிறந்தனை, தலைசிறந்தனை, யருள்சுரந்தனை, யிருடுரந்தனை, யுல
களித்தனை, தமிழ்தெளித்தனை, யொன்றுமாயினை, பலவுமாயினை.
இவைபதினாறும்இருசீரோரடியம்போதரங்கம். அலகில்புவனங்க
ளடங்கலுமுண்டொழிப்பாய்க்குக், கொலைவிடமுண்டனையென்
றுகூறுவதோர்வியப்பாமே, பயின்மூன்றுபுவனமுங்கட்பொறிக்கி
ரையாய்ப்பாவிப்பாய்க்,கெயின்மூன்றுமெரிமடுத்தாயென்பதுமோ
ரிசையாமே, அடியவரேமுக்குறும்புமறவெறிந்தாரெனிலடிகள்,
விடுகணைவிற்காமனைநீவென்றதுமோர்வியப்பாமே, இக்கூற்றின்
றிருநாமத்தொருகூற்றுக்கிலக்கென்றா, லக்கூற்றங்குமைத்தனையெ
ன்றிசைப்பதுமோரற்புதமே. இவைநான்கும்ஈரடித்தாழிசைகள்.
எனவாங்கு, தனிச்சொல். உலகுசூற்கொண்டதலைவியுநீயு, மலைப
கவெறிந்தமழவிளங்குழவியை, யமிர்தமூற்றிருக்குங்முதவாய்த்தே
றல், வண்டுகினனைப்பமடித்தலத்திருத்திக், கண்களிற்பருகியக்காம
ருகுழவி, யெழுதாக்கிளவியின்சுவைபழுத்த, மழலைநாறமிர்தம்வா
ய்மடுத்துண்ணச், செஞ்செவிநிறைத்தநும்மஞ்செவிக்கடிகளென்,
புன்மொழிக்கடுக்கொளப்புகட்டின, னின்னருள்விழைகுவாயிறு
ம்பூதுடைத்தே,சுரிதகம்.கலியுறுப்பாறுமயங்கிவந்தமையின் மயங்
கிசைக்கொச்சகம். திருவரங்கக்கலம்பகந்திருவருணைக்கலம்பகமுத
லியவற்றில்வந்தமயங்கிசைக்கொச்சகமுமிவ்வாறே. "காமர்கடும்பு
ன" லென்னுஞ்செய்யுள்கலிவெண்பாவுறுப்பின் வேறுபட்டகொ
ச்சகமன்றிமயங்கிசைக்கொச்சகமன்றென்பதற்குஉரையாளர்காட்
டிய "மணிகிளர்நெடுமுடி" என்னுஞ்செய்யுளேசான்றாகும். இன்
னும்மரபேயியன்றுமென்றதனாலொருபோகுமுதலாவுடையனவற்
றையெல்லாமிதனாற்பெயர்கொடுத்துக்கொச்சகமென்று வழங்கப்ப
டுமென்க. ரு. 'எருத்தியலின்றியிடைநிலைபெற்று,மிடைநிலையின்றி

யெருத்துடைத்தாயு,மெருத்தமிரட்டித்திடைநிலைபெற்று,மிடைய
திரட்டித்தெருத்துடைத்தாயு,மிடையுமெருத்துமிரட்டுறவந்து,மெ
ருத்தமிரட்டித்திடைநிலையாரு, யடக்கியல்காறுமனமந்தவுறுப்பிற்,
கிடக்கைமுறைமையிற் கிழமையதாயுந், தரவொடுதாழிசையம்போ
தரங்க, முடுகியல்போக்கியலென்றிவையெல்லா, முறைதடுமாற
மொழிந்தவையின்றி, யிடையிடைவெண்பாசிலபலசேர்ந்து, மற்
றும்பிறபிறவொப்புறுப்பில்லன, கொச்சகமென்னுங்குறிப்பினவா
கும். என்றார்காக்கைபாடினியார். தரவேதரவிணைதாழிசைசிலபல,
வரன்முறைபிறழவயற்பாமயங்கியுந், தனிச்சொற்பலவாயிடையி
டைநடந்து, மொத்தாழிசைக்கலியுறுப்பினிற்பிறழ, வைத்தமு
றையான்வண்ணகவிறுவாய், மயங்கிவந்தனவு மியங்குநெறிமுறை
மையிற், கொச்சகக்கலியெனக்கூறினர்புலவர். ஓதப்பட்டவுறுப்பு
வகையெல்லா, மேதப்படாமற்கலிக்கியல்பெய்தி, மிக்குங்குறைந்
தும்பிறழ்ந்துமுறழ்ந்தும், வண்ணமுமடியுந்தொடையுமயங்கியு,
மடுக்கியலந்தந் தொடுத்தனபல்கியுங், கலிவயிற்கடிந்தசீரிடைமி
டைந்து, நாற்சீரிறந்தசீரொடுசிவணியு, முச்சீருசீரம்போதரங்க,
மச்சீர்முடிவிடையழிவிலதழுவினுங், கொச்சகக்கலியெனக்கூறவும்
படுமே; கூறியவுறுப்பிற்குறைபாடின்றித், தேறியவிரண்டுந் தேவ
பாணியுந்; தரவேயொழியினுந்தாழிசையொழியினு, மிருவகைமுத்
திறத்தெண்ணேநீங்கினு, மொருபோகென்ப வுணர்ந்திசினோரே"
என்றாராகலின். "தரவின்றாகித்தாழிசைபெற்றுந், தாழிசையின்றி
த்தரவுடைத்தாகியு, மெண்ணிடையிட்டுச்சின்னங்குன்றியு, மடுக்
கியலின்றியடிநிமிர்ந்தொழுகியும், யாப்பினும்பொருளினும்வேற்று
மையுடையது, கொச்சகவொருபோகாகுமென்ப" என்றார்தொல்
காப்பியனார். வ.று. ஆறறியந்தணர்க்கருமறைபலபகர்ந்து, தேறு
நீர்சடைக்கரந்துதிரிபுரந்தீமடுத்துக், கூறாமற்குறித்ததன்மேற்செல்
லுங்கடுங்கூளி, மாறாப்போர்மணிமிடற்றெண்கையாய்கேளினி.
தரவு. படுபறைபலவியம்பப்பல்லுருவம்பெயர்த்துநீ, கொடுகொட்
டியாடுங்காற்கோடுயரகல்குறிக், கொடிபுரைநுசுப்பினாள்கொண்ட

சீர்தருவாளோ, மண்டமர்பலகடந்துமதுகையானீறணிந்து,பண்டரங்கமாடுங்காற்பணையெழிலணைமென்றோள், வண்டரற்றுங்கூந்தலாள்வளர்தூக்குத்தருவாளோ.கொலையுழுவைத்தோலசைஇக்கொன்றைத்தார்சுவற்புரளத், தலையங்கைகொண்டுநீகாபாலமாடுங்கான், முலையணிந்தமுறுவலாண் முற்பாணிதருவாளோ· இவைமூன்றுந்தாழிசை. எனவாங்கு. தனிச்சொல். பாணியுந்தூக்குஞ்சீருமென்றிவை, மாணிழையரிவைகாப்ப, வாணமில்பொருளெமக்கமர்ந்தனையாடி. சுரிதகம். எ.ம். அலையார்ந்தகடலுலகத்தருந்திசைதோறங்கங்கே, நிலையார்ந்தபலபதிகநெறிமனிதர்க்கினிதியற்றி,யீங்கருளியெம்போல்வார்க்கிடர்கெடுத்தல்காரணமா, வோங்குபுகழ்ச்சண்பையெனுமொண்பதியினுதித்தனையே, செஞ்சடைவெண்மதியணிந்தசிவனெந்தைதிருவருளால், வஞ்சியனநுண்ணிடையாண்மலையரையன்மடப்பாவை, நற்கண்ணியளவிறந்தஞானத்தையமிர்தாக்கிப், பொற்கிண்ணத்தருள்புரிந்த போனகமுன்னுகர்ந்தனையே, தோடணிகாதினனென்றுந்தொல்லமரர்க்கெஞ்ஞான்றுந், தேடரியபராபரனைச்செழுமறையினகன்பொருளை, யந்திச்செம்மேனியனையடையாளம்பலசொல்லி, யுந்தைக்குக்காணவரனுவனுமென்றுரைத்தனையே. இவைமூன்றும்நான்கடித்தாழிசை. வளமலிதமிழிசைவடகலைமறைவல, முளரிநன்மலரணிதருதிருமுடியினை. கடல்படுவிடமடைகறைமணிமிடறுடை, யடலிபவுரியனையறிவுடையளவினை, இவையிரண்டும்அராகம். கரும்பினுமிக்கினியபுகழ்க்கண்ணுதல்விண்ணவனடிமேற், பரம்பவிரும்புவியவர்க்குப்பத்திமையைவிளைத்தனையே. பன்மறையோர்செய்தொழிலும்பரமசிவாகமவிதியு, நன்மறையின்விதிமுழுது மொழிவின்றிநவின்றனையே. இவையிரண்டும்இரண்டடித்தாழிசை. அணிதவத்தவர்களுக்கதிகவித்தகனுநீ, தணிமனத்தருளுடைத்தவநெறிக்கமிர்தநீ, யமணரைக்கழுநுதிக்கணைவுறுத்தவனுநீ, தமிழ்நலத்தொகையினிற்றருசுவைப்பனுவனீ. இவைநான்கும்நாற்சீரோரடியம்போதரங்கம். மறையவர்க்கொருவனீமருவலர்க்குருமுநீநிறைகுணத்தொருவனீநிகரிலுத்தமனுநீ.இவைநான்கும்முச்சீரோரடியம்போதரங்கம். அரியைநீயெளியைநீயறவனீதுறவனீ பெரியைநீயுரியைநீபிள்ளைநீவள்ளனீ. இவையெட்டும்இருசீரோரடியம்போதரங்கம். எனவாங்கு. தனிச்சொல். அருந்தமிழ்விரகநிற்பரசுதுந்திருந்திய, நிரை

ச்செழுமாளிகைநிலைதோறு நிலைதொறு,முறைச்சதுர்மறையிேனுேங் கியவொலிசேர்.சீர்கெழுதுழனித்திருமுகம்பொலிவுடைத், தார்கெழுதண்டலைத்தண்பணைதழீஇக், கற்றேருகுபுரிசைக்காழியர்நாத,நற்றேருகுசீர்த்திஞானசம்பந்த, நின்பெருங்கருணையைநீதியி, னன்புடையடியவர்க்கருளுவோயெனவே. சுரிதகம். எ.ம். வருமிவை கொச்சகவொருபோகு. பிறவும்வந்தவழிக்காண்க. (கஉ)

அடிவரை யின்றி யளவொத்து மந்தடி நீண்டிசைப்பிற்
கடிதலில் லாக்கலித் தாழிசை யாகுங் கலித்துறையே
நெடிலடி நான்காய் நிகழ்வது நேரடி யீரிரண்டாய்
விடினது வாகும் விருத்தந் திருத்தகு மெல்லியலே.

இதுகலியினமுணர்த்திற்று.

இ—ள். திருத்தகுமெல்லியலே.—அடிவரைஇன்றி அளவொத்தும் அந்தஅடிநீண்டுஇசைப்பிற் கடிதல்இல்லாக் கலித்தாழிசை ஆகும்—அடிவரையறையில்லாமலளவுபட்டும் படாதும்ஈற்றடிமிக்கு வருவதுகலித்தாழிசையாகும்.கடிதலில்லாவென்றதனுலொருபொருண்மேன்மூன்றடுக்கிவருதல் சிறப்பு. தனித்துவருவதுமிழுக்கா து. சீர்வரையறுமையினெச்சீரானும்வரும். சூ. அடியெனைத்தாகியுமொத்துவந்தளவிற்,கடையடிமிகுவதுகலித்தாழிசையே. என்பதுயாப்பருங்கலம். அந்தடிமிக்குச்சிலபலவாயடி,தந்தமுளொப்பன தாழிசையாகும். என்றுர். வ.று. செல்லார்பொழிற்றில்லைச்சிற்றம்பலத்தெங்கள், பொல்லாமணியைப்புகழ்மினேவம்மின்புலவீர்காள். முத்தேவர்தேவைமுகிலூர்திமுன்னுன, புத்தேளிர்போலப்புகழ்மினேவம்மின்புலவீர்காள். ஆங்கற்பகக்கன்றளித்தருளுந்தில்லைவனப்பூங்கற்பகத்தைப்புகழ்மினேவம்மின்புலவீர்காள். இவையிரண்டடியாயொருபொருண்மேன்மூன்றடுக்கியீற்றடிமிக்ககலித்தாழிசை. இருகூற்றுருவத்திருந்தண்பொழிற்றில்லை, யொருகூற்றின்கூத்தையுணராய்மடநெஞ்சே, யொருகூற்றின்கூத்தையுணராயெனின்மற்றப், பொருகூற்றந்தோற்றப்புலம்பேல்வாழிமடநெஞ்சே. இதுநாலடியாயிடைமடக்காயீற்றடி மிக்ககலித்தாழிசை. காளியாடக்கனலுமிழ்கண்ணுதன், மீளியாடுதெல்பாருமே, மீளியா

டல்வியந்தவடோற்றெனக், கூளிபாடிக்குனிப்பதும்பாருமேபாருமே. இதுநான்கடியாயிரண்டாமடிகுறைந்திடைமடக்காயீற்றடிமிக்ககலித்தாழிசை.—

நெடிலடிநான்காய்நிகழ்வதுகலித்துறை(யாகும்)—ஐஞ்சீரடிநான்காய்நிகழ்வதுகலித்துறையாகும். சூ. நெடிலடிநான்காய்நிகழ்வதுகலித்துறை. என்பதுயாப்பருங்கலம். வ.று. இனியசீறடிக்குமரனிற்சென்திவந்திமையோர், வினைகொள்கம்பலையகற்றுவானிருந்திடும்விமலன், றனதுணர்ச்சியின்றாகியேயவசமாஞ்சயந்தன், கனவின்முக்துறவந்தனனருள்புரிகருத்தால். எனவரும்.—

நேரடியீரிரண்டாய்விடின்அதுகலிவிருத்தம்ஆகும்—நாற்சீரடிநான்காய்வரின்அதுகலிவிருத்தம்ஆகும். "அளவடிநான்கதுகலிவிருத்தம்மே" என்பதுயாப்பருங்கலம். வ.று. ஆறுமாமுகப்பிரானன்றியிவ்விடை, வேறொருதுணையிலைமெய்ம்மையீதெனத், தேறினனவனடிசிந்தைசெய்தனன், மாறிழியருவிநீர்வழியுங்கண்ணினான்.எனவரும்.

இனி "திருந்திலைபவிலங்குவேற்றிகழ்தண்டார்க்கதக்கண்ணன், விரிந்திலங்குமவிர்பைம்பூண்டடமார்பன்வியன்களத்து, முருந்திறைஞ்சுமுத்திற்குமுட்டியெல்லாந்தனித்தனியே, யருந்திறன்மாமறமன்னர்க்கழுவனவும்போன்றனவே. எனவருமின்னோரன்னதரவுக்கொச்சகக்கலிப்பாவைக்கலிவிருத்தமென்னினுமிழுக்காதென்பார்கலிவிருத்தத்தைத்தரவுக்கொச்சகமெனவுந்துணிவர். அவர்தரவுக்கொச்சகக்கலிப்பாவெண்சீர்ப்பயில்வும்வேறுசந்தமுங்கலிவிருத்தம் இயற்சீர்ப்பயில்வும்வேறுசந்தமுமுடைமையை நுணியார்போலும். (கசு)

கூறளடி நான்கின மூன்றொரு தாழிசை கோதில்வஞ்சித்
துறையொரு வாது தனிவரு மாய்விடிற் சிந்தடிநான்
கறைதரு காலை யமுதே விருத்தந் தனிச்சொல்வந்து
மறைதலில் வாரத்தி னுலிறும் வஞ்சிவஞ் சிக்கொடியே.

இதுவஞ்சியினமும் கூறுமுணர்த்திற்று.

இ—ள். அமுதே —குறளடிநான்குஇனம்மூன்றுஒரு(வஞ்சித்) தாழிசை—இருசீரடிநான்காயினம்மூன்றனதே, ஒருவஞ்சித்தாழிசையாகும். வ.று. பிணியென்றுபெயராமே துணிநின்றுதவஞ்செய்வீ, ரணிமன்றலுமைபாகன் மணிமன்றுபணியீரே என்னென்று பெயராமேகன்னின்றுதவஞ்செய்வீர் கன்மன்றலுமைபாகன்பொன்மன்றபணியீரே அரிதென்றுபெயராமே வரைநின்றுதவஞ்செய்வீ ருருமன்றலுமைபாகன் திருமன்றுபணியீரே.எனவரும்.—

குறளடிநான்குஒருவாற்றதனிவரும்ஆய்விடிற்கோதில்வஞ்சித்துறை— இரு சீரடிநான்காயொருபொருண்மேலொன்றாய்வருவதுவஞ்சித்துறையாகும். வ.று. நிம்பகிழற்பாலும்புன்மூகத்தார் செம்பதுமத்தா ணம்புகருத்தே. எனவரும் சூ. "குறளடிநான்மையிற்கோவைமூன்றாய், வருவனவஞ்சித்தாழிசைதனிவரிற், றுறையெனமொழிப துணிந்திசினோரே" என்றார்.—

சிந்துஅடிநான்குவஞ்சிவிருத்தம்—முச்சீரடிநான்காய்வருவதுவஞ்சிவிருத்தம். வ று. ஒன்றினம்பரலோகமே, யொன்றினம்பரலோகமே, சென்றுமேவருந்தில்லையே, சென்றுமேவருந்தில்லையே. எனவரும்.

சிந்தடிநான்காய்வருவனவஞ்சி, யெஞ்சாவிருத்தமென்மனார்புலவர். என்பது யாப்பருங்கலம். அதைதருகாலையென்பதையெங்குங்கூட்டுக.—வஞ்சிக்கொடியே—வஞ்சிதனிச்சொல்வந்துமன்றதலில்வாரத்தினுலிறும்—வஞ்சிப்பாதனிச்சொல்வர ஆசிரியச்சுரிதகத்தால்முடியும். எ.று. தொடர்புவேறுதோன்றமகடூஉமுன்னிலையுமிரண்டாயிற்று. "தூங்கலிசையனவகவன்மற்றவை, யாய்ந்ததனிச்சொலோடகவலினிறுமே" என்பது யாப்பருங்கலம், வ.று. பூந்தாமரைஎன்னுங்குறளடிவஞ்சிப்பாநாளும்என்னுந்தனிச்சொற்பெற்றுஆசிரியச்சுரிதகத்தாலிற்றது. கடித்தாமரைக் கண்ணன்விழிக்கமலந்தர, வடித்தாமரைச் சுடர்ப்பரிதி யளித்தருளினை, யதனாற், புதுமலர்ப்பொழிற்றில்லைவாண, வுதவியின்வரைத்தோவடிகள் கைம்மாறே. இச்சிந்தடிவஞ்சிப்பாஅதனாலென்னுந்தனிச்சொற்பெற்றுஆசிரியச்சுரிதகத்தாலிற்றது. குறளடியான்வருவதுசமனிலைவஞ்சியெனவும் முச்சீரான்வருவது வியனிலைவஞ்சியெனவுங் கொள்க. வஞ்சிக்குஅடிப்பகுப்பேபெயராதலின் மேற்கூறியேனவ

ற்றின்பகுப்புகளைக்கூறியினவமைப்பிலினத்தைச்சொல்லி யெஞ்சி யவிதியையுமுடன்முடித்தார். (கச)

பண்பார் புறநிலை பாங்குடைக் கைக்கிளை வாயுறைவாழ்த்
தொண்பாச்செவியறிவென்றிப் பொருண் மிசையூனமில்லா
வெண்பா முதல்வந் தகவல்பின் னாக விளையுமென்றால்
வண்பான் மொழிமட வாய்மருட் பாவெனும் வையகமே.

இது மருட்பாவையுணர்த்திற்று.

இதனதுபொழிப்பு—புறநிலைவாழ்த்து, கைக்கிளை, வாயுறைவாழ்த்து, செவியறிவுறூஉம் என்னப்பட்ட நான்குபொருளிலும் வெண்பாமுதல்வர ஆசிரியப்பாபின்வருமாறுலதை வையகம்மருட்பாவென்னும். எ. று. வையகத்தின்மேலேற்றினமையினிது பலவருக்குமொத்ததுணிபென்க. சூ. "வெள்ளைமுதலா வாசிரியமிறுதி, கொள்ளத்தொடுப்பது மருட்பாவாகும்"என்றார். "வழிபடுதெய்வ நிற்புறங்காப்பப், பழிதீர்செல்வமொடுவழிவழிசிறந்து, பொலிமினென்னும்புறநிலைவாழ்த்தே" என்றார்தொல்காப்பியனார். காட்சி முதலாக்கலவியினொருதலை, வேட்கையிற்புலம்புதல்கைக்கிளையது தான், கேட்போரில்லாக்கிளவிகள்பெறுமே" என்றார். "வாயுறை வாழ்த்தேவயங்கநாடின், வேம்புங்கடுவும்போலவெஞ்சொற், றாங்குதலின்றிவழிநனிபயக்குமென், றோம்படைக்கிளவியின்வாயுறுத்தன்றே. செவியுறைதானே, பொங்குதலின்றிப்புரையோர்நாப்ப, ணவிதல்கடனெனச்செவியுறுத்தற்றே"என்றார்தொல்காப்பியனார். கைக்கிளைமருட்பாவாய்வரும்வழி ஆசிரியவடியிரண்டேயாய் அவற்றுள் ஈற்றயலடி முச்சீராய்வருமென்றும்வெண்பாவடியும்ஆசிரியவடியும் ஒத்துவருவதுசமனிலைமருட்பாவென்றும் ஒவ்வாதது வியனிலைமருட்பாவென்றுங்கொள்க. புறநிலைவாயுறைசெவியறிவுறூஉவெனத், திறநிலைமூன்றுந்திண்ணிதிற்றெரியின், வெண்பாவியலினுமாசிரியவியலினும், பண்புறமுடியும்பாவினவென்ப.என்றார் தொல்காப்பியனார். வாய் வாய்மொழி. உறைமருந்து. வாயுறையென்பதுசொன்மருந்தெனப்பண்புத்தொகையாம். வாயிற்றோற்றியமருந்தெனவேற்றுமைத்தொகையுமாம். மருந்துபோறலின்மருந்தாயிற்று. ஏனையவும்அதிகவசனமும்வெளி.

வ.று.அரசியல்கோடாதரனடியார்ப்பேணு,முரசியருனைவேன்ம ன்னர், பரசோன், கழலிணைப்பொதுவில்காப்பாக, வழிவழிசிறந் துவாழியோபெரிதே. புறநிலைவாழ்த்துமருட்பா. தாளிரண்டும்பா ரொன்றுந்தார்வாடும்வேர்வாடும், வாளிரண்டுநீள்காதில்வந்திமை க்குங், கோளிரண்டு, மைவகைப்பூதமமைத்தருளரங்கர், மைவளர் சோலைமலையிற், றெய்வமல்லளித்திருவுருவினளே. கைக்கிளைமரு ட்பா.

வம்மினமரங்காண் மன்றுடையான்வார்கழல்கண், டெய்ம்மினுறு திபிறிதில்லை, மெய்ம்மொழிமற், றென்மொழிபிழையாதாகும்,பின் வழிநமக்குப்பெரும்பயன்றருமே. வாயுறைவாழ்த்துமருட்பா.

வாழ்த்துமின்றில்லைநினைமின்மணிமன்றந், தாழ்த்துமின்சென் னிதலைவற்கு, வீழ்த்த, புறநெறியாற்றுதறநெறிபோற்றி, நெறிநி ன்றொழுகுதிர்மன்ற, துறையறிமாந்தர்க்குச்சூழ்கடனிதுவே. செ வியறிவுறூஉமருட்பா.

வேதவாய்மேன்மகனும்வேந்தன்மடமகளு, நீதியாற்சேர்ந்துநிக ழ்ந்தநெடுங்குலம்போ, லாதிசால்பாவுமரசர்வியன்பாவு, மோதிய வாறேதமருட்பாவாயோங்கியதே.

பண்ணுந்திறமும்போற்பாவுமினமுமாய், வண்ணவிகற்பவகை மையாற், பண்ணின், றிறம்விளரிக்கில்லதுபோற்செப்பலகவ, லி சைமருட்குமில்லையினம். இவற்றைத்தேறுக. (கஉ)

## இரண்டாவது செய்யுளியல் முற்றிற்று.

வெண்பா வளம்பட வீரடி யொன்றுட னேரிசையுங்
கண்பானல் போன்மயி லந்தமின் மூன்றுங் கடைதருக்கி
கண்பார் தரவொன் றசைதர வேயடி யோடுகுறள்
பண்பார் புறநிலை செய்யு ளியலென்பர் பாவலரே.

இது செய்யுளியற்சூத்திரமுதனினைப்புக்காரிகை.

## மூன்றாவது
# ஒ ழி பி ய ல்.

சீருந் தளையுஞ் சிதையிற் சிறியஇ உஅளபோ
டாரு மறிவ ரலகு பெருமையை காரணைவே
லோருங் குறிலிய லொற்றள பாய்விடி னேரலகாம்
வாரும் வடமுந் திகழு முகிண்முலை வாணுதலே.

இது எழுத்துகட்கெய்தாததெய்துவிக்கின்றது.

இ—ள். வாரும்வடமுந்திகழுமுகிண்முலைவாணுதலே— சீருந்தளையுஞ்சிதையிற் சிறியஇஉஅளபோடுஅலகுபெருமை ஆரும்அறிவர்—சீருந்தளையுங்கெடிற்குற்றியலிகரமுங்குற்றியலுகரமும் உயிரளபெடையும்அலகுபெருமையையெவருமறிவர். சூ. "தளைசீர்வண்ணந்தாங்கெடவரினே, குறுகியவிகரமுங்குற்றியலுகரமு, மளபெடையாவியுமலகியல்பிலவே" என்பதுயாப்பருங்கலம். பின் ஒற்றளபென்றமையினிதுஉயிரளபென்பதுதெளிவு. வ.று. சிறுநன்றி யின்றிவர்க்கியாஞ் செய்தக்கானளைப், பெறுநன்றிபின்னும் பெரிதென், றுறுநன்றி, தானவாய்ச்செய்வதுந்தானமன்றென்பவே. வானவாமுள்ளத்தவர். இதனுள்இன்றிவர்க்கியாம்என்புழிவெண்பாவினுள் விலக்கப்பட்டகனிச்சீர்வந்தமையிற்குற்றியலிகரத்தை அலகுகொள்ளாக்கால்விதித்தகூவிளங்காயாம். குழலினிதியாழினிதென்பர்தம் மக்கண் மழலைச்சொற் கேளாதவர். இதனுட் குழலினிதியாழினி என்புழிநிரையொன்றாசிரியத்தளையும். அருளல்லதியாதெனிற் கொல்லாமைகோறல்பொருளல்லதவ்வூன்றினல். இதனுள்அருளல்லதியாதெனில் என்புழிக்கலித்தளையும் வந்துபிழைபதலிற்குற்றியகலிகரத்தைக்களையமுறையேவிதித்த இயற்சீர்வெண்டளையும்வெண்சீர்வெண்டளையுமாம்.

குற்றியலுகரத்துக்குக்காட்டிய "கொன்றுகோடுநீடு" என்னுஞ் செய்யுளிடர்ப்பட்டமுடிபாகலானும் பயில்வின்மையானும் இலக்கியம்வேறுவந்துழிக்காண்க.

இனியுயிரளபெடை பல்லுக்குத்தோற்ற பனிமுல்லை பைங்கிளிகள்,சொல்லுக்குத் தோற்றின்னந்தோன்றாவா,னெல்லுக்கு, நூறோஓ

நூறென்பானுடங்கிடைக்குமென்முலைக்கு, மாறேமால்வன்றளந்த மண், இதனுள் நூறேஒநூறென்புழிப்பண்டமாற்றின்கண் அளபெடையநுகரணம் வந்துநாலசையாய்ப்பிழைபடுதலினுயிரளபெடையைக்களையச் சீருந்தளையுஞ் சிதையாவாம்.

இடைநுடங்கவீர்ங்கோதைபின்றுழவாட்கண், புடைபெயரப் போழ்வாய்திறந்து, கடைகடையி, லுப்போஒ வெனவுரைத்துமீள் வாளொளிமுறுவற், கொப்போநீர்வேலியுலகு. இதனுள்உப்போஒ வென்புழிக்கலித்தளைவந்து வெண்பாவழிதலாலுயிரளபெடையைக்களையச்சிதையாது.—

உளமால்கொண்டோடியொழியாதியாமு, முளமாகிலேத்தாவா றுண்டே, யுளமாசற், றங்கமலமில்லாவடல்வெள்ளேறூர்ந்துழலு, மங்கமல வண்ண னடி எ.ம். நாடுதனி லேயுழலு நாயேனை வாவென்று, வீடுதனில்வைக்கவிரும்புவாய், பீடுதரு காட்சியேபோலுநிற்கற்பகமேயாருயிர்க்கோர், சாட்சியேயுன்றன் சரண். எ.ம். வருமிவற்றிற்குற்றியலிகரவுகரங்களலகுபெற்றன.—

ஐகாரம்நைவேற்குறிலிய(லாம்) —ஐகாரங்குறுக்கமாணற்குறின் மாத்திரையாம். சூ. "குறுமையெழுத்தினியல்பேயைகார, நெடுமையினீங்கியக்கால்" என்றார். வ.று. அன்னையையானேவதவமாலணியிழாய், புன்னையையானேவன்புலந்து எ.ம். வெண்மையையவென்றகிளரொளியுண்கணாள், பண்டையளல்லள்பழ. எ.ம். வருவனவற்றிலைகாரக்குறுக்கமொருமாத்திரையாயிற்று.—

ஒற்றுஅளபுஆய்விடின்ஓர்அலகுஆம்—ஒற்றுகள்அளபெழுந்தவிடத்துநேரசையாம். எ.று. சூ. "ஆய்தமுமொற்றுமளபெழநிற்புழி, வேறலகெய்தும்விதியினவாகும்" என்றார் காக்கைபாடினியார். ஆய்தமுமொற்றோடு மொருபுடையொத்துவருதலி னளபெடையினேரலகாதலுங்கொள்க. வ.று. இலங்குவெண்பிறைசூடீசனடியார்க்குக், கலங்குநெஞ்சமிலைக்காண். எ.ம். அங்கணிந்த வருளிட்டத்தார்க்கன்புசெய்து, நங்ங்களங்கறுப்பாநாம். எ.ம். எஃஃகிலங்கியகையராயின்னுயிர், வெஃஃகுவார்க்கில்லைவீடு. எ.ம். வரும்.

இனிஆருமறிவரலகுபெறுமைஎனவேசிலரறிந்தஅலகுபெறுதவெழுத்துளதென்பதுந்தோனிக்கும். அது,மேலனவற்றோடுமாத்திரையொத்தமெய்யென்க. இது "வந்ததுகொண்டுவாராதுரைத்தலாலும்பெறுதும். மெய்யலகுபெறலைமேலுரைத்தாம். வ.று. அடியார்க்கெளியன்சிற்றம்பலவன்கொற்றங், குடியார்க்கெழுதியகைச்சீட்டு

ப்,படியி(ன்)மிசை.எ.ம். பத்த(ர்)களைக், கண்டாற்பணிந்தகலப்போ மின்கள். எ.ம். இருப்பிடமற்றில்லையோவென்னே, பொருப்ப(ன்) மகள். எ.ம். கவ்வைக்கடிபிடிக்குங்காத(ன்)மையால், எ.ம். குமர(ன்)முதுதாதையார்குன்று. எ.ம். ஒளிகொ(ண்)மிடற், றெந்தையராப்பூண்டுழலுமெம்மானையுண்ணினைந்த. எ. ம். சீர்கொ(ள்)கவிவாணர்திரு. எ. ம். சாங்கனிக்காதித்த(ன்)வரத்தான். எ. ம். கொள்ளும்புட்காக்கின்றகோவி(ன்)மையோ நீபிறர். எ ம். வந்த வெண்பாக்களிற்குறித்தஒற்றைவிலக்காதுகொள்ளிற் கனிச்சீராய் வழூஉவளையும். விலக்கில்வெண்சீராம்.

தூதோவியமன்றுணையோவிணையிலி தொல்லை(த்)தில்லை. எ.ம். அயலேபசும்பொற்கொடிநின்றதால்வெள்ளையன்ன(ஞ்) செங்நெல். எ.ம். காயங்கலையகலியந்தகனணை. கால(ஞ்)செய்ய. எ.ம். மின்வண்ணமெவ்வண்ணமவ்வண்ணம்வீழ்சடை. வெள்ளி(க்)குன்றம். எ ம். வந்த கட்டளைக்கலித்துறைகளிற் குறித்தஒற்றைவிலக்காது கொள்ளில் விதியாதபொதுச்சீராம். விலக்கில்விதித்தவெண்சீராம்.

இட்டசீரசையாஞெருமாவி(ன்)கீழ். என்னுங் கட்டளைக்கலிப்பாவிற்குறித்த ஒற்றைக்கொள்ளின் விதியாதவெண்சீராம். விலக்கில் விதித்தகூவிளமாம்.

இனி ஐகாரக்குறுக்கமொழிமுதலிலொன்றரைமாத்திரைபெறுமெனவும் ஔகாரக்குறுக்கமுமவ்வாறுமெனவுமுய்த்துணராக்காலிலக்கியமெல்லாம்வரம்பழியும். சூ. "அளபெடைதனியிரண்டல்வழியையௌ, வுளதாமொன்றரைதனிமையுமாகும்" என்றூர். இதில்அளபெடையெனல்வேண்டாமைக்குத் தனி என்பது சான்றும்.

ஔகாரக்குறுக்கத்தையுடனமைக்கக்கருதிப்போலும் ஒருசாரார் "ஒன்றரையாகுமையௌ" என்றூர். வ.று. வைகலும் வைகல்வரக்கண்டுமஃதுணரார், வைகலும் வைகலை வைகுமென்றின்புறுவா், வைகலும் வைகிற்றம் வாழ்நாண்மேல் வைகுதல், வைகலைவைத்துணராதார். எ.ம். அவ்வித்தழுக்காறுடையானைச்செய்யவ, டௌவையைக்காட்டிவிடும். எ.ம். வரும்இவற்றுள் வைசலும் கூவிளமும்வைகல்தேமாவும்தௌவையை கூவிளமுமாதலினென்றன்ரமாத்திரைகாண்க. (க)

விட்டிசைத் தல்லான் முதற்கட் டனிக்குறி னேரசையென்
றொட்டப் படாததற் குண்ணு னுதாரண மோசைகுன்று
நெட்டள பாய்விடி னேர்நேர் நிரையொடு நேரசையா
மிட்டத்தி னுற்குறில் சேரி னிலக்கிய மேர்சிதைவே.

இது அசைக்கெய்தாததெய்துவிக்கின்றது.

இ—ள். விட்டிசைத்தல்லால் முதல்கண் தனிக்குறில் நேரசை யென்று ஒட்டப்படாது—விட்டிசைத்துநின்றவழியல்லது மொழிமுதற்கண் தனிக்குறில்நேரசையென்றுஉடம்படப்பெறாது. எனவேவிட்டிசையாதவழி தனிக்குறில்குறிலோடுநெடிலோடுங்கூடி நிரையசையாமென்பதாயிற்று.—

அதற்கு உண்ணுன் உதாரணம்(ஆம்)—அதற்குஉண்ணுனெனி திருனேனுங்குபுகழ்செய்யான், றுன்னருங்கேளிர் துயர்களையான் கொன்னே, வழங்கான்பொருள்காத்திருப்பானேல்அஆ, விழந்தானென்றெண்ணப்படும். என்பதுஉதாகரணமாம். ஒட்டப்படாதென்றதனுல் மொழிக்குமூன்றிடத்தும் விட்டிசைத்த குற்றெழுத்து நேரசையாமென்பதூஉம்விட்டிசைப்பதுதான் ஏவல் குறிப்பு தற்சுட்டு வினு சுட்டு என்னுமைந்தன்கண்ணுமென்பதூஉங்குற்றெழுத்துவிட்டிசைத்தவழிமற்றொரெழுத்தினேடுங்கூடி நிரையசையாகாதென்பதூஉம் பெறப்பட்டது. சூ, "ஏவல்குறிப்பேதற்சுட்டல்வழி, யாவையுந்தனிக்குறின் முதலசையாகா" என்றார் மகேச்சுரர். வ. று. அ உ மறியாவறிவிலிடைமகனே, நொஅலையனின்றைட்டைநீ. அ உ என்பதுதற்சுட்டு. நொஎன்பதுசெயவெனெச்சந்திறுதிதொக்கு முதனிலைகுறுகிய ஏவற்குறிப்புச்சொல். அஅவ்னும் இஇவனும் உஉவனுங் கூடியக்கால் எஎவனை வெல்லாரிகல். இவைசுட்டுவினுவாகிய குறிப்புச்சொல், பிறவுமன்ன.

ஓசைகுன்றுநெட்டெளபாய்விடின்நேர்நே(ராம்)–நெட்டளபெடையானுல் அதுஇரண்டுநேரசையாம்.—இட்டத்தினுற்குறில்சேரின்நிரையொடுநேரசையாம்—குற்றெழுத்தோடுபுணர்ந்தநெட்டெழுத்தளபெழுந்தால்நிரைநேராம்.— இலக்கியம்ஏர்சிதைவு(ஆம்)— ஏர்சிதையவழாஅ லெழாஅநின் சேயரி சிந்திய கண் என்பது உதாகரணமாகும். எ.று. ஏர் நேர்நெர் அழாஅல் நிரைநேர், தனிநிலைய

ளபெடை நேர்நேரியற்றே யிறுதிநிலையளபெடைநிரைநேரியற்றே. என்றார்நத்தத்தனர்.

இனித்தனிக்குறில் குறிலோடும்நெடிலோடுங்கூடி முதலில்நிரையாதல்போல இடையிலும் நிகழ்தலானும் "எஒமெய்ப்புள்ளிபெறுமென்ப" என்புழி எகரம்விட்டிசைத்துமுதலில் நேராதல்போல ஒகரமும் விட்டிசைத்து இடையில்நேராய்நிற்றலானும்உலகத்துச் சொல்லெல்லாம்பிரிதுஈரசைச்சீராகவும்மூவசைச்சீராகவும் அருகிநாலசைச்சீராகவுங் கோடலானுஞ் செய்யுளிற்பிரித்துக்காட்டியதும் வாய்பாடும்அவ்வியல்பினவாதலானும் இடையில்நேரசையாயின் ஈரசைச்சீருட்சிலமூவசைச்சீராயும் மூவசைச்சீருட்சிலநாலசைச்சீராயும்என்றுங்காணுவைந்தசையாயுமேறலானுந் "தனிக்குறின்முதலசைமொழிசிதைத்தாகாது" எ.ம். விட்டிசைத்தல்லான் முதற்கட்டனிக்குறினேரசையென்றெட்டப்படாது.எ.ம். முதலுக்கு வெளிப்படையாய்விதியமைந்தாற்போல இடைக்குஉய்த்துணர்கவெனக்குறிப்பாய்க்கூறுக்கூற்றுயமைந்தது.

**குறின்முதனடுவிட்டிசைப்பினேரசையே எனச்சுத்திரிப்பின்மாணவகனிடருருன்.** (௨)

**மா**ஞ்சீர் கலியுட் புகாகலிப் பாவின் விளங்கனிவந்
தாஞ்சீ ரடையா வகவ லகத்துமல் லாதவெல்லாந்
தாஞ்சேர் மயங்குந் தளையுமஃதே வெள்ளைத்தன்மைகுன்றிப்
போஞ்சேர் கனிபுகிற் புல்லா தயற்றளை பூங்கொடியே.

, இது சீருந்தளையுஞ்செய்யுளில்நிற்பதோர்முறையுணர்த்திற்று.

இ—ள். பூங்கொடியே—மாஞ்சீர்கலியுட்புகா—தேமாபுளிமா என்னுஞ்சீரிரண்டுங்கலிப்பாவிற்புகா.—விளங்கனியாஞ்சீர்கலிப்பாவின்வந்துஅடையா—கருவிளங்கனி கூவிளங்கனி ஆகியசீர்களுங் கலிப்பாவிற்சேரா.—அகவலகத்தும்(அடையா)—இச்சீரிரண்டும்ஆசிரியப்பாவிலுஞ்சேரா.—அல்லாதசீரெல்லாம்மயங்கும்—இந்நான்கு சீருமொழிந்தசீரெல்லாம் எல்லாப்பாவினும்பாவினத்தினும்மயங்கும்.—கனிச்சீர்புகில்வெள்ளைத்தன்மை குன்றிப்போம்.—கனிச்சீர்புகுந்தால்வெண்பாத்தன்மையழிந்துபோம்.—அயற்றளைபுல்லாது—

பிறதளையும்புணராது. எ.று. எனவேவெண்பாவில் வெண்சீரும் இயற்சீரும் வெண்சீர்வெண்டளையும் இயற்சீர்வெண்டளையு மல்ல துபிறசீருந்தளையும் புகாவென்பதுதணிபு.

"கலித்தளையடிவயினேரீற்றியற்சீர், நிலைக்குரித்தன்றேதெரியு மோர்க்கே" என்பதுகொண்டுஇவ்வாசிரியர் மாஞ்சீர்கலியுட்புகா வென்றதுகட்டளைநெறிக்கலிக்கென்க.

"கூறுமற்குறித்ததன்மேற் செல்லுங்கடுங்கூளி" என்பதுகொச்ச கவொருபோகாதலின் "விராயதளையுமொரூஉநிலையின்றே" என்ப தனால் மாஞ்சீர்வந்தது.

கங்கைபுனைந்தாய் கறைமிடற்றாய் கண்ணுதலாய். எம். எந்தா யனைத்துலகுமீன்றாயெத்தேவர்க்குந், தந்தாய். எ.ம். கரைக்குழ ல்பிடித்துக் கண்ணில்லான்பெற்றெடுத்தோன், பற்றித்துகிலுரிய. எ.ம். பெரும்பேதைமையேன் பிழைகுறியாதுள்புகுந்த வரும்பேர ருளாலென்னுகங்குளிர்ந்தேனே. எ.ம். வருவனதரவுக்கொச்சகக் கலியாதலிற்"கலிவயிற்கடிந்தசீரிடைமிடைந்தும்"என்றதனால்மாச் சீர்வந்தன.

வண்ணமேனியரும்புவனங்களேவாசம்வாசமரும்புவனங்களே. எ. ம். தொழப்பெறுதந்தவாரணத்தந்தமேதொட்டிறுத்ததும்வார ணத்தந்தமே. எ. ம். வருவனகட்டளைக்கலிப்பாவாதலின் "மாச் சீர்முன்வருநாற்சீரடியே, நேர்முதனிரைமுதனிரனிறையானே, பதினேரெழுத்தும்பன்னீரெழுத்து,மியைந்தரையடியாய்நடந்தவ் விரட்டித், தொத்துநான்கிறுவதுகட்டளைக்கலிப்பா" எ.ம். "இட்ட சீர்வகையானொருமாவின்கீ ழியைமுக்கூவிளநேரடிப்பாதியாய், நெட்டடிக்கெழுத்தெண்ணினதன்மையானிரை பன்னீரெழுத்தா ய்ப்பதினொன்றுநேர், நட்டிரட்டிணவ்வோரடியாகவிந்நடையநான் கடியொப்பநடந்தபாக், கட்டளைக்கலிப்பாவெனவின்றுநற் கலைவ லோருணர்ந்தோதினரென்பவே" எ.ம். "வரும்விதிக்கியைதலின்" மாச்சீர்பெற்றன. ஆசிரியர் தொல்காப்பியனாரமையாதகட்டளைக் கலித்துறைக்கு விதியமைத்தாரமையாமையானும் அதுகிளர்ந்தகா லத்துத்தோன்றாமையானும் இன்றுநற்கலைவலோருணர்ந்தோதின ரென்றமையானும் இக்கட்டளைக்கலிப்பாதோன்றியகாலங் கட்ட ளைக்கலித்துறைக்குச் சாலப்பின்போலும். எவ்வாறாயினுஞ் சிறப் புடைக்கவிகளுளிதுவுமொன்றென்பதைமறுத்தலரிது. இலக்கண மமைத்தார்கருத்துச்சிறிதுபகைக்கினும் மாச்சீர்க்கொள்கையிருவர் க்குமுடன்பாடே,

மாந்சீர்விளங்கனியெய்தாகலியின்வராவிவற்றீற், றஞ்சீரிரண்டுமகவலகத்தும் எனச்சூத்திரிப்பினினிதுபோலும். "இயற்சீர்நேரீற்றுத்தன்றளையடைதல், கலிக்கியல்பிலவேகாணுங்காலை" வஞ்சியுள்ளும்வரத்தகாவாயினு, மோரோவிடத்திலாகுமென்ப" என்றார் பல்காயனார். நிரைநடுவில்லாவஞ்சியுரிச்சீர், கலியினோடகவலிற்கடிவரையிலவே. என்றார்பிறர். கடைச்சீர்புகாவென்பர்வெள்ளையில்" என்றார்புத்தமித்திரனார். (கூ)

இயற்றளை வெள்ளடி வஞ்சியின் பாத மகவலுள்ளான்
மயக்கப் படாவல்ல வஞ்சி மருங்கினெஞ் சாவகவல்
கயற்கணல் லாய்கலிப் பாதமு நண்ணுங் கலியினுள்ளான்
முயக்கப் படுமுதற் காலிரு பாவு முறைமையினே.

இது அடிமயக்கமுணர்த்திற்று.

இ—ள். கயற்கணல்லாய்—இயற்றளை வெள்ளடிவஞ்சியின்பாதம் அகவலுள் மயங்கப்படாஅல்ல—இயற்சீர் வெண்டளையான்வந்தவெண்பாவடியும்வஞ்சியடியும்ஆசிரியப்பாவினுள்மயங்கும். மயக்கப்படுமென்னாதுமயக்கப்படாவல்லவென்றதனால்வெண்சீர் விரவியஇயற்றளை வெள்ளடியுங்கலியடியும் ஆசிரியத்துள் வருதலுங்கொள்க. சூ. "இயற்சீர்வெள்ளடியாசிரியமருங்கி, னிலைக்குரிமரபினிற்கவும்பெறுமே" என்றார்தொல்காப்பியனார். வஞ்சிவிரவலாசிரியமுரித்தே, வெண்பாவிரவினுங்கடிவரையின்றே என்றார்பல்காயனார். வ.று. வேதப்பொருளாய் விளங்கியசங்கரன், பாதத்துணைமனம்பற்றுவோர்,போதத்தொளிர்நலம்பொருந்திவாழ்குவரே. இதனுள்முதலடியியற்றளைவெள்ளடி. மாயிருவிசும்பிற்றாநிலாப்பரப்பிப்,பாயிருள்சீக்கும்பனிமதிக்கண்ணியு, மின்செய்கொண்மூவெள்ளிவீழ்ப்பப், பொன்செய்மலர்ப்பூங்கொன்றையும், இதனுட்பொன்செய்மலர்ப்பூங்கொன்றையும் என்பது வஞ்சியடி. முருந்துநிரைத்ததிருந்துபற் றேன்றுது, தெய்வங்கொள்ளார் திண்மனமென்ன, விரிதருகூழையுந்திருமுடிகூடாது. இதனுள்முதலடிவெண்சீர்விரவியஇயற்றளைவெள்ளடி. குருகுவெண்டாளி கொடுபுயத்துண்டென, மாவழங்குபெருங்காட்டுமழகளிறுகாணுது இதனுள் இரண்டாமடிகலியடி. மயக்கப்படாவல்லவென்பதற்குப் புலவரானமயக்கப்படாவல்லவென்க. முயக்கப்படுமென்பதுமிது.—

வஞ்சிமருங்கின்எஞ்சாஅகவற் (பாதமுங்) கலிப்பாதமும் ஈண்ணும்--வஞ்சிப்பாவில் ஆசிரியவடியுங்கலியடியும் வரும். கலிப்பாதமுமென்னுமும்மையான் வெள்ளடியும் எஞ்சாவென்றமையினிவ்விரண்டும்அருகியெனவும்போதரும். வ.று. வையமீன்றமறைக்கிழவனுங், கொய்துழாய்மவுலிக்குணக்கொண்டலும். என்னும்வஞ்சியிற் சொல்லுவதொன்றிதுசொல்லக்கேண்மதி. எனஅகவலடி வந்தது. பட்டினப்பாலைஎன்னும்வஞ்சிப்பாவில் நேரிழைமகளிருண்கண்கவரும் என்றித்தொடக்கத்தனஅகவலடிபயின்றும் வயலாமைபுழுக்குண்டு வறளடம்பின்மலர்மிலைந்து, எனக்கலியடியுங் கோழியெறிந்த கொடுங்காற்கனங்குழாய் எனவெள்ளடியும் அருகியும்வந்தன.—

கலியினுள்முதற்கால் இருபாவும்முயங்கப்படும்—கலியினுள்வெண்பாவடியும் ஆசிரியவடியும்மயங்கப்படும். எ.று. முறைமையின் வழங்குமரபினென்க. வ.று. "காமர்கடும்புனல் கலந்தெம்மோடாடுவாள்" என்னுங்கொச்சகக்கலியிற்காந்தள்கடிகமழுங் கண்வாங்கிருஞ்சிலம்பின், வாங்கமைமென்றோட்குறவர்மடமகளிர், தாம்பிழையார்கேள்வர்த் தொழுதெழலாற்றம்மையருந், தாம்பிழையாதாந் தொடுத்தகோல். எனவெண்பாவும். வள்ளிகீழ்விழாவரைமிசைத் தோன்றொடா எனஆசிரியமும்வந்தன. இன்னும் ஆலுமறைச் சிரமுடியாரடிக்கமலநிலஞ்சூடக், கூலிகொடுத்தென்வேலைகொள்வாருண்டோவென்றென், றேலமறைத்திருமொழிபோலுரைபசப்பிக்கலுழ்கண்ணீர்,வேலைபிடைப்படிந்தயர்வாள்வீதியிடத்தணைகின்றாள். இதனுள் இரண்டாமடிசிறந்தவெண்பாவாம். சூ. "ஆசிரியப்பாவினயற்பாவடிமயங்கு, மாசிரியம்வெண்பாகலிக்கண்ணு, மாசிரியம், வெண்பாக்கலிவிரவும்வஞ்சிக்கண்வெண்பாவி, னெண்பாவடிவிரவாவுற்று" என்றார். (௪)

அருகிக் கலியொ டகவன் மருங்கினஞ் சீரடியும்
வருதற் குரித்தென்பர் வான்றமிழ் நாவலர் மற்றொருசார்
கருதிற் சடையே கடையிணை பின்கடைக் கூழையுமென்
றிரணத் தொடைக்கு மொழிவ ரிடைப்புண ரென்பதுவே.

இது ஒருசாரடிக்குந்தொடைக்குமெய்தாததெய்துவிக்கின்றது.

இ—ள். கலியோடுஅகவல்மருங்கின் ஐஞ்சீர்அடியும் அருகிவரு தற்கு உரித்துஎன்பர் வான்தமிழ்நாவலர்—கலிப்பாவினும் ஆசிரியப்பாவினும் ஐஞ்சீரடியும்அருகிவர உரித்துஎன்பர்புலவர்.வ.று. நானுரென்னுள்ளமார் ஞானங்களாரென்னையாரறிவார், வானோர் பிரானென்னையாண்டிலனென்மதிமயங்கி, யூனுருடைதலையிலுண் பலிதேரம்பலவன், றேனுர்கமலமேசென்றூதாய்கோத்தும்பீ, இக் கலிப்பாவில்முதலடியைஞ்சீர்வந்தது. செஞ்சுடர்வெள்ளந்திசைதிசைதெவிட்டவரையுறக், கேதக்குட்டங்கையறவோங்கி. இவ்வகவலின்முதலடியைஞ்சீர்வந்தது, முன்வைத்ததனுனும் ஒடுக்கொடுத்துப்பிரித்ததனுனுங்கலியிற்போலகவலிற் சிறப்பன்றென்பதூஉம் அருகியென்றமையினிரண்டினும் பயில்வன்றென்பதூஉம் போந்தது.

இனி "வெண்டளைவிரவியுமாசிரியம்விரவியு, மைஞ்சீரடியுமுள வெனமொழிப" என்னுந்தொல்காப்பியச்சூத்திரத்துக்கு வெண்சீர் விரவியுமாசிரியச்சீர்விரவியுமைஞ்சீரடியுமுளவெனச்செம்பொருள் போதலானும் "அரவணிந்தகொடிவெய்யோனகம்புக்கானரவைய கன்றகற்றியே"எ.ம். "தகைமிகுதொகைவகையறியுஞ்சான்றவரினமாக" எ.ம். வருமிலக்கியம்போலவேறும் வருதலானுஞ் சால நீடியதொல்லைநாளருகல் விதியையுந்தழீஇயபின்னூலாரிதையெடுத்தாளாமையானும் "ஐஞ்சீரடுத்தலுமண்டிலமாகலும், வெண்பா யாப்பிற்குரிய வல்ல" எனநத்தத்தனுர் அடிநூலிற்கூறலானும் இது ஆசிரியரெல்லார்க்குமுடன்பாடாதலானும் இலக்கியங்களுமங்ஙிய திகடவாமையானும் ஐஞ்சீரடி வெண்பாவோடுவிராயும் ஆசிரியப்பாவோடுவிராயுமென்னும் பொருளிற்பயிலுஞ் சிறப்பிற்றுயகலியொழிந்தமையானும் இருபொருளுமமைக்கத்தக்க சொல்லின்மையானும் அருகிக்கலியோடகவல்வெண்பாவினைஞ்சீரடியு மெனமுடியாமையானுங்கலியினுமகவலினும்வருதல்தம்மதமொன்றன்றென்பதும் நெறியென்பதும்பட உரித்தென்பர்வான்றமிழ் நாவலரென்றமையானுங் "கண்டகம்பற்றிக்கடகமணிதுளங்க வொண்செங்குருதியினேடுகிடப்பதேகெண்டிக், கெழுதகையில்லேன்கிடந்தூடப்பன்று, எழுதகண்ணீர்துடைத்தகை" என்னுஞ் செய்யுளை ஆசிரியர்பிறருமெடுத்தாளாமையானும் அதுபோலவேறுசெய்யுள் காணுமையானும் வெண்பாவினுள் ஐஞ்சீரடிவராதென்பதுஅனைவர்க்குங்கருத்து.

வெண்டளைவிரவியும் எ.ம். ஐஞ்சீரடுத்தலும் எ.ம். வந்தசூத்திரங்களொன்றொடொன்று பகைத்தலையுமீண்டைக்கு மேற்கோளாகாமையையும் வெண்மதியிறேரும்விளங்குப.—

கருதிற் கடையே கடையிணை பின் கடைக்கூழையும்என்று இடைப்புணர்வென்பது(என்று)மற்றொருசார் இரணத்தொடைக்குமொழிவர்—கடையென்றுங்கடையிணையென்றும் பின்னென்றுங்கடைக்கூழையென்றும் இடைப்புணர்வென்றும் முரண்டொடைக்குச்சொல்லுவர். எ.று. அவற்றுள் கடைமுரண் அடிதோறும் இறுதிச்சீர்கள் மறுதலைப்படத்தொடுப்பது.

வ.று. கயன்மலைப்பன்னகண்ணிணைகரிதே, நடமுலைத்திவளுந்தனிவடம்வெளிதே, நூலினுண்ணிடைசிறிதே, யாடமைத்தோளிக்கல்குலோபெரிதே. என்பது.

கடையிணைமுரண். கடையிருசீர்க்கண்ணும்மறுதலைப்படத்தொடுப்பது.

வ.று. மீன்றேர்ந்தருந்தியகருங்கால்வெண்குருகு, தேனார்ஞாழல்விரிசினைகுழுஉந், தண்ணந்துறைவன்றவிர்ப்பவுந்தவிரான், றேரோகாணலங்காண்டும், பீரோவண்ணமுஞ்சிறுதுதற்பெரிதே. என்பது.

பின்முரண் இரண்டிலும் நான்கிலுமறுதலைபடத்தொடுப்பது. வ.று. இன்புறும்யோகியெழுபுவிக்கரசே. என்பது.

கடைக்கூழைமுரண். முதலிலின்றியேனைமூன்றிலும்மறுதலைப்பது. வ.று. எரிநிறத்தை மூகத்தெண்டோண் முக்கண் என்பது. இடைப்புணர்முரண் நடுவிருசீர்க்கண்ணும்மறுதலைப்பது. வ.று. வணங்குசிறுமருங்குற்பேரமர்க்கண் மாதர்என்பது. இவ்வாறுகையனார்முதலியசிலஆசிரியர்சொன்னமையில்மற்றொருசாரென்றார். இரணத்தொடைக்குமென்றவும்மையால் ஒழிந்தமோனைஎதுகை இயைபுஅளபெடையாகிய நான்கிற்கும் இவ்வாறேகொள்க. அவை. கடைமோனை. கடையிணைமோனை. பின்மோனை கடைக்கூழைமோனை. இடைப்புணர்மோனை எனவரும். ஏனையவற்றொடும்இவ்வாறொட்டுக. இவற்றுக்குதாகரணம்நீளுதலானும்பெரும்பயனின்மையானுங்காட்டிற்றிலம். வந்துழிக்காண்க. (௯)

வருக்க நெடிலினம் வந்தா லெதுகையு மோனையுமென்
றொருக்கப் பெயரா லுரைக்கப் படுமுயி ராசிடையிட்
டிருக்கு மொருசா ரிரண்டடி மூன்று மெழுத்துமொன்றி
யிரக்கு மெதுகையென் றூலுஞ் சிறப்பில நேரிழையே.

இது ஒருசாரெதுகைக்கும் மோனைக்கும் எய்தாததெய்துவிக்கின்றது.

இ—ள். நேரிழையே—வருக்கம் நெடில் இனம்வந்தால் எதுகையும்மோனையும்என்று ஒருங்கு அப்பெயரான்உரைக்கப்படும்—வருக்கவெழுத்தும் நெடிலெழுத்தும் இனவெழுத்தும் எதுகையும் மோனையுமாய் வந்தால் அவைவருக்கவெதுகை நெடிலெதுகை இனவெதுகை எ. ம். வருக்கமோனை நெடின்மோனை இனமோனை எ.ம். புகலப்படும்.

வ. று. மேடமாமதிதிநவமியீன்கழை, நீடுறுமாலைகற்கடநீதிசே, ரோடைமால்களிறனுதயராசிகா, ணடினேகாதசர்நால்வருச்சரே. இதுடகரவருக்கவெதுகை.

ஆவாவென்றேயஞ்சினராழ்ந்தாரொருசாரார் கூகூவென்றேகூவிளிகொண்டாரொருசாரார், மாமாவென்றேமாய்ந்தனர்நீந்தாரொருசாரா, ரேகேர்நாய்கேரென்செய்துமென்றாரொருசாரார்.

இதுநெடிலெதுகை.

தக்கார்தகவிலரென்பதவரவ, ரெச்சத்தாற்காணப்படும். இது வல்லினவெதுகை. அன்பீனுமார்வமுடைமையதுவீனு, நண்பென்னுநாடாச்சிறப்பு. இதுமெல்லினவெதுகை. எல்லாவிளக்கும்விளக்கல்ல சான்றோர்க்குப் பொய்யாவிளக்கேவிளக்கு. இதுஇடையினவெதுகை.

வாடப்பசித்தவரியுமழைவவாலாட்டி,மேடத்தைப்பார்த்துறக்கும் வேங்கடமே, கூடத்துக், கம்பவளமாவென்றான்காசினிக்குமெண்ணெணய்க்குஞ், செம்பவளமாவென்றான்சேர்பு. இதுஇருசீர்முழுதுமொன்றிவந்தவெதுகையாய்ச் சிறப்பும்பயில்வுமாயிற்று.

பகலேபல்பூங்கானற்கிள்ளையோப்பியும், பாசிலைக்குளவியோடு கூதாளம்விரைஇப், பின்றுப்பிணியவிழ்ந்தநன்னெடுங்கூந்தல், பீர்ஞ்சுபெய்துதேம்படத்திருகிப, புனையிரோதிசெய்குறிநசைஇப்

பூந்தார்மார்பபுனத்துட்டோன்றிப், பெருவரையடுக்கத்தொரு வேலேந்திப், பேயுமறியாமாவழங்குபெருங்காட்டுப், பைங்கணுழு வைப்படுபகைவெரீஇப், பொங்குசினந்தணியாப்பூநுதலொருத்தல் போகாதுவழங்குமாரிருணடுநாள்,பௌவத்தன்னபாயிருணீந்தியிப், பொழுதுவருகுவையாயி, னற்றார்மார்பநீண்டலெங்கதுப்பே. இது பகரவருக்கமோனை.

ஆர்கலியுலகத்துமக்கட்கெல்லா, மோதலிற்சிறந்தன்றொழுக்கமு டைமை. இதுநெடிலொப்புமையால் நெடின்மோனை. கயலேருண் கண் சஉழுநாளுஞ், சுடர்புரைதிருநுதல்பசலைபூப்பத், திருந்திழை யமைத்தோளரும்படருழப்பப், போகல்வாழியையபூத்த, கொழு ங்கொடியணிமலர்தயங்கப், பெருந்தண்வாடைவரூஉம்பொழுதே. இதுவல்லினமோனை. மெல்லினமோனையும்இடையினமோனையும் வந்தவழிக்காண்க. சூ. வருக்கநெடிலினம்வரையாராண்டே, நெ டியபிறவுமினத்தினுமாகும். என்றார்.

ஒருக்கப்பெயரானென்றுசிறப்பித்ததனால் ஒருசாராசிரியர்தலை யாகெதுகை. இடையாகெதுகை, கடையாகெதுகை எ. ம். தலை யாகுமோனை, இடையாகுமோனை, கடையாகுமோனை எ. ம். வேண்டுவரென்க. சூ. சீர்முழுதொன்றிற்றலையாகெதுகை, யோ ரெழுத்தொன்றினிடைகடைபிறவே. என்றார். இதனால்மோனைக் கும்இவ்வாறுவிரித்துக்கொள்க.

வ. று. படைமலிந்தமழுவாளுமானுந்தோன்றும் பன்னிரண்டு கண்ணுடையபிள்ளைதோன்று, நடைமலிந்தவிடையோடு கொடியு ந்தோன்று நான்மறையினொலிதோன்றுநயனந்தோன்று, முடை மலிந்தகோவணமுங் கீளுந்தோன்று மூரல்வெண்சிரமாலையுலாவி த்தோன்றும், புடைமலிந்தபூதத்தின் பொலிவுதோன்றும் பொ ழிறிகழும் பூவணத்தெம்புனிதனார்க்கே.
இதுதலையாகெதுகை.

அகரமுதலவெழுத்தெல்லாமாதி, பகவன்முதற்றேயுலகு. இது இடையாகெதுகை. தக்கார்தகவிலரென்பதவரவ, ரெச்சத்தாற்கா ணப்படும். இதுகடையாகெதுகை. பற்றுகபற்றற்றான்பற்றினைய ப்பற்றைப், பற்றுகபற்றுவிடற்கு. இதுதலையாகுமோனை. மாவும் புள்ளும் இடையாகுமோனை. பகலேபல்பூங்கானல். கடையாகு மோனை.

ஒருசார்உயி(ரெதுகை)ஆசு(எதுகை)இடையிட்டிருக்கும்(எதுகை) இரண்டடி(யெதுகை) மூன்றும் எழுத்தும்ஒன்றிநிரக்கும் எதுகை யென்றுஞ்சிறப்பில—உயிரெதுகை ஆசெதுகை இடையிட்டெ துகை இரண்டடியெதுகை மூன்றுமெழுத்தொன்றெதுகை யென் றொருசாரெதுகையுமுளவாயினுஞ்சிறப்பில. எ.று.

வ. று. துளியொடுமயங்கிய தூங்கிருணடுநா, ளணிகிளர்தாரோ யருஞ்சுரநீந்தி, வடிவமையெஃகம்வலன்வயினேந்தித், தனியேவ ருதிநீயெனின், மையிருங்கூந்தலுய்தலோவரிதே. இது இரண்டா மெழுத்தின்மேலேறியவுயிரொன்றினமையினுயிரெதுகை.

ய் ர் ல் ழ் நான்கும் ஆசாய்வருவது ஆசெதுகை. சூ. "யரலழ வென்னுமீரிரண்டொற்றும், வரன்முறைபிறழாதுவந்திடையுயிர்ப் பினஃ, தாசிடையெதுகையென்றறைதல்வேண்டும்" என்றாரா கலின்.

வ.று. பூத்தாரும்பொய்கைப்புனலிதுவேயெனக்கருதிப், பேய் த்தேர்முகக்குறும்பேதைகுணமாகாமே, தீர்த்தாய்திகழ்தில்லையம்ப லத்தேதிருநடஞ்செய், கூத்தாவுன்சேவடிகூடும்வண்ணந்தோன்று க்கம். இது. ய் ர் இடைவந்தஆசெதுகை. ஆவேறுருவினவாயினு மாபயந்த, பால்வேறுருவினவல்லவாம். இது.ல். இடைவந்தஆசெ துகை.

அந்தரத்துள்ளேயகங்கைபுறங்கையா, மந்தரமேபோலுமனைவா ழ்க்கை, யந்தரத்து, வாழ்கின்றேமென்றுமகிழன்மின்வாளுளும், போகின்றபூளையேபோன்று. இது. ழ். இடைவந்த ஆசெதுகை.

தோடாரெல்வளைநெகிழநாளு, நெய்தலுண்கண்பைதலுழப்ப,வா டாவவ்வரிபுதைஇப்பசலையும், வைகறுறும்பையப்பெருகி, நீடா ரிவரெனநீண்மனங்கொண்டார், கேளார்கொல்லோகாதலர்தோழி, வாடாப்பௌவநன்முகந்தெழிலி, பருவம்பொய்யாதுவலநேர்பு வளைஇ, யோடாமலையன்வேலிற், கடிதுமின்னுமிக்கார்மழைக்குர லே. இது இடையிட்டெதுகை. தாஅவண்ணமென்பதுமிது.

துவைக்குந்துளிமுந்நீர்க்கொற்கைமகளி, ரவைப்பதம்பல்லிற்க ழகொவ்வாமுத்த,மணங்கமழ்தாரச்சுதன்மண்காக்கும்வேலி,னண ங்கும்முதழுமந்நலார்பாடல். இது இரண்டடியெதுகை. சூ. இர

ண்டடியெதுகைதிரண்டொருங்கியன்றபின், முரண்டவெதுகையிரண்டிலவரையார். என்றார். மோனைக்குமவ்வாறொட்டுக.

வ. று. பேரவாவொடுமொசுணம்பேரவே, பேரவாவொடுமொசுணம்பேரவே, யாரவாரத்திஞேடுமெருவியே, யாரவாரத்திஞேடுமெருவியே. இதுஇரண்டடிமோனை.

பொய்ம்மையும்வாய்மையிடத்தபுரைதீர்ந்த, நன்மைபயக்குமெனின். இதுமூன்றாமெழுத்தொன்றெதுகை. இதற்கு.

பவ[illegible]ம்பொன்னுங்குலைஇயமுத்தின், நிகழும்பீன்றனபுன்னை. [illegible] உதாகரணங்காட்டுபவர், "கம்பவளமாவென்றான்கா[illegible]ளிக்[illegible]வெண்ணெய்க்குஞ், செம்பவளமாவென்றான்சேப்பு" எனவும். பவளமால்வரையில், திவளமாதுடனின்றாடிய, தவளமாமருப்பொல்லு, கவளமாகளிற்றின்திருமுகம். எ[illegible]ம். க[illegible]தகளி பவ[illegible]க்[illegible] [illegible]வளுமணிமருங்குல். தவளமதி. எ[illegible]ம். பவ[illegible] [illegible] [illegible]றுமெய்யாய் வழக்குநிலைக் காணேர்போலும்.

[illegible]தொகையென்றமையின் விட்டிசைவல்லொற்றெதுகையென்றும் விட்டிசைமோனையென்[illegible] வேண்டுவொருமுளரென்க. [illegible] பற்றிப்பலாவும்பான்மறியுள்ளுமை, கொஅலேயனின்றுட்டைடீ. இது இரண்டாமடிவல்லொற்றடுத்தாற்போல விட்டிசை[illegible]த்தொடுபுணர்ந்தமையால் விட்டிசைவல்லொற்றெதுகை. அஅ[illegible]னும் இஇவனும் உஉவனுங்கூடியக்கால் எஎவனைவெல்லாரிகல். இதுஇரண்டடிக்கண்ணும் முதலெழுத்துவிட்டிசைத்தமையால் விட்டிசைமோனை. இன்னும் ஒருக்கப்பெயராளுரைக்கப்படுமென்றமையிற் பாவினங்களெல்லாத்தொடையாளும் வரு[illegible]ராயினும் பெரும்பான்மையுந்தலையாகுமோனை தலையாகெ[illegible] இடையாகெதுகையிற்றிரிந்துவராவென்பதூஉஞ் செந்தொடையொழிந்த எல்லாத்தொடைக்கும் இனவெழுத்துவரத்தொடுப்பதூஉம் வழியெதுகைவரத்தொடுப்பதூஉம் வழிமுரண்வரத்தொடுப்பதூஉஞ் சிறப்புடைத்தென்க.

இனவெழுத்துப்பெற்று மோனைமுதலாகிய தொடையுந்தொடையிற்பழும்போலாது வேறுபடத் தொடுப்பது மருட்சேர்தொடை.

வ. று. ஈத்துவக்குமின்பமறியார்கொருமுடைமை, வைத்திழக்கும்வன்கணவர் எ.ம். அமிழ்தினுமாற்றவினிதேதம்மக்கள், சிறுகையளாவியகூழ். எ. ம். வருவனஇனவெழுத்துப்பெற்றுவந்தமருட்செந்தொடை.

இனவெழுத்தாமாறு. தானமொத்தகுறிலும்நெடிலுந்தம்முளினமாம். இளம். அநு. மோனை. ஒருபொருட்சொல். வெண்பா. அகரமோடாகாரமைகாரமௌவா, மிகரமோடீகாரமெஏ, யுகரமோ, டூகாரமொடொளவுவதச் , மாகாதவல்லவறு, என்றார்.

வ.று. அ ஆ ஐ ஔ இனமாம். இ ஈ எ ஏ ய யா இனமாம். உ ஊ ஒ ஓ யு யூ யோ இனமாம். க கா கை கௌ இனமாம். கி கீ கெ கே இனமாம். கு கூ கொ கோ இனமாம். ச சா சை சௌ த தா தை தௌ இனமாம். சி சீ செ சே தி தீ தெ தே இனமாம். சு சூ சொ சோ து தூ தொ தோ இனமாம். ஞ ஞா ந நா நை நௌ இனமாம். ஞி ஞெ நி நீ நெ நே இனமாம். ஞொ நு நூ நொ நோ இனமாம். ப பா பை பௌ இனமாம். பி பீ பெ பே இனமாம். பு பூ பொ போ இனமாம். ம மா மை மௌ வ வா வை வௌ இனமாம். மி மீ மெ மே வி வீ வெ வே இனமாம். மு மூ மொ மோ இனமாம், இவற்றுக்குதாகரணம்விரிதலில் நூல்களுட் காண்க.

இனிவழியெதுகை. கந்தனஞ்செந்திலில் வந்தமர்சுந்தரன் கந்தவம்பா, ரைந்தினன்வெந்திடச் செந்தழலுந்துகணந்தனன்சே, யிந்திரன்வந்தனந்தந்திடமுந்தருளெந்தைமெய்ச்சிந்தச், செந்தமிழ்சுந்தரஞ்சிந்தையில்வெந்துயர்சிந்திடுமே. எனவரும். இவ்வாறு சீர்தோறுமெதுகைபட வருதல்சிறப்புடைமையினிதனைப்பதியற்றினும், பிறழ்ந்துவருதலையுங்கொள்வர். அநுப்பிராசமென்னும் வடமொழியை வழியெதுகையென்பது தமிழ்வழக்கு.

வழிமுரண். காலையிலுமாலையிலுங் கைகூப்பிக்காரெழுதார்; மேலவினையனைத்துங்கீழாவாங், கோலக், கருமான்றேல்வெண்ணீற்றுச் செம்மேனிப்பைந்தாரப், பெருமானைச்சிற்றம்பலத்து. எனவரும். மோனையெதுகையிற்றிரியாதபாவுமிலைதுஞ் சிறப்புடைமையெய்நூல்களிற்காண்க. (௯)

சுருங்கிற்று மூன்றடி யேனைத் தரவிரு மூன்றடியே
தரங்கக்கும் வண்ணகக் குந்தர வாவது தாழிசைப்பா
சுருங்கிற் றிரண்டடி யோக்க மிரட்டி சுரும்பிமிருந்
தரங்கக் குழலாய் சுருங்குந் தரவினிற் றாழிசையே.

இது தரவுதாழிசைகட்கு அடிவரையறையுணர்த்திற்று.

இ—ள் சுரும்பிமிருந்தரங்கக்குழலாய்—தரங்கக்கும் வண்ணகக்குந்தரவாவது இருமூன்றடியே—அம்போதரங்கவொத்தாழிசைக் கலிப்பாவுக்கும் வண்ணகவொத்தாழிசைக் கலிப்பாவுக்குந் தரவு ஆறடியே. தேற்றத்தாலிதனிலிழிபுயர்வில்லை.—ஏனைத்தரவுமூன்றடி சுருங்கிற்று—அவையொழிந்ததரவுமூன்றடிசிறுமை. பெருமை வரையறையில்லை. மேற்கலிக்கீரிரண்டடிசிறுமையென்றது தனித்தரவுக்கொச்சகக்கலிப்பாவுக்கும் ஈண்டுமூன்றடிசிறுமையென்றது அதுஒழிந்தகலிப்பாவுக்குமெனக்கருதக்கிடத்தலின் முன்பின்முரணிற்றன்று.—தாழிசைப்பாஇரண்டடிசுருங்கிற்றுஓக்கம்இரட்டி—தாழிசைப்பாஇரண்டடி சிறுமைநான்கடிபெருமை. இடைமூன்றடியானும்வரும்.—தாழிசைதரவினிற்சுருங்கும்—தாழிசையடிதரவடியிற்குறையும். எ.று. தரங்கக்கும்வண்ணகக்குமிருமூன்றடியே என்னும்விதப்பிற் "செங்கணெடுமாலுஞ்சென்றிடந்துங்காண்பரிய, பொங்குமலர்ப்பாதம்பூதலத்தேபோந்தருளி, யெங்கள்பிறப்பறுத்திட்டெந்தரமுமாட்கொண்டு, தெங்குதிரள்சோலைத்தென்னன் பெருந்துறையா, னங்கணனந்தணனாயறைகூவிவீடருளு, மங்கருணைவார்கழலேபாடுதுங்காணம்மானாய்," என்னும்ஆறடித்தரவுக் கொச்சகமமையாமையின்வழீஇயிற்றன்றோவெனின் அன்று. என்னை. அது. சுருங்கிற்றுமூன்றடியென்பதிலுந் "தரவேதானுநாலடியிழிபா, யாறிரண்டுயர்பேறவும்வருமே" என்பதிலுமமைதலின். இலக்கியம்மேற்காண்க. (எ)

பொருளோ டடிமுத னிற்பது கூனது வேபொருந்தி
யிருள்சேர் பிலாவஞ்சி யீற்றினு நிற்கு மினியொழுந்த
மருடீர் விகாரம் வகையுளி வாழ்த்து வசைவனப்புப்
பொருள்கோள் குறிப்பிசை யொப்புங் குறிக்கொள் பொலங்கொடியே.

இது மேலைப்பாக்களுக்கெய்தாததெய்துவிக்கின்றது.

இ—ள். பொலங்கொடியே—பொருளோடுஅடிமுதல்நிற்பதுகூன்—பொருளோடுவிடாது செய்யுளடியில் முதல்நிற்பதுகூன்.—அதுவே இருள்சேர்பிலாவஞ்சியீற்றினும் பொருந்திநிற்கும்—அக்கூனேவஞ்சியீற்றினும்பொருளோடுபொருந்திநிற்கும். உம்மையால்நடுவினும்வரும். இருள்சேர்பிலாவஞ்சியென்றதினால்வஞ்சிஅடியின்நடுவும் இறுதியும்அசைகூனய்வருவதுசிறப்புடைத்து. சீர்கூனய்வரினும் உகரவிறுதியாகியநேரீற்றியற்சீராயல்லதுவாராதென்க. எனவேவெண்பாஆசிரியங் கலிஎன்னுமிவற்றினிடையுமிறுதியுங்கூன்வரப்பெருதென்க. என்னை. "அடிமுதற்பொருள்பெறவருவது தனிச்சொலதே, இறுதியும்வஞ்சியுளியலுமென்ப." என்றமையின். கொச்சககலியுள் ஓரடிமுழுதுங்கூனய்வரப்பெறும். அவைசிறப்பிலவென்க.

வ.று. உதுக்காண், சுரந்தானுவண்கைச்சுவர்ணமாப்பூதன், பரந்தானுப்பல்புகழைப்பாடி, யிரந்தார்மாட், டின்மையகல்வதுபோலவிருணீங்க, மின்னுமளிதேர்மழை, இவ்வெண்பாவில்அடிமுதலில் உதுக்காணெனக்கூன்வந்தவாறு.

சடையே, நீரகந்ததும்பிநெருப்புக்கலிக்குமே
மிடறே, நஞ்சகந்துவன்றியமிர்துபலிக்குமே
வடிவே, முளியெரிகவைஇத்தளிர்தயங்கும்மே
யடியே, மடங்கன்மதஞ்சிறிமலர்பழிக்கும்மே. யஃதான், றினையவென்றறிகிலம்யாமேமுனைதவத், தலைமூன்றுவகுத்ததனித்தாட், கொலையூன்றுகுடுமிநெடுவேலோயே.
இவ்வகவலிலடிமுதலிற்கூன்கள்வந்தன.
உலகினுட், பெருந்தகையார் பெருந்தகைமைபிறழாவேபிறழினு, மிருந்தகையவிறுவரைமேலெரிபோலச்சுடர்விடுமே, சிறுதகையார் சிறுதகைமைசிறப்பெனினும்பிறழ்வின்றி, யுறுதகைமையுலகினுக்கோரொப்பாகித்தோன்றுவே. இக்கலிப்பாவுள்அடிமுதலில்உலகினுள்எனக்கூன்வந்தது.

உலகு, முற்கொடுத்தார்பிற்கொளவும், பிற்கொடுத்தார்முற்கொளவு, முறுதிவழியொழுகுமென்ப, வதனு, னற்றிறநாடுந்தன்மை,

ப்ற்றயாவையும்பரிவறத்துறந்தே. இவ்வஞ்சியில்அடிமுதலில்உலகுஎனக்கூன்வந்தது. மாவழங்கலின்மயங்குற்றனவழி இவ்வஞ்சியில்இறுதியில் வழிஎனக்கூன்வந்தது.

கலங்கழாலித்துறைக்கலக்குற்றன. இவ்வஞ்சியில்நடுவில் துறை எனக்கூன்வந்தது.

தேரோடத்துகள்கெழுமினதெருவு. இவ்வஞ்சியிறுதியில் தெருவு எனஉகரவிறுதியாகியஇயற்சீர்கூனாயது. இவற்றுள். உலகு தெருவு. தொல்காப்பியனார்க்குநிரைபசையாதலின் "அசைகூனாகுமவ்வயினான." என்னும் அவர்சூத்திரத்தோடுபகையாது.

காமர்கடும்புனல்கலந்தெம்மோடாடுவாள் என்னுங்கொச்சகத்திற் சிறுகுடியீரே சிறுகுடியீரே எனஅடியாற்கூன்வந்ததும், பூமன்னு திசைமுகனும்புயல்வண்ணப்பண்ணவனுங், காமன்னுபுரந்தரனுங்கடவுளரும்புடைநெருங்க"என்னுமம்போதரங்கவொத்தாழிசைக்கலிப்பாவிற் பேதைமீர்பேதைமீர் எனப்பலசீராற்கூன்வந்ததும் வயைரறையின்றிச்சீர்கூனாதலென்றமையினிழுக்காது.—

இனிஒழிந்தமருள்தீர்விகாரம்வகையுளிவாழ்த்துவசைவனப்புபொருள்கோள்குறிப்பிசை ஒப்புங்குறிக்கொள்—மேலதிகரித்தகாரிகையுள்ஓதப்படாதயாப்புறுப்பாயவிகாரமும் வகையுளியும்வாழ்த்தும் வசையும்வனப்பும் பொருளும்பொருள்கோளுங் குறிப்பிசையுஞ் செய்யுளொப்புமையுமாமிவற்றைக்குறித்துக்கொள். எ. று.

இவற்றுள்வகையுளிஎன்பதுமுன்னும்பின்னும்அசைமுதலாகியஉறுப்புகள்நிற்புழியறிந்துவழூஉப்படாமல்வண்ணமறுத்தலென்க.என்னை. அருணேக்குநீராரசைசீரடிக்கட்., பொருணேக்காதோசையேநோக்கி,மருணீக்கிக்,கூம்பவுங்கூம்பாதலரவுங்கொண்டியற்றல், வாய்ந்தவகையுளியின்மாண்பு.என்றமையின். வ. று. மலர்மிசையேகினான்மாணடிசேர்ந்தார் நிலமிசைநீடுவாழ்வார். இதனைச்சொன்னின்றபடி நீடு வாழ்வார் எனக்கொள்ளின்மாறுபடுதலின் நீடுவாழ் எனக்கூவிளமாகவும், வார்எனநாளாகவுங்கொள்ளின்மாறுபடாது. மருவாநெறியளிக்கும்வாதவூரெங்கோன், திருவாசகமென்னுந்தேன். இதில்,திருவாசகம்என்னுந்தேன்.எனக்கொள்ளின்வழுவும். திருவாஎனப்புளிமாவாகவும் சகமென்னுஞ் எனப்புளிமாங்காயாகவுங்கொள்ளின்வழுவாது. குருவளர்பூங்குமிழ்கோங்கு பைங்காந்தள்கொண்டோங்குதெய்வ இதனைக்கோங்கு பைங்காந்தள்

கொண்டோங்கு தெய்வ. எனக்கொள்ளின்வழுவும்.கோங்குபைங் எனக்கூவிளமாகவும், காந்தள்கொண் எனத்தேமாங்காயாகவும் டோங்குதெய்வ எனக்கூவிளங்காயாகவுங் கொள்ளின்வழுவாது. பிறவுமன்ன.

வாழ்த்து. மெய்வாழ்த்தும் இருபுறவாழ்த்துமென இரண்டாம். வ.று. கார்நறுநீலங்கடிக்கயத்துவைகலு, நீர்நிலைநின்றபயன்கொலோ, கூர்நுனைவேல், வண்டிருக்கநக்கதார்வாமான் வழுதியார், சொண்டிருக்கப்பெற்றகுணம். இதுமெய்வாழ்த்து.

பண்டுமொருகாற்றன்பைந்தொடியைக்கோட்பட்டு, வெங்கடம் வில்லேற்றிக்கொண்டுழந்தான், றென்களந்தைப். பூமாண்டிரும களுக்கின்னும்புலம்புமால், வாமான்றேர்வையையார்கோ. இது இருபுறவாழ்த்து.

வசையும்மெய்வசையும்இருபுறவசையுமெனவிர டாம். வ.று. தந்தையிலைச்சுமடன்முய்தொழிலிதான்பார்ப்பா, னைந்தைக்கிதெங்ஙனம்பட்டதுகொன், முந்தை, யவியுணவினோர்தெரியி னுவதாங் கொல்லோ, கவிகண்ணனார்தம்பிறப்பு, இது மெய்வசை.

படையொடுபோகாது நின்றெறிந்தானென்று, கொடையொ டெல்லார்கட் டாழ்ந்தான், படையொடு, பாடிவழங்குந்தெருவெல்லாந்தான்சென்று, கோடிவழங்குமகன். இதுஇருபுறவசை.

இனி வனப்பு. அம்மை அழகு தொன்மை தோல் விருந்து இயைபு புலன் இழைபு எனஎட்டாம். என்னை. "அம்மையழகுதொன்மைதோல்விருந், தியைபுபுலனிழைபெனவனப்பெட்டே." என்றாராகலின். அவற்றுள்

அம்மை. சிலவாயமெல்லியசொற்களா லொள்ளியவாயபொருண்மேற் சிலஅடியாற் சொல்லியதாம். சூ. சின்மென்மொழியாற் சீர்புனைந்தியாப்பி, னம்மைதானேயடிநிமிர்வின்றே. என்றா. இது ஆகமம் இலக்கணங்குறள்முதலியவாம்.

அழகு. செய்யுட்சொல்லாகியதிரிசொற்களானேசையினியவாகப்புணர்க்கப்பட்டதாம். சூ. செய்யுண்மொழியாற்சீர்புனைந்தியாப்பி, னவ்வகைதானே யழகெனமொழிப, என்றார். இலக்கியம்பலவற்றையுங்காண்க.

தொன்மை. பழையதாகிநிகழ்ந்தபெற்றியுரைக்கப்படுவதாம்.
சூ. தொன்மைதானே, யுரையொடுபுணர்ந்தபழமைமேற்றே.
என்றார். ஸகாந்தம் இராமாயணம் மகாபாரதம்முதலிய.

தோல். இழுமெனுமொழியால்விழுமியவாய்க்கிடப்பனவும்எல்லாச் சொற்களானும் பலவடியாய்க்கிடப்பனவுமென இருதிறத்தவாம். சூ. இழுமெனுமொழியால் விழுமிதுநவலினும், பரந்தமொழியா லடிநிமிர்ந்தொழுகினுந், தோலெனமொழிபதொன்னெறிப்புலவர். என்றார். நீதிநூல்களுங்கல்லாடமுதலியவும்.

விருந்து. புதியவற்றின் மேற்றும். சூ. விருந்துதானே, புதிய துபுனைந்தயாப்பின்மேற்றே. என்றார். இப்பொழுதுள்ளாரைப்பா டுவது.

இயைபு. ஞ் ண் ந் ம் ன் ய் ர் ல் வ் ழ் ள் என்னும் பதினொருபுள் ளியு மீறாக வந்த பா...ம். சூ. ஞகரமுதலாளகரவீற்றுப், புள் ளியிறுதியியைபெ...ப. என்றார். வந்தவழிக்காண்க.

புலன். இயற்சொ...ற் பொருடோன்றப்பாடுவதாம். சூ. தெ ரிந்தமொழியாற் செவ்விதிற்கிளர்ந்து, தேர்தல்வேண்டாது குறித் ததுதோன்றிற், புலனெனமொழிப புலனுணர்ந்தோரே. என்றார். கற்கசமற்ற செய்யுளைக்காண்க.

இழைபு. வல்லொற்றியாதுந்தீண்டாது செய்யுளியலுடையார் எழுத்தெண்ணி அடிவகுத்தகுறளடிமுதலாகப்பதினேழ் நிலத்தை ந்தடியு முறையானேயுடைத்தாயோங்கிய சொற்களால்வருவது. சூ. ஒற்றொடுபுணர்ந்தவல் லெழுத்தடக்காது, குறளடிமுதலாவை ந்தடிகாறு, மோங்கியமொழியானுங்கனமொழியி, னிழைபினிலக் கணமியைந்ததாகும். என்றார்.

செய்யுளிய லுடையார் நாற்சீரடியையேநான்கெழுத்து முதலா வாறெழுத்தின்காறும் உயர்ந்தமூன்றடியுங் குறளடியென்றும், ஏ ழெழுத்துமுதலா வொன்பதெழுத்தின்காறும் உயர்ந்தமூன்றடியு ஞ்சிந்தடியென்றும், பத்தெழுத்துமுதலாப் பதினன்கெழுத்தின்கா றும் உயர்ந்த ஐந்தடியும் அளவடியென்றும், பதினைந்தெழுத்துமு தலாப் பதினேழெழுத்தின்காறும் உயர்ந்தமூன்றடியும் நெடிலடி யென்றும், பதினெட்டெழுத்துமுதலா இருபதெழுத்தின்காறும் உயர்ந்தமூன்றடியுங் கழிநெடிலடியென்றும், இருபதெழுத்தின்மி

க்க நாற்சீரடிப்பா இல்லையென்றும் வேண்டுவர். அவ்வெழுத்தெ ண்ணுகின்றுழிக்குற்றியலிகரமுங் குற்றியலுகரமும் ஆய்தமும் ஒ ற்றும் ஒழித்துநின்றஉயிரும் உயிர்மெய்யுங்கூட்டியெண்ணப்படும். என்னை "குற்றிகரங் குற்றுகரமென்றிரண்டுமாய்தமு, மொற்று மெனவெ நான்கொழித்துக், கற்றோ, ருயிருமுயிர்மெய்யுமோதி னார்கொள்ளச், செயிர்தீர்ந்தசெய்யுளடிக்கு" என்றமையின் "ஈரி ரண்டுமோரேழு மீரைந்துமூவைந்தும், பாரியன்றநாற்சீர்பதினெ ட்டு மாரா, விளையும்பதினேழ்நிலத்துக்குறள்சிந், தளவுகழிநெ டிலோடைந்து" என்றார், இன்னுங்குறளிருசீரடி என்னுஞ் சூத் திரவுரைக்கீழ்ச் சூத்திரத்தையுங்காண்க.

வ.று. பாடு பாடு பாடு பாடு, நீடுதுன்புகூடுநெஞ்சே. நொந்து தேவர்வந்துவேண்ட, மூந்துசீர்டைந்தவள்ளல். க்ந்தீரவேலாகங் கைமைந்தா, வெந்தாய்கண்பாரென்பவர்முன்னோ, ஞானநான் கோனகந்தைமாற, வானகமுறுஞ்சிறைவாழ்வாழ்வீந்தோன்,வா னவர்காணுமாமணிவடிவுபுன், கானவர்கண்டுளங்களிகொளமேவி னே, னுருவுடனருவமுருவருவமுமாம், பருவநிலையாயும்பலதிறவ டிவினேன், மறைகிளர்பொறிதிகழ்வரமுறும்பொருளியல்,குறமு னிவனனியுவகைகுலவவழங்கினே னுரையுணர்வுமவிழ்தரவுள படிமன்னிலையொடு, பரமசுகநிலைபிடைபடிபவர்கள் கொளுமுத, லருள்விரியுமுழுமதியமனையவெழிலறுமுகவன், றெருள்விரியமல மெய்ச்சீர்த்திருப்புகழே. எனக்கொள்க. முன்னுரைக்கண்ணது சொற்பொருட்புணர்வு சிறவாமையினிது புதிதியற்றினும்.

குறிப்பிசையாவது எழுத்தல்லோசையான்வந்தமுற்கும் ஈளையு ம் அநுகரணமுமுதலாகவுடையனசெய்யுளகத்துவந்தாலவற்றைச் செய்யுணடையழியாமலசையுஞ்சீரும் அடியுந்தொடையும் பிழை யாமலலகிட்டுவழங்குவது. வ. று. மன்றலங்கொன்றைமலர்மி லைந்துஃகுவஃ, கென்றுதிரியுமிடைமகனே, சென்று, மறியாட் டையுண்ணுமல்வன்கையால்வல்லே, யறியாயோவண்ணுக்குமா று. எனவரும். ஒழிந்தனவும் இடைக்காடர்பாடிய ஊசிமுரியுட்கா ண்க. என்னை. எழுத்தல்லிசையையசைகொடுசேர்தலே. நிறைக்க வும்படுமெனநேர்ந்திசினோரே. என்றமையின்.

ஒப்பு மேற்சீருந்தளையும் அடியும்வரையறுக்கப்பட்ட பாவும்பா

வினமுஞ்சொன்ன பெற்றியிற்றிரிந்து மிக்குங்குறைந்தும் வந்தாலவற்றையொருபுடையொப்புமை நோக்கியொழிந்தசெய்யுளின்பாற்படுத்துவழங்குவது.

வ.று. கோழியுங்கூவினகுக்கில்குரல்காட்டுந், தாழியுணீலத்தடங்கணீர்போதுமிலை, வாழிசூழ்வையத்தெம் மண்ணலடியேத்திக், கூழைநனையக் குடைந்துங்குளிர்புன லூழியுமன்னவாமென்றேலோரெம்பாவாய். இதுஐந்தடியான் வரினுங் கலிவிருத்தமெனக்கொள்வர்.

ஒப்புமென்றவும்மையால் வண்ணமும் புனைந்துரையும் அடிவரையறைப்படாதநூலும் உரையும்பாட்டும் பிசியும் முதுமொழியும் அங்கதமும் மந்திரமுங்,குறிப்பும் பண்ணத்தியும் வாழ்த்துமாமாறுணர்க.

அவற்றுள்வண்ணம் நூறுதிறத்தவாம். அவைவருமாறு;

தூங்கிசைவண்ணம் ஏந்திசைவண்ணம் அடுக்கிசைவண்ணம் பிரிந்திசைவண்ணம் மயங்கிசைவண்ணம் என்னும் ஐந்தையும்முதலில்வைத்து, அகவல்வண்ணம் ஒழுங்கிசைவண்ணம் வல்லிசைவண்ணம் மெல்லிசைவண்ணம் என்னும் நான்கையுமிடையில் வைத்துக், குறில்வண்ணம் நெடில்வண்ணம் வல்லிசைவண்ணம் மெல்லிசைவண்ணம் இடையிசைவண்ணம் என்னுமைந்தையுங் கடைவைத்துக்கூட்டி யுறழநூறும். என்னை. கலித்துறை. தூங்கேந்தடுக்கல் பிரிதன்மயங்கிசை சொற்றவற்றைப், பாங்கேயகவலொழுகல் வலிமெலிப்பாற்படுத்தி, யோங்கீகர்குறினெடில் வல்லினமெல்லினமோடிடையைத், தாங்காதுறழ்தரத் தாம்வண்ண நூறுதலைப்படுமே. என்றமையின். வ.று. குறிலகவற்றூங்கிசைவண்ணம். நெடிலகவற்றூங்கிசைவண்ணம். வலியகவற்றூங்கிசைவண்ணம். மெலியகவற்றூங்கிசைவண்ணம். இடையகவற்றூங்கிசைவண்ணம். எனவரும். ஏனையவற்றையுமொட்டிக்காண்க. கையனார் அவிநயனார் முதலியோர் நூற்றென்றார்.

வண்ணந்தானே நாலைந்தென்ப. அவைதாம். பாஅவண்ணந் தாஅவண்ணம், வல்லிசைவண்ணமெல்லிசைவண்ண, மியைபுவண்ண மளபெடைவண்ண, நெடுஞ்சீர்வண்ணங்குறுஞ்சீர்வண்ணஞ், சித்திரவண்ணநலிபுவண்ண, மகப்பாட்டுவண்ணம்புறப்பா

ட்டுவண்ண, மொழுகுவண்ணமொரூஉவண்ண, மெண்ணுவண்ணமகைப்புவண்ணந், தூங்கல்வண்ணமேந்தல்வண்ண, முருட்டு வண்ணமுடுகுவண்ணமென், ருங்கவையென்ப வறிந்திசினோரே. என்றமையின். அவற்றுட், பாஅவண்ணஞ், சொற்சீர்த்தாகிநூற் பாற்பயிலும். தாஅவண்ண, மிடையிட்டுவந்தவெதுகைத்தாகும். வல்லிசைவண்ணம்வல்லெழுத் துமிகுமே. மெல்லிசைவண்ணமெல்லெழுத்துமிகுமே. இயைபுவண்ணமிடையெழுத்துமிகுமே. அளபெடைவண்ணமளபெடைபயிலும், நெடுஞ்சீர்வண்ணநெட்டெழுத்துப்பயிலும். குறுஞ்சீர்வண்ணங்குற்றெழுத்துப்பயிலும். சித்திரவண்ண, நெடியவுங்குறியவுமொத்துடன்வருமே. நலிபுவண்ணமாய்தம்பயிலும். அகப்பாட்டுவண்ண, முடியாத்தன்மையான்முடித்தன்மேற்றே. புறப்பாட்டுவண்ண, முடிந்ததுபோன்றுமுடியாதாகும். ஒழுகுவண்ணமோசையினொழுகும். ஒரூஉவண்ணமொரீஇத்தொடுக்கும். எண்ணுவண்ணமெண்ணுப்பயிலும். அகைப்புவண்ணமறுத்தறுத்தொழுகும். தூங்கல்வண்ணம்வஞ்சிப்பயிலும். ஏந்தல்வண்ணஞ், சொல்லியசொல்லிற்சொல்லிபதுசிறக்கும். உருட்டுவண்ணமராகந்தொடுக்கும். முடுகுவண்ண, மடியிறந்தோடியதனோரற்றே. இவற்றைத்தொல்காப்பியத்திலுரையுதாகரணங்களோடுகாண்க.

புணர்ந்துரையைஅணியிற்காண்க.

ரு. செயிர்தீர்செய்யுடெரியுங்காலை, ய்டியினீட்டத்தழகுபெற்றியலு, மோரடியானுமொரோவிடத்தியலும். அவைதாம், பாட்டுநூலேமந்திரம்பிசியே, முதுசொல்லங்கதம்வாழ்த்தொடுபிறவு, மாகுமென்பவறிந்திசினோரே, என்றமையின்அவற்றைத் தொல்காப்பியமுதலியவற்றில் விரியக்காண்க. அவற்றுட்குறிப்பாலது. "குட்டத்தலைபர்செவ்வாயிற்கொம்பெழுந்தார்கையி, லடக்கியமூக்கினராம்" எனவரும்இதுகுஞ்சரமென்னும்பொருள்தருவது. ஆதலினிதற்கும்மேற்கிளந்த குறிப்பிசைக்கும் வேறுபாடுபெரிதென்க. "எழுத்தொடுஞ்சொல்லொடும் புணராதாகிப், பொருட்புறத்தது வேகுறிப்புமொழியென்ப" என்றார் தொல்காப்பியனார்.

விகாரமும்பொருள்கோளும் ஈண்டைக்குரியவென்பதுபடவெடுத்தும் ஆசிரியர்பலர் மேலைபதிகாரத்துட்கூறிய நுதமக்கும் உடன்பாடென்பது போதரவிரியாமையின் அவற்றையாண்டைக்காண்க.

பொருளையுமுன்னதிகாரத்துட்காண்க.

பொருள்கோள் விற்பூட்டு கொண்டுகூட்டு விதலையாப்பு பாசி
நீக்கம்ஒருசிறைநிலைஎனஇறையனுர்பொருளில்ஐந்தென்ருர். (அ)

எழுத்துப்பதின்மூன் றிரண்டசைசீர்முப்ப தேழ்தளையைந்
திழுக்கி லடிதொடை நாற்பத்து மூன்றைந்து பாவினமுன
ரெழுக்கியவண்ணங்களு ரொன்பதுபொருள்கோளொன்பது
வழுக்கில் விகாரம் வனப்பெட் டியாப்புள் வகுத்தனவே.

இது இந்நூலுள் வகுத்தபொருளெல்லாந் தொகுத்துணர்த்தி
ற்று.

இதனதுகருத்து. எழுத்து கங. அசை உ. சீர் ௩0. தளை எ. அடி
ரு. தொடை சகங. பொருள்கோள் கூ. விகாரம் கூ. வனப்பு அ.
இவையாப்புள் வகுத்தனவாம். வழுக்கில் விகாரமென்றதனுலெ
ழுத்துமுதலிய ஐந்தன்குற்றமும் ஆனந்தக்குற்றமும்படாமற் செய்
யுள் புணர்க்கப்படுமென்க. முன்னையவைந்தும்அவ்வவ்விலக்கண
த்தாலறிக.

ஆனந்தக்குற்றமாவது எழுத்துமுதலியதிரிதல். என்னை. சு.எழு
த்துநிலைதிரிந்தவெழுத்தானந்தமுஞ், சொன்னிலைதிரிந்தசொல்லா
னந்தமும், பொருணிலைதிரிந்தபொருளானந்தமும், யாப்புநிலைதி
ரிந்தயாப்பானந்தமு, மணிநிலைதிரிந்தவணியானந்தமு, நடைபெறு
புலவர் நாட்டினரவையே. என்றமையின். அவற்றுள் எழுத்தான
ந்தம்வருமாறு. வெண்பா. ஆதியிழைப்பப்பகல்போமிரவெல்லாந்,
தோழிதுணையாத்துயர்தீரும், வாழி, நறுமாலைதாராய்திரைய
வோஒவென்னுஞ், செறுமாலைசென்றடைந்தபோது. இதனுள் தி
ரையவோஒ என்று இயற்பெயரைச்சார்ந்தளபெழுந்தமையாலெ
ழுத்தானந்தம். என்னை. "இயற்பெயர்சார்த்தியெழுத்தளபெழி
னே, யியற்பாடில்லாவெழுத்தானந்தம்" என்றமையின்.

சொல்லானந்தம் வருமாறு. வெண்பா. என்னிற்பொலிந்ததி
வண்முகமென்றெண்ணித், தன்னிற்குறைபடுப்பான்றண்மதிய,
மின்னி, விரிந்திலங்கும்வெண்குடைச்செங்கோல்விசய,னெரிந்தில
ங்குவேலினெழும். இதனுள் தலைமகன்மேலெரிந்ததென்னுஞ்சொ
ற்புணர்ந்தமையாற் சொல்லானந்தம். என்னை. இயற்பெயர்மருங்

கின் மங்கலமொழியத், தொழிற்சொற்புணர்ப்பின்து சொல்லான ந்தம். என்றமையின்.

வெண்பா. இந்திரனேபோலுமிளஞ்சாத்தன்சாத்தற்கு, மந்தர மேபோன்றிலங்குமல்லாக, மந்தரத்திற், குழருவிபோன்றுளது தார்மாலையம்மாலே, யேழுலகுநாறுமிணர். இதனுட்சாத்தனென்னுங்கீழ்மகனே அரசரையுவமித்தாற்போலவுவமித்தமையாலிறப்பவுயர்ந்தவானந்தவுவமை.

வெண்பா. வள்ளெயிற்றுப்பேழ்வாய்ஞமலிக்குமான்குழா,மெள்ளியிரிந்தாற்போலெவ்வழியும், வள்ளற்கு, மாலார்கடலன்ன மண்பரந்தவாட்டானே, மேலாருமேலார்விரைந்து. இதனுட்புலியிஞேடுவமிக்கப்படுகின்ற தலைமகனாகியவீரனோடு நாயையுவமித்தமையாலிறப்பவிழிந்தவானந்தவுவமை. என்னே. "இறப்ப்வுயர்ந்ததுமிறப்பவிழிந்தது, மறத்தகைவழீஇயவானந்தவுவமை" என்றமையின்.

அலங்காரக்குற்றமாவது. வெண்பா. வெண்டிங்கள்போன்றிலங்கும்வெண்சங்குசங்கனேய, வண்டிலங்குதாழைவளர்தோடு, விண்டெங்குங், கள்ளாவிநாறுங்கருங்கழிசூழ்கானகத்தெம்,மூள்ளாவிவாட்டுமுரு. இதனுள் வெண்டிங்கள்போலுஞ் சங்குசங்குபோலுந் தாழைப்பூவென உவமைக்குவமை சொன்னமையாலடுத்துவரலுவமையென்னுமலங்காரக்குற்றம். என்னே. "உவமைக்குவமையில்லெனமொழிப" என்றமையின். ஆன்றோர்வாக்குகளெல்லாங் குற்றமொன்றுமின்றி நிகழ்தலையாங்காங்குக்காண்க.

## மூன்றவது ஒழிபியல் முற்றிற்று.

சீரோடு விட்டிசை மாஞ்சீ ரியற்றளை சேர்ந்தருகி
வார்டார் கொங்கை வருக்கஞ் சுருங்கிற்று வான்பொருளுஞ்
சீரிய தூங்கேந் தடுக்குச் சிறந்த வெழுத்துமன்றே
யாரு மொழிபியற் பாட்டின் முதனினேப் பாவனவே.

இது ஒழிபியற்சூத்திர முதனினேப்புக்காரிகை.

காரிகை மூலமும் உரையும்

முற்றிற்று.

## இனிமேற்பிரசரிக்கப்படுபவை.

நன்னூல்விருத்தியுரை
நேமிநாதவுரை
சிதம்பரப்பாட்டியல்உரை
வெண்பாப்பாட்டியல்உரை
தண்டியலங்காரவுரை
தஞ்சைவாணன்கோவையுரை
சேதுபுராணவுரை
கதிர்காமவெண்பா
திருவேரகயமகவந்தாதி
கோணேசர் இரட்டைமணிமாலை
விசுவநாதசுவாமிபதிகம்
விசுவநாதசுவாமி ஊஞ்சல்
திருக்கோணமலை முத்துக்குமாரசுவாமி பதிகம்
ஷை ஊஞ்சல்
வில்லூன்றிக்கந்தசுவாமி மும்மணிமாலை
பெருமாள்பதிகம்
மண்டூர் முத்துக்குமாரசுவாமி இரட்டைமணிமாலை
ஷை பதிகம்
கண்டிச்செல்வவிநாயகர் பதிகம்
ஷை கதிரேசன்பதிகம்

## மோனையியல்.

"முன்னைத்தஞ்சிற்றின் முழங்குகடலோத மூழ்கிப்போக,வன்னைக்குரைப்பலறிவாய்கடலேயென்றலறிப்பேருந், தன்மைமடவார் தணந்துகுத்தவெண்முத்தந் தயங்குகானற், புன்னையரும்பென்னப் போவாரைப்பேதுறுக்கும் புகாரேயெம்மூர்" என்றதிற்போல மோனைதொடுத்தலை யின்பமெனவைதருப்பரும் இத்துணை சுருங்கத்தொடுத்ததின்றுதென்று "துனைவருநீர்துடைப்பவராய்த் துவள்கின்றேன் றுணைவிழிசேர்துயிலைநீக்கி, யினவவளைபோலிளநலஞ்சோர்ந்திடருழப்ப விகந்தவர்நாட்டில்லைபோலுந், தனியவர்கடளர்வெய்தத்தடங்கமலத் தளையவிழ்க்குந் தருணவேனிற், பனிமதுவின்பசுந்தாதுபைம்பொழிலிற் பரப்பிவரும்பருவத்தென்றல்" என்றதிற் போலத்தொடுத்தலை யின்பமெனக் கௌடருங்கூறுமாற்றையும் யார்க்குங்களிபயத்தலிற் பொருளினுஞ் சொல்லே தலையதென்பதையுஞ் சொல்லினும் மோனையேதலையதென்பதையுஞ் "சொல்லினும் பொருளினுஞ் சுவைபடலின்பம்"என்னும் அணிச்சூத்திரந்தேற்றும். அற்றால் மோனைச்செறிவுச்செய்யுளே சிறந்ததென்பதையுஞ் சீரேறமோனையுமேறல் சிறந்ததென்பதையும் மறுப்பாரிலர். அங்ஙனமாகவும் மோனைசெறியிற்பொருளமைந்து நூல்கள்முற்றுவெனக்கருதி ஆசிரியர்பலரும் வைதருப்பரிலுங்குறைப்பாராயினர். குறைப்பினும்எச்சீரின்மோனைநிற்பினொருவாறின்பமாமென விஞயமாணக்கர்க்கு இனிதுணர்வுதிப்பஇம்மோனையியலெழுந்தது. எதுகையும் அதனோடியைபுடைமையின்முன்னேறியது.

அடியும் வருக்கமுஞ் சான்ற வெதுகையி லாமினமு
நெடிலுங் கவியில் வருமநு மோனை நிலவுமள
வடிகள் பெருகப் பொழிப்பெய்தும் வெள்ளையி னந்தவடிக்
கடையுறுஞ் சீரநு வின்னவெல் லாமிக் கணக்கினவே.

இதனதுபொழிப்பு. இளைஞர்களே! செய்யுளின் அடிவெதுகையும் வருக்கவெதுகையும் மாட்சிமைப்பட்டன. இனவெதுகையுமாகும். நெடிலெதுகையும்வரும். வைத்தமரபானும்முடிக்குஞ் சொற்களானும் இவற்றின்சிறப்புஞ் சிறப்பின்மையும்விளங்கும். கவியில் என்பது முன்னும்பின்னும்புணரும்.

அநுஎனப்படும்மோனைநிலவும். ஏனைமோனையோடு பிரித்துவவியுறுத்த அநுஇணைக்கப்பட்டது. அநுமோனை பண்புத்தொ

கை. இதின்சிறப்பையும் பயில்வையும் நிலவும் என்பது விளக்கும். இதில்,

நாற்சீரடிப்பாக்கள் பெருக முதற்சீரின்முதலெழுத்துக்கிசைய மூன்றாஞ்சீரின் மோனையைக்கொள்ளும். கூழைமோனை மேற்கதுவாய்மோனை முற்றுமோனை மிகச்சிறப்பினும் பெருவரவின வன்மையிற்கூறப்பட்டில. அடிகளென்பது செய்யுள்மேலவாகலின் ஆகுபெயர்.

வெண்பாவிலீற்றடியிலீற்றுச்சீர்மோனைபெறும். இத்திறத்தவெல்லாமிக்கணக்கின. என்றதுஏனைமுச்சீரடிகளை. செய்யுளடி செய்யுளியலில்விளங்கும். எ. று. (௧)

தேறு மிசைக்கட் டளைக்கலிப் பாவினிற் செம்மைபெறு
மாறில் கலித்துறைப் பாலினி லைந்தில் வயங்குமின
மாறெனுஞ் சீரின் விருத்தத்து நான்கி லடைந்திடுமேழ்
வீறுமெட் டொன்பது பத்தைந்தின் முன்பின் விரவிடுமே.

இ—பு. கட்டளைக்கலிப்பாவிலும் விருத்தக்கலித்துறையென்றும்வழங்குங் காப்பியக்கலித்துறையிலுங் கட்டளைக்கலித்துறையிலும் ஐந்தாஞ்சீரில்மோனை விளங்கும். ஏனைச்சீர்களில்வரலினும் இதில்வரல்சிறப்பென்பதை வயங்கும் என்பதுதெரிக்கும்.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தத்தில் நான்காஞ்சீரில் மோனை அடையும். எழுசீரெண்சீர் ஒன்பதின்சீர் பதின்சீர் விருத்தங்களில் ஐந்தாஞ்சீரினும் முற்பிற்சீரினும் மோனைவிரவும். அகலக்கவியினிருதலின் விறுமென்றுஞ் சேரறமோனையும்மறல் சிறப்பென்பதை வலியுறுத்த முன்பினென்றும் அதுவுமஃமயாதென்பதுபட விரவிடுமென்றும் அங்ஙனம் விரவாதொழியினும் விதப்பில்வரலொருதலையென்பது தோன்றவைந்திலென்றுங் கூறப்பட்டது. எ. று. (௨)

பன்னிரு சீரிலைந் தேழுபத் தொன்றிற் படுமினமேழ்
முன்னிரை பெண்மை கொண்டுங்கொளார்கண் மைபெருந்திடுவ
பன்னுமொன் றாய்கனி யாறி லிராறில்வெண் பாவியற்சீர்
மன்னு மிருமொன் றிருன்சேழு பத்தில் வருமினமே.

மூன்றினி லாறிலொன் பானி லிராறின் முறைதருங்காய்
தோன்று மவற்றின்முன் னெட்டியற் சீர்கடோகும்வஞ்சித்

சான்றவர் நூல்களிற் பன்முறை யாய்ந்து தவாதுணர்மி னென்றிடு மோனை யியலை வினைய விளைஞர்களே.

இவையிரண்டுமொருதொடர்.

இ-பு.பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தத்தில் ஒன்றில் ஐந்தாம்ஏழாம்பதினொராஞ்சீர்களில் மோனைபயிலும். பயிலுமெனவேபெருவரவுஞ்சிறப்புமமையும். ஏழாஞ்சீரின்முதலில் நிரைமென்மையைக்கொள்ளினும் நிரைவன்மையைக்கொள்ளார். உம்மையாற்சிலமென்மையைக் கொள்வாரென்பதூஉங் கொள்பவைதாம்ம் ன் என்பதூஉம் அவையும்மாத்திரை குறையுமென்பதூஉந் தோற்றும். இதையும் வன்மையைக்கொள்ளின் முற்சீரீற்றசையோடுபிளவுபட்டுச் சந்தமழிதலையுஞ்செவிகருவியாகவுணர்க.

ஆறிலும்பன்னிரண்டிலுங் காயுங்கனியுமுந்துவன. எனவே அவைவெண்சீரும்வஞ்சிச்சீருமாம்.

வெண்சீரும்இயற்சீரும்நிலைக்கும். விதவாமையானும் மன்னுமென்றதனானும் இவையொழிந்தபத்திலும் வருமென்க. தானே தனித்துவருந்தரத்ததென்பதூஉம்"இருசிறகெழூப்பவெழுமுடலதுபோற்" கடையும்முதலும் அதனலெழும்புவனவென்பதூஉம் அவையுந்தனித்தாவதுகூடியாவது நிகழ்வனவன்றென்பதூஉம் புட்முன்னும்பின்னும்வெண்சீர்புணர்க்கப்பட்டது. இதுவும்மேலதும் பயில்வுஞ்சிறப்புமுடைமையிற்பிறவிலக்கணமும்வேண்டின. இதற்குஇலக்கியமாக "ஆழாழ்கரையின்றி" என்னுஞ்செய்யுளையும்பிள்ளைத்தமிழ் சதகம் பதிகஞ்சீட்டுக்கவி முதலியவற்றையுங்காண்க.சீட்டுக்கவி."சீட்டுக்கவிதனைச் செப்புமிலக்கணந், தெய்வவணக்கமுந் தேசிகவணக்கமுந்,தன்பெரும்புகழ்ச்சியுந் தலைவன்புகழ்ச்சியு,மெய்தவாசிரியவிருத்தத்தியம்பலே" என்றவிதியோடுபடுதலின்அவர் ஆசிரியவிருத்தமென்றது இச்சந்தமெனப்போதந்தது. இருபத்துநான்கு முதலாயிதிமேலறச் சீர்பெய்துபாடுதல் தொடர்புடைச்செய்யுளிற்சிறவாது. இப்பன்னிருசீரிலின்னுமொருசந்தத்தில் நான்காம் ஏழாம் பத்தாஞ் சீரில் மோனைவரும்.

மூன்றும்ஆறும்ஒன்பதாம்பன்னிரண்டாஞ்சீர்களிற்காய்வரும். அவ்வெண்சீர்களுக்குமுன் ஆசிரியச்சீரெட்டுக்கூடும். இதற்குஇலக்கியமாக"அரும்புன்றைசத்தடங்காவே"என்னுஞ்செய்யுளையுஞ்சமுத்திரவிலாசமுதலியவற்றையுங்காண்க. இது பிள்ளைத்தமிழிற்சிறுபான்மைவரும். தனிப்பாடலிற்சிறவாது.

ஈண்டுரைத்தவற்றைச் சான்றோர்நூல்களில் நீர்ஆய்ந்துணர்மின். எ. று. (ங). (ச)

மோனையியல் முற்றிற்று.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ச | உக | றடுத்துவரினும் | றடுத்தும்வரின் |
| கஉ | அ | நியைீ | நிரையீ |
| கங | க0 | நூறிய | றூறிய |
| கரு | உஎ | ஞெரைகயாய் | ஞெரைகயாகி |
| உக | உசு | சான்ருதா | சான்ருத |
| உரு | கரு | வில்லே | வில்லே |
| உஎ | உஎ | பணிமொ, | பணிமொழி, |
| உஅ | கஎ | திருமாதின் | திருமாது |
| ங0 | அ | லர், மனைவயிற் | லர்மனைவயிற், |
| ஙங | உரு | சூடகைக் | சூடகக் |
| ஙஎ | கக | யுமாசிரியத்தளையும்வ[illegible] | தள்ளுக |
| சக | உங | மண்டல | மண்டில் |
| சஉ | உசு | றடுக்கிய | றடுக்கிய. |
| சரு | கஎ | தாழிசைக்கலி. | தாழிசைக்கலி |
| சஎ | உ | சுரிககங் | சுரிதகங் |
| சஅ | ங0 | கற்பனை | அதனுற்கற்பனை |
| ரு0 | சு | யானும் | யானுங் |
| ருங | கஅ | யிழந்த | யிகழ்ந்த |
| ருரு | உஉ | யுறுப்பாறு | யுறுப்பு |
| ,, | கஅ | குங்முத | குங்குமுத |
| ருஅ | உஎ | யுணரா | யுணர்வா |
| சு0 | உங | வகவன் | வஞ்சி |
| சுங | ங | லிணைப் | லிணை |
| எ0 | ககூ | தோன் | தேன் |
| ,, | உக | பசப்பி | பரப்பி |
| எக | கச | வெண்சீர் | கலிவெண்சீர் |
| எஉ | க.உ.ங | | தள்ளுக |
| அ0 | கரு | வையரறை | வரையறை |
| அச | கசு | ஒழுங்கிசை | ஒழுகிசை |